HITOPADESAM

(ABRIDGED FOR USE IN SCHOOLS)

இதோபதேசம்

BY

A. KUMARASWAMY PULAVAR

Published by

North-Ceylon Tamil Works Publishing House

CHUNNAKAM

[Copyright] 1949 [Price 75 cts.

821·3
இதோ
SL/PR

இதோபதேசம்

சுன்னுகம் அ. நாகநாதபண்டிதர்

மொழிபெயர்ப்பினின்று

அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்

சுருக்கி இயற்றியது

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
அவர்கள் ... அன்பளிப்பு
திகதி 12/10/04

821.3

35711

ANSARI BOOK SELLERS & PUBLISHERS

சுன்னுகம்

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

1949

முதற் பதிப்பு 1920
இரண்டாம் பதிப்பு 1940
மூன்றாம் பதிப்பு 1949

சன்னாகம்:
திருமகள் அழுத்தகம்

Opinions

M. R Ry. T. Kanakasundaram Pillai Avergal B. A., *Chairman of the Board of Examiners in Tamil, Madras University*—

The Hitopadesam by Mr. A. Kumaraswami Pillai is designed chiefly for the use of students in Secondary Schools and has been abridged from the translation of Mr. Naganatha Pandit, by omitting a large number of unnecessary maxims and some unpalatable tales. It is admirably adapted for the purpose for which it is intended. Unlike that of Mr. Naganathar, the prose of Mr. Kumaraswami Pillai is simple and dignified and has a grace and smoothness of its own which gives marked pleasure to the reader. The book is neatly printed and well got up.

M. R. Ry. S. Anavaratavinayagam Pillai Avergal, M. A., L. T., *Superintendent of Vernacular Studies, Madras Christian College and Chairman, Tamil Board of Studies, Madras University*—

The Hitopadesa by Mr. A. Kumaraswami Pulavar, although professedly an adaptation from Naganatha Pandit's translation published long ago and now out of print, is such an improvement on it that it may well claim to be an independent rendering. This is written in easy flowing elegant prose and has some special features about it that will fit it for use in girls' schools as well as boys' schools. It is such adaptation we need for school reading and not faithful translations which may interest only those who wish with such aids to learn a foreign tongue. I hope Mr. Kumaraswami Pulavar's book will find a ready market and he will be induced thereby to produce some more books of the kind.

முகவுரை

இதோபதேசம் என்பது சமஸ்கிருதபாஷையில் சகல நீதிசாத்திரங்களையும் நன்கு கற்றுப் பண்டிதராய் விளங்கிய விட்டுணுசர்மர் என்னும் வேதியராலே சுதர்சனன் என்னும் அரசனுடைய குமாரருக்கு அரசியலுணருமாறு உபதேசிக்கப்பட்ட நீதிச் சுலோகங்களும் அவற்றிற்கிணங்க கதைகளும் அமைந்துள்ள ஒரு நீதி நூல். நீதிச் சுலோகங்களெல்லாம் மஹாபாரதம், யாகம் முதலிய காவியங்களிலும் மநுஸ்மிருதி, சாணக்கிய சதகம், பர்த்திருகரி சதகம் முதலிய நீதிசாஸ்திரங்களிலுமுள்ளன. கதைகளுள்ளே பல பஞ்சதந்திரத்திலுள்ளன. இதோபதேசம் என்பது இதம் + உபதேசம் என்னும் இரண்டு பதங்களாலாயது. இதம் - நன்மை, தகுதி. உபதேசம் - போதித்தல். பண்டைக்காலந் தொடங்கிச் சமஸ்கிருத பாஷை படிப்பவர் பலராலும் ஆரம்பத்தில் இதுவே படிக்கப்பட்டு வருகின்றது. படிப்பவர்க்கெல்லாம் இனிமை, நன்மை, விநோதம், விருப்பம், விற்பத்தி முதலியவைகளைப் பயக்கும் பண்புடையது.

இது பரதகண்டப் பாஷைகளிலே சிலவற்றிலும், பச்சிமதேச பாஷைகளிலே சிலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. ஆயிரத்துநூறு வருடங்களுக்கு முன்னே பாரசீகபாஷையிலும், பாரசீகபாஷையிலிருந்து கீபுரு, கிரீக்கு முதலிய பாஷைகளிலும், அதன்பின் அங்கிலம் முதலிய பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது என்பர், அங்கில பாஷையிலே மொழிபெயர்த்தவர் அநேகர்.

தமிழ்ப் பாஷையிலே மொழிபெயர்க்கப்படாமை நோக்கி, எமது சுன்னாக வாசரும், நமக்கெல்லாம் உற்றவரும், தமிழ், சமஸ்கிருதம், அங்கிலம், சிங்களம் என்னும் பாஷைகள் நான்கும் கற்றவருமாகிய நாகநாத பண்டிதராலே ஏறக்குறைய முப்பத்துமூன்று வருடங்களுக்கு முன் இது தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டது. யாமும் அம் மொழிபெயர்ப்பைச் சென்ற விய ௵ அச்சிட்டு வெளிப்படுத்தினோம். அப் பிரதிகளெல்லாம் இப்பொழுது விலையாயின. இப்போது இங்குள்ள தமிழ்ப் பண்டிதர் சிலர் இம்மொழிபெயர்ப்பிலே விரவியிருக்கும் வடசொற்களையும், வடமொழிவாக்கிய நடையையும் முற்ற விலக்கிச் சற்றே சுருக்கிப் பாடசாலைக்கு இயையுமாறெழுதி அச்சிடுவது நன்று என்றனர். வேறு சிலர் இதன்கண் வரும் சிற்றின்ப சம்பந்தமான கதைகளையும் மிகையாய் வரும் நீதிவாக்கியங்களையும் விலக்கிச் சுருக்கி அச்சிடுவது நன்று என்றனர். இவர்கள் கூற்றுக்களை யாமும் அநுசரித்து நாகநாதபண்டிதர் மொழிபெயர்ப்பினின்று இதனைச் சுருக்கி எழுதியிருக்கின்றோம்.

சுன்னாகம்
சித்தார்த்தி ௵
தை ௴

அ. குமாரசுவாமிப்பிள்ளை

உள்ளுறை

பக்கம்

வரலாறு 1

மித்திரலாபம்

காகம், ஆமை, மான், எலிகளின் கதை ... 3
புலியும், வழிப்போக்கனும் 4
மான், நரி, காக்கைகளின் கதை 12
பூனைக்கிடங்கொடுத்த கழுகின் கதை ... 12
இரணியகன் கதை 20
பேராசை பிடித்த நரியின் கதை 22

சுகிர்ப்பேதம்

சிங்கம் எருதோடுபூண்ட நட்பை நரி பிரித்த கதை 27
ஆப்பிழுத்த குரங்கின் கதை 30
கழுதையும், நாயும், கள்வனும் 30
எலியும், பூனையும், சிங்கமும் 37
கண்டாகர்ணன் குட்டினி கதை 39
காகம் கிருஷ்ணசர்ப்பத்தைக் கொன்ற கதை 43
முயல் சிங்கத்தைக் கொன்ற கதை 44
சமுத்திர டிட்டிபக் குருவி கதை ... 48

விக்கிரகம்

அன்ன மயூராதிகள் கதை 54
வானரங்களுக்குப் புத்திசொன்ன பறவைகளின் கதை 55
புலித்தோல் போர்த்த கழுதையின் கதை ... 56
யானைகளை வென்ற முயல்களின் கதை ... 58

	பக்கம்
காகத்தோடு கூடி வசித்த அன்னத்தின் கதை ...	61
காகத்தோடு கூடிப்போன காடையின் கதை ...	61
நீல நரியின் கதை	65
வீரவரன் கதை	68
நாவிதன் கதை	70
சந்தி	
அன்னமும், மயிலும்	72
அன்னமும், ஆமையும்	73
மூன்று மீன்களின் கதை	73
கீரியும், கொக்கும்	74
முனிவனும், எலியும்	76
நண்டும், கொக்கும்	77
சராவமுடைத்த பிராமணன் கதை ...	79
சுந்தோபசுந்தர் கதை	80
பிராமணனும், வெள்ளாடும்	83
காகமும், ஒட்டகமும், புலியும், நரியும் ...	84
கிழப்பாம்பும், தவளைகளும்	86
கீரிப்பிள்ளையும், பிராமணனும்	89
அருஞ்சொற்பொருள்	94

இதோபதேசம்

வரலாறு

கங்கையாற்றங் கரையின்கணுள்ள பாடலிபுத்திரம் என்னும் நகரிலே சுதரிசனன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் தன் புத்திரர்கள் கல்வி கல்லாமையை நோக்கிக் கவலைகொண்டு, அவ்விஷயத்தில் நீதிநூல்கள் கூறுவனவற்றை நினைத்துச் சிந்திப்பானாயினான். "கல்வி பயிற்றப்படாத பாலகர்களுக்குப் பிதாவும், மாதாவும் பகைவர். அந்தப் பாலகர்களும் அன்னங்களின் நடுவிற் கொக்குச் சிறப்படையாமைபோல அவைக்களத்திற் சிறப்படையமாட்டார். என் புத்திரரோ கல்வியறிவு சிறிதுமில்லா மூடராய் இருக்கின்றனர். மூடர்க்கும் குருடர்க்கும் பேதமில்லை. மூடரிடம் பெருஞ் செல்வமும் பிரபுத்தன்மையும் பொருந்துமாயின், அவர் அளவின்மிக்க தீங்கு புரிவர். மூடருடைய செல்வம், அழகு முதலியவற்றால் ஒரு பயனுமில்லை. மூடர் நன்கு மதிப்பையும் தரும சுகங்களையும் முத்திச் சுகத்தையும் பெறமாட்டார்; புண்ணிய பாவங்களையும் அறியார்; சூது, கலகம், துயில் முதலிய செயல்களிலே பொழுது போக்குவர்.

"ஆதலால் என் புத்திரர் அறிஞராகும்வண்ணம் கல்வி கற்பித்தல் வேண்டும். கல்விப்பொருளோ எல்லாப் பொருளினும் மிக்கது; கள்வராற் கவரப்படமாட்டாது;

அழிவு செய்யப்படவுமாட்டாது; காணப்படாப் பொருளையெல்லாங் காட்டும்; அடக்கத்தையும் தகுதியையும் தருமத்தையும் கொடுக்கும்; அரசர் மதிப்பையும் அறம் பொருள் இன்பம் வீடுகளையும் பயக்கும்."

அரசன் இவ்வாறு சிந்தித்துப் பண்டிதர் பலரை வருவித்துச் சபை கூட்டி அவர்களை நோக்கிச் சொல்லுவான். "பண்டிதர்களே, என் புத்திரர் இதுவரையுங் கல்வி கல்லாத மூடராய் இருக்கின்றனர். உங்களுள் யாராவது அவர்க்கு நீதிசாத்திரம் கற்பித்து அவரை அறிஞராக்குவீர்களா? பண்டிதர் சகவாசத்தாலும், உபதேசத்தாலும் என் புத்திரர் உயர்வு பெற வேண்டும். பளிங்கானது பொன்னோடு சேர்ந்து மரகதப் பிரபை பெறல்போலவும், புழுவானது பூவொடு சேர்ந்து பொன்முடியேறல் போலவும் மூடரும் பெரியோர் சகவாசத்தாற் சாமர்த்தியமடைந்து தக்கோராகின்றனர்" என்றனன்.

அப்பொழுது அந்தச் சபையிலிருந்த சகல நீதிசாஸ்திர பண்டிதராகிய விட்டுணுசர்மர் என்பவர் எழுந்து அரசனை நோக்கி. "மாணிக்கம் பிறக்குமிடத்திற் பளிங்கும் பிறக்குமா? உத்தம குலத்திற் பிறந்த உம்மிடத்தில் மூட புத்திரர் பிறப்பாரா? நும் புத்திரரை ஆறுமாசத்தில் நீதிசாத்திர பண்டிதராக்குவேன்" என்றார். அரசன் தன் புத்திரரை விட்டுணுசர்மரிடம் ஒப்பித்தனன். விட்டுணுசர்மர் அவர்களை நோக்கி, "நான் உங்களுக்குப் பொழுதுபோக்கின் பொருட்டு அதிசயமான சில கதைகள் சொல்லுகின்றேன்" என்று கதைவாயிலாக அவர்களுக்கு நீதிசாஸ்திரம் உபதேசிப்பாராயினர்.

மித்திரலாபம்

விட்டுணுசர்மர் இராசகுமாரர்களை நோக்கி, "நான் இப்பொழுது மித்திரலாபம், சுகிர்ப்பேதம், விக்கிரகம், சந்தி என நான்கு பாகுபாடுடைய இதோபதேசத்திலே மித்திரலாபம் சொல்லுகிறேன். புத்தியிற் சிறந்த உத்தமர்களை நண்புகொண்டிருப்பவர் தக்க கருவியுந் திரவியமும் இல்லாராயினும் காகமும், ஆமையும், மானும், எலியும் போல விரும்பிய காரியங்களை விரைவில் முடிப்பார்கள்" என்றனர். அக்கதை என்ன என்று இராசகுமாரர்கள் கேட்க விட்டுணுசர்மர் சொல்லுகின்றனர்.

காகம், ஆமை, மான், எலிகளின் கதை

கோதாவிரி யாற்றங்கரையிலே பரந்த கிளைகளையுடைய இலவமரம் ஒன்று நிற்கின்றது. அம்மரத்திலே பறவைகள் பல திக்குகளினின்றும் வந்து இரவில் நித்திரை செய்யும். அவைகளுள்ளே இலகுபதனன் என்னும் பெயருடைய காகம் ஒன்று ஒருநாள் விடியற்காலத்தில் நித்திரைவிட்டெழும்போது இயமன்போன்று வரும் வேடன் ஒருவனைக்கண்டு, "இன்றைக்கு அநிட்ட தெரிசனம் ஒன்று எனக்குச் சம்பவித்திருக்கின்றது. இதனால் எத்தீங்கு விளையுமோ அறியேன்" என்று வியாகுலமுற்றுச் சிந்தனையோடும் பறந்து சென்றது. மூடனுக்குக் கவலுதற்கிடம் ஆயிரக்கணக்கும் அஞ்சுதற்கிடம் நூற்றுக்கணக்குமாக நேரிடுகின்றன; அறிஞனுக்கு அப்படி நேரிடுதலில்லை. அப்போது அந்த வேடன் அரிசிக்குறுணியை நிலத்திலே சிதறி வலையைப் பரப்பிவிட்டு மறைந்துபோய் நின்றான். அப்போது ஆகாயத்திற்

சென்ற புறாக்களுள்ளே சில புறாக்கள் அவ் வரிசிக் குறுணியைக் கண்டு கவர்ந்துண்ண விரும்பினதைப் புறாவரசனாகிய சித்திரக்கிரீவன் நோக்கி, “நண்பர்களே, அவதானமாய் இருங்கள்! சனங்களில்லாத இவ்விடத்திலே இந்த அரிசிக் குறுணி எப்படி வரும்? இதனாலே தீங்கு சம்பவிக்கும் என்று நினைக்கிறேன். புலியிடத்திற் பொற்காப்பு வாங்கப்போய்ப் புலிக்குணவாய் அகப்பட்ட வழிப்போக்கன் விருப்பம்போல இவ்விருப்பமும் கேடு பயக்கும்” என்றது. அஃது எப்படி என்று புறாக்கள் கேட்டன; சித்திரக்கிரீவன் சொல்லுகின்றது:—

புலியும் வழிப்போக்கனும்

“நான் ஒருமுறை தென்காட்டிற் செல்லும்போது ஒரு கிழப்புலியைக் கண்டேன். அப்புலி நீரிலே முழுகிக் கையிலே தருப்பையையும் வைத்துக்கொண்டு ஒரு குளக்கரையிலே இருந்து வழிப்போக்கர்களை நோக்கி, ‘என் கையில் இருக்கும் இந்தப் பொற்காப்பினை யாருக்காவது கொடுக்க விருப்புகிறேன்; எடுத்துக்கொள்க’ என்று சொல்லிற்று. புலிக்குக் கிட்டப்போய் அதனை வாங்குதற்குக் கண்டோர் யாவரும் பயப்பட்டார்கள். அவருள்ளே ஒருவன் பொருளாசையினாலே மயங்கி, ‘இது நல்விதியால் எனக்குக் கிடைக்கின்றது; ஆயினும் இக் காரியத்திற் சந்தேகமிருக்கின்றது. விரோதியினிடத்திலிருந்து வேண்டியது ஒன்றைப் பெற்றாலும் அதனாலே நன்மை வராது. செலவப்பொருளைத் தேடும் முயற்சிகளெல்லாவற்றிலும் தீங்கு சம்பவிக்கின்றது. தீங்கில்லாமல் நன்மையைக் காண்டல் அரிது’ என்று சிந்தித்துப் புலியை நோக்கிப் ‘பொற்காப்பு எங்கே’ என்று கேட்டான். புலி கையை நீட்டி அதனைக் காட்டிற்று. வழிப்போக்கன்,

‘கொலையாளியாகிய உன்னிடத்திலே விசுவாசம் வைப்பது எப்படி?’ என்றான்.

“புலி அவனை நோக்கிச் சொல்லுகின்றது. ‘வழிப்போக்கனே, கேள். நான் இளம்பருவத்திலே தீயொழுக்க முடையவனாய் இருந்தேன். அப்பொழுது பல மிருகங்களையும் மானுடர்களையும் கொன்று தின்றேன். அந்தப் பாவத்தால் பிள்ளைகளையும் இழந்தேன்; மனைவியரையும் இழந்தேன்; வமிசத்தையும் இழந்தேன். பின் ஒரு தரும சீலர் என்னைக் கண்டு ‘தானம், தருமம் முதலியவைகளைச் செய்க’ என்று எனக்கு உபதேசித்தார். அந்த உபதேசத்தைக் கேட்டு நான் இப்பொழுது ஸ்நானசீலனுங் கொடையாளியுமாய் இருக்கின்றேன். நானோ வயோதிகன். என்னுடைய நகங்களும் பற்களும் விழுந்துபோயின. இப்படிப்பட்ட நான் கொலையாளியாவது எப்படி? என்னை நம்புதற்குத் தடை என்ன? நான் யாகம், வேதமோதல், தானம், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, உலோபமின்மை என்னுந் தருமங்கள் எட்டனையும் அறிந்திருக்கிறேன். என்னிடத்திலே உலோபமில்லை. இந்தப் பொற்காப்பைத்தானும் பிறர்க்குக் கொடுக்க விரும்புகின்றேன். ஆயினும் ‘புலி மனிதரைக் கண்டாற் கொன்று புசிக்கும்’ என்ற உலக வார்த்தையைத் தடுத்தல் அரிது. உலகச் சனங்கள் ஆராய்ந்து நடப்பதில்லை. செம்மறியாடு போல ஆராய்வின்றி ஒருவர் சென்ற வழியிலே தாமுஞ் செல்லுவார்கள். நானுந் தருமசாத்திரம் படித்திருக்கின்றேன்; கேள்: ‘குந்திபுத்திரா, வறியவர்களைப் பாதுகாத்துக்கொள்; செல்வர்க்குத் திரவியங்களைக் கொடாதே. நோயாளனுக்கன்றி நோயில்லாதவனுக்கு

மருந்து கொடுத்தலினாற் பயன் யாது?' என்று பாரதஞ் சொல்லுகின்றது. நீயோ மிகவும் வறியவனாயிருக்கின்றாய், இந்தப் பொற்காப்பை உனக்குத்தான் தர விரும்புகின்றேன். இக்குளத்திலே முழுகிவிட்டு வந்து இதனை ஏற்றுக்கொள்' என்றது.

“வழிப்போக்கன் அந்த வார்த்தையை நம்பி முழுகிவரும்படி குளத்தில் இறங்கிப் பெருஞ் சேற்றில் அமிழ்ந்தான். புலி கண்டு, ‘அடடா! பெருஞ்சேற்றில் விழுந்திருக்கின்றாய்! உன்னைத் தூக்கிவிடுகிறேன்’ என்று சொல்லி மெல்லமெல்லக் கிட்டப்போய் அவனைப் பிடித்துக்கொண்டது. அவனும், ‘என் மனவாஞ்சை இப்படி முடிந்ததே’ என்று சிந்திப்பான் :—

“‘தீயவன் தருமசாத்திரம் படித்தலும் வேதமோதலும் நன்னடைக்குக் காரணமாகமாட்டா. தீயவனுடைய இயற்கைக் குணமே எங்கும் முந்துகின்றது. கொல்லுந் தொழிலுடைய இந்தத் துராத்மாவிடத்திலே நம்பிக்கை வைத்தது பெரிய மூடத்தனம். கொம்புடைய மிருகங்களிடத்திலும், நதிகளிடத்திலும், நகங்களுள்ள மிருகங்களிடத்திலும், படைக்கலம் வைத்திருப்பவர்களிடத்திலும், பெண்களிடத்திலும், அரசர்களிடத்திலும் விசுவாசம் வைக்கலாகாது. எல்லாக் குணங்களுள்ளும் இயற்கைக் குணமே மேற்படுகின்றது. இயற்கைக் குணமே ஆராயவேண்டியது. விதியின் வலியை விலக்குதல் முடியாது. ஆகாயத்திற்போகுஞ் சந்திரனை இராகு பிடிக்கவில்லையா?' என்று சிந்திக்கையிற் புலி அவனைக்கொன்று தின்றுவிட்டது. ஆதலால் ஆராய்வில்லாமல் ஒரு காரியமுஞ் செய்யலாகாது. ஆராய்ந்து செய்த காரியம் வெகுகாலஞ் சென்றாலும் வேறுபடமாட்டாது” என்றது.

இதனைப் புறாக்களுள் ஒன்று கேட்டு “இப்படிச் சொல்லுவதென்னை? ஆபத்துகாலததிலேதான் மூத்தோர் வார்த்தை கேட்டல் வேண்டும். எங்கும் இப்படி ஆராயப்புகின் போசனந் தேட முயல்வதுங் கூடாமல் முடியும். அன்னம், பானீயம் முதலிய எல்லாம் தீங்கிற்கு இடனாயிருக்கின்றன. எதன்கண் முயற்சி செய்யலாம்? எப்படிச் சீவிக்கலாம்? பொறாமையுள்ளவன், உலோபமுள்ளவன், மனத்திருத்தியில்லாதவன், கோபமுள்ளவன், நித்திய சந்தேகி, பிறர் பொருளிற் சீவனஞ் செய்பவன் என்னும் அறுவரும் என்றுந் துயருறுவர்” என்றது. இதனைக் கேட்டுப் புறாக்களெல்லாம் அவ்விடத்தில் இறங்கி அரிசிக் குறுணியை உண்டு வலையிற் சிக்கின. சிக்கின புறாக்களெல்லாந் தங்கட்குப் புத்திசொல்லி அரிசிக் குறுணியை உண்ணச் செய்த அப்புறாவையே நிந்தித்தன. ஒரு கூட்டத்திலே தலைவனாக ஒருவன் முன்னே போதல் நன்றன்று. போனகாரியம் வாய்க்குமாயின், பலன் யாவருக்குஞ் சமமாகும். வாயாதாயின், முன்னர்ப்போனவன் நிந்திக்கப்படுவான்.

அலைகள் கூறிய நிந்தை மொழிகளைச் சித்திரக்கிரீவன் கேட்டு “வலையிற் சிக்கினது அந்தப் புறாவினாலே வந்த குற்றம் என்று எண்ண வேண்டாம். கன்று கட்டுதற்குப் பசுவின் காலும் காரணமாதல்போல வரவேண்டிய ஆபத்துக்கு உற்றதுணையாய் இருந்ததும் காரணமாகின்றது. ஆபத்து வந்த வேளைகளிலே அதனை நீக்கிக் காப்பவனே சுற்றத்தவனாவான். ஆபத்து நீக்கிக் காக்க வேண்டிய வேளையிலே தாமதிப்பவன் அறிவாளியல்லன். தைரியம் பூண்டு ஆபத்தை நீக்கும் வழியைத் தேடுதல் வேண்டும், மனந்தளர்தல் வீரர் செயலன்று. ஆபத்திலே

தைரியம், செல்வம் முதலிய பேறுகள் வந்துழிப் பொறுமை, சபையிலே வாக்குவல்லமை, போரில் வீரம், புகழிற் பிரியம், கல்வியிற் பிரியம் என்னும் இவை இயல்பிலே பெரியோர்கள்பால் அமைந்திருக்கின்றன. உயர்வடைய விரும்புபவர் நித்திரை, முயற்சியின்மை, அச்சம், கோபம், தாமதம் என்னும் ஆறு குற்றங்களையும் அகற்றல் வேண்டும். ஆதலால் தாமதமின்றி நாமெல்லாம் ஒரு மனத்தோடு வலையை எடுத்துக் கொண்டு மேலே பறந்துபோதல் வேண்டும். சிறியனவாயினும் பல பொருள்கள் ஒருங்கு சேருமாயின், அவை பெரிய காரியங்களையும் முடிக்கவல்லனவாகும். சிறிய புல்லுகளை ஒன்றாகச் சேர்த்து முறுக்கப்பட்ட கயிற்றினாற் பெரிய மத்தயானைகளும் கட்டப்படுகின்றன" என்றது.

பின்னர்ப் புறாக்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து வலையை எடுத்துக்கொண்டு பறந்துபோயின. அதனை வேடன் நோக்கி, "பறவைகள் தங்குமிடத்திலே என் வலை எனக்குக் கிடைக்கும்" என்று பறவைகளைத் தொடர்ந்து சென்றான். பறவைகளோ கண்ணுக்கெட்டாமற் போயின. வேடன் திரும்பிவந்தான். வேடன் திரும்பினதைப் புறாக்கள் நோக்கி "இப்போது செய்ய வேண்டியது யாது?" என்று வினவச், சித்திரக்கிரீவன் சொல்லுகின்றது: "மாதா, பிதா, மித்திரன் என்னும் மூவருமே காரணமின்றி இயல்பிலே நன்றி செய்பவராய் இருக்கின்றனர். மற்றையவர்களோ யாதேனும் ஒரு காரணம் பற்றியே நன்றி செய்பவராவர். எனக்கு மித்திரனொருவன் கண்டகி ஆற்றங்கரையிலே சித்திரவனத்திலே இருக்கின்றான். அவன் பெயர் இரணியகன்; எலிகளுக்கு அரசன். அவனிடம் போனால்,

அவன் எங்கள் வலையை வெட்டிவிடுவான்" என்று சொல்லி அவைகளை அழைத்துக்கொண்டு போயிற்று.

அபாயம் சம்பவிக்கும் என்னும் அச்சத்தினாலே நூறு துவாரம் வைத்துத தோண்டப்பட்ட புற்றில் இருந்த இரணியகன் புறாக்கள் போயிறங்கியதைக் கண்டு பயந்து மவுனமாய் இருந்தது. அப்படியிருத்தலைச் சித்திரக்கிரீவன் கண்டு 'மித்திரா, எம்மோடு நீ பேசாமல் இருப்பதென்னை?' என்றது. சித்திரக்கிரீவன் குரலினாலே அங்குவந்து தன்னை அழைத்தது தன் மித்திரன் என்றறிந்த இரணியகன் வெளியில் வந்து சித்திரக்கிரீவனைக் கண்டு "ஆகா! நான் புண்ணியஞ் செய்தவன். என் மித்திரன் சித்திரக்கிரீவன் இங்கே வந்திருக்கின்றான். மித்திரனோடு பேசுதலும், மித்திரனோடு கூடியிருத்தலும், மித்திரனோடு சம்பாஷணை செய்தலுமுடையவனே மேலான புண்ணியவான்" என்று, வலையிற் சிக்கியிருக்கும் புறாக்களை நோக்கி அதிசயங்கொண்டு "மித்திரா, இப்படிச் சம்பவித்தது என்ன காரியம்?" என்று கேட்டது. சித்திரக்கிரீவன் சொல்லுகின்றது: "இது முற்பிறப்பிலே நாங்கள் செய்துவைத்த கன்மத்தின் பலன். ஒருவன் செய்த நன்மையுந் தீமையும் விதிவசத்தினாலே அவனை அடைகின்றன. நோய், துயர், இரங்கல், மறியல் என்பவைகளும் ஒருவன் செய்த குற்றத்தினாலேதான் அவனை அடைகின்றன" என்றது.

இரணியகன் இதனைக் கேட்டுச் சித்திரக்கிரீவனுடைய வலையை வெட்டி விடும்படி கிட்டப்போயிற்று. சித்திரக்கிரீவன் தடுத்து "மித்திரா, என்னைச் சார்ந்திருப்பவைகளாகிய இப் பரிவாரங்களின் வலைகளை முன்னர் வெட்டிவிடு. அதன் பின்னர் என் வலையை வெட்ட

லாம்" என்றது. இரணியகன் அதனைக்கேட்டு "என்னுடைய வல்லமையோ சிறிது. என் பற்களும் மெல்லியன. இவைகளின் வலைகளை வெட்டிவிட நான் வல்லவனல்லேன். உன் வலையை மாத்திரம் முன்னர் வெட்டி விடுகின்றேன். அதன் பின் இவற்றின் வலைகளையும் இயன்ற மட்டும் வெட்டி விடுகின்றேன்" என்றது. "இவற்றின் வலைகளைத்தான் முன்னர் வெட்டிவிடவேண்டும்" என்று சித்திரக்கிரீவன் பின்னருஞ் சொல்லிற்று. இரணியகன் சித்திரக்கிரீவனை நோக்கித் "தன்னுயிரைக் கைவிட்டுப் பிறவுயிரைக் காத்தல் நீதிசாத்திர சம்மதமன்று. ஒருவன் ஆபத்தில் உதவும் என்று பொருளைப் பேணல் வேண்டும். பொருளினும் விசேடமாகத் தன்னைப் பேண வேண்டும். பொருள் முதலியன தேடற்குக் காரணமான தன்னுயிரை அழிப்பவன் எப்பொருளையும் அழித்தவனாவன். அதனைக் காப்பவன் எல்லாப் பொருளையுங் காப்பவனாவான்" என்றது. சித்திரக்கிரீவன் அதனைக்கேட்டு "மித்திரா, நீ சொன்னது நீதியேயாயினும் என் பரிவாரங்கள் படுந்துயரை நான் பார்த்திருக்கமாட்டேன். இந்த ஆபத்திலே இவைகளைக் காத்துக்கொள்ள மாட்டாது கைவிடுவேனாயின், இவைகளுக்கு நான் அரசன் என்னும் முதன்மை எனக்கு எப்படி வரும்? இவைகளுடைய உடம்புகளை வலைகளின் பிணிப்புக்களினின்று நீக்கி, என் புகழாகிய உடம்பைப் பரிபாலித்தல் வேண்டும். சற்றும் நிலையில்லாத உடம்பினைப் பேணும் பொருட்டு என்றும் நின்று விளங்குங் கீர்த்தியைக் கெடுத்தல் நன்றன்று" என்றது.

இரணியகன் அதனைக் கேட்டு மனமகிழ்ந்து மயிர் சிலிர்த்து "மித்திரா, நன்று! நன்று! அடைந்தோரைக் காக்கும் அருளினால் மூவுலகுக்கும் நீயே பிரபுவாகின்

றாய்!" எனச் சித்திரக்கிரீவனைப் புகழ்ந்து, வலைகளையெல்லாம் வெட்டிவிட்டு "மித்திரா, வலையிலே அகப்பட்டது குற்றமன்று. இது விதிவலியாற் சம்பவித்தது. விதியின் வலியை ஒருவரும் வெல்லமாட்டார். சந்திர சூரியர் இராகு கேதுக்களாற் பிடிக்கப்படுகின்றனர். பாம்புகளும் யானைகளும் கட்டப்படுகின்றன. அறிஞரும் வறிஞராய் அலைகின்றனர். ஆகாயத்திற் பறக்கும் பறவைகளும் ஆபத்தடைகின்றன. ஆழ்ந்த கடலுள்ளிருக்கும் மீன்களும் பிடிக்கப்படுகின்றன. விதிவலியை வென்றவர் யாவர்?" என்று உபதேசித்து அதிதிசற்காரமுஞ் செய்து அன்பினோடும் அனுப்பிவிடச், சித்திரக்கிரீவன் தனக்கிட்டமான தேசத்துக்குப் போயிற்று. மித்திரர்கள் எந்த நன்மையையுஞ் செய்வார்கள்.

இந்தச் செய்கைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு பக்கத்திலிருந்த இலகுபதனன் என்னும் பெயருடைய அக் காகம் இரணியகன் கிட்டப்போய் "பெருங்கீர்த்தி பெற்றிருக்கின்ற உன்னோடு நானும் நட்புக்கொண்டிருக்க விரும்புகின்றேன். நட்புக் கோடற்குரிய நற்குணமெல்லாம் உன்னிடங் கண்டேன்" என்றது. இரணியகன் வெளியிலே வந்து, "நீ யார்" என்று வினவி அறிந்துகொண்டு நகையாடி, "எனக்கும் உனக்கும் எபபடி நட்புச் சித்திக்கும்? எந்தப்பொருள் எதனோடு சேரவேண்டுமோ அந்தப் பொருள் அதனோடு சேரவேண்டும். நானோ உன் போலிகளால் உண்ணப்படும் பிராணி. நீயோ என்போலிகளை உண்ணும் பிராணி. உண்பவனுக்கும் உணவுக்கும் இடையிலுள்ள நட்புக் கேட்டுக்கே காரணமாகும். நரியின் உபாயத்தால் வலையிலகப்பட்ட மானொன்று காகம் ஒன்றினாற் காக்கப்பட்டது" என்றது. "இக்கதை எப்படி" என்று காகங் கேட்க இரணியகன் சொல்லுகின்றது.

மான், நரி, காக்கைகளின் கதை

"மகதநாட்டிலே சம்பகாவதி என்னுங் காட்டிலே ஒரு மானும் ஒரு காகமும் பெருநண்பு பூண்டு வசித்தன. அந்த மான் தன்னிச்சைப்படி மேய்ந்து உடல் கொழுத்து நிற்றலை ஒரு நரி கண்டு 'இதன் மாமிசத்தை யான் உண்பது எப்படி? இதற்கு என்மேல் விசுவாசம் வரும்படி செய்து பின்னர் யாதும் உபாயத்தாற் பெற்றுண்பேன்' என்றாலோசித்து, அதற்குக் கிட்டப்போய் 'மித்திரா' ஆரோக்கியமா?' என, மான் 'நீ யாவன்?' என்றது. 'நான் க்ஷுத்திரபுத்தி என்னும் நரி. இக்காட்டிலே இனசனமின்றி வசிக்கிறேன். இப்போது மித்திரனாக நின்னை அடைந்து சுற்றமுடையவனாய் வாழவேண்டும்' என்று நரி சொல்லிற்று. மான் 'அப்படி ஆகுக' என்று நரியைக் கூட்டிக்கொண்டு தனது இருக்கைக்குப் போயிற்று. அவை இரண்டையுங் காகம் கண்டு மானை நோக்கி, 'இந்த இரண்டாம் ஆள் யார்' என்று வினவ, 'எங்களுடைய நண்பினை விரும்பிவந்த நரி' என்று மான் சொல்லிற்று 'காரணமின்றி இடையில் வந்தவனோடு நட்புக்கோடல் நன்றன்று. குலம், குணம் முதலியவைகளை விசாரணை செய்யாமல் ஒருவனை நட்புக்கோடலும் நன்றன்று. சரற்கவன் என்னும் பெயருடைய கழுகு விசாரணையின்றி இடையில் வந்த பூனைக்கு இடங்கொடுத்த குற்றங் காரணமாகத் தான் கொலையுண்டது' என்று காகம் சொல்லிற்று. 'இக்கதை எப்படி' என்று நரியும் மானுங் கேட்கக் காகஞ் சொல்லுகின்றது.

பூனைக்கிடங்கொடுத்த கழுகின் கதை

"கங்கையாற்றங்கரையிலே கிருத்திரகூடம் என்னும் மலையிலே நிற்கும் பர்க்கடிமரப் பொந்திலே கண்ணும் நகமுமில்லாத சரற்கவன் என்னும் கழுகு ஒன்று வாசஞ் செய்தது. அங்குள்ள மற்றப் பறவைகளெல்லாம் அதன்மேலிரங்கித் தங்கள் தங்கள் உணவுகளிலிருந்து கொஞ்சங்கொஞ்சம் அதற்குக் கொடுத்துவர, அது சீவனஞ் செய்து வந்தது. ஒருநாள் பறவைக் குஞ்சுகளெல்லாம் தங்கள் எதிரே வந்த தீர்க்ககர்ணன் என்னும் பூனையை நோக்கிப் பயந்து ஆரவாரித்தலைக் கழுகு கேட்டு 'இங்கே வருபவன் யாவன்?' என்றது. பூனை பயந்து 'என்னுயிர் பிழைத்தல் இனி அரிது. கிட்ட நிற்றலால் விலகியோடலும் அரிது. வருவது வரட்டும். இதற்கு என்மேல் நம்பிக்கையுண்டாக்குவேன்' என்றெண்ணிக்கொண்டு கிட்டப்போய்ச் 'சுவாமீ, நமஸ்காரம்' என்றது. கழுகு பூனை என்றறிந்து 'தூரப்போ; இங்கே நில்லாதே; நின்றாயாயிற் கொன்றுவிடுவேன்' என்றது. அதனைப் பூனை கேட்டுக் கழுகை நோக்கி 'என் வார்த்தையைச் சற்றே கேட்கவேண்டும். கேட்டபின் யான் கொல்லப்படவேண்டியவனாகத் தோன்றினால் என்னைக் கொல்லுக' என்றது.

"பின்னர்க் கழுகு சற்றே மனமியைந்து பூனையை நோக்கி வந்த காரணம் யாதென்று வினவப் பூனை சொல்லுகின்றது. 'நான் இந்தக் கங்கையாற்றங்கரையிலே எப்போதுந் தீர்த்தமாடி வருகின்றேன். நான் மாமிசம் ஒருகாலுந் தின்பதில்லை. பிரமசரியம், சாந்திராயணம் முதலிய விரதங்களெல்லாம் அநுட்டித்து வருகின்றேன். உம்முடைய நற்குணங்களையுந் தருமசாத்திரவுணர்ச்சியையும் பறவைகளெல்லாம் பாராட்டிப் பேசக் கேட்டு வயசிலும் அறிவிலும் முதிர்ந்த உம்மிடம் தருமோபதேசங் கேட்டறியும்படி வந்திருக்கின்றேன். தரும ஞானியாகிய நீர் அதிதியாகிய என்னைக் கொல்லலா

20-11-50

காது. இல்வாழ்வானுடைய தருமங்களைச் சொல்லுகிறேன் கேளும். வீட்டுக்கு வந்தவன் பகைவனாயிருந்தாலும் அவனுக்கு அதிதிசற்காரஞ் செய்தல் வேண்டும். மரமானது தன்னைத் தறிப்பவனுக்கும் நிழல்கொடுக்கின்றது. வீட்டிலே உணவில்லையாயின் இன்சொல்லாவது கூறி அதிதியை வழிபடல் வேண்டும். அதிதி யாவராலும் போற்றத் தக்கவன். வீட்டிற்கு வந்த அதிதி வெறுப்புடன் போவானாயின், வீட்டில் வாழ்பவனுக்குப் பாவஞ் சம்பவிக்கும்; புண்ணியம் நீங்கிவிடும். அதிதி எல்லாத் தேவர்களின் வடிவாயும் இருக்கின்றான்' என்றது.

"'பூனை மாமிசந் தின்பது. பறவைக் குஞ்சுகள் இங்கே இருக்கின்றன. அதனாலேதான் இப்படிச் சொன்னேன்' என்று கழுகு சொல்லிற்று. அதனைப் பூனை கேட்டு மண்ணிலே தொட்டுக் காதுகளைப் பொத்திக் கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று பின்னும சொல்லுகின்றது. 'நான் தருமசாத்திரங் கேட்டிருக்கின்றேன். என்னிடத்தில் அவா என்பதில்லை. சாந்திராயண விரதமும் முடித்திருக்கின்றேன். கொல்லாமையே பெருந் தருமம் என்பது சமயிகள் யாவர்க்குஞ் சம்மதம். கொலையில்லாரும் பரோபகாரிகளுஞ் சுவர்க்கம் போகின்றனர். தருமம் என்னும் நண்பன் ஒருவனே மரணத்தின் பின்னுந் தொடர்கின்றான். மற்றையனவெல்லாம் உடல்போல அழிகின்றன. காட்டிலே முளைக்கும் புல்லு முதலியன உண்டு சீவிக்கும் மிருகங்களை எவன் கொல்லுவான்?' என்றது.

"இப்படி பூனை சொல்லிக் கழுகுக்கு விசுவாசத்தையுண்டாக்கி அப்பொந்திலே இடம்பெற்று வசித்து வந்தது. சில நாளின்பின் அது பறவைக் குஞ்சுகளை மெல்ல மெல்லப் பொந்திலே கொண்டுவந்து உண்டுவந்தது.

குஞ்சுகளை இழந்த பறவைகள் அழுது புலம்பி அங்கும் இங்கும் விசாரிக்கத் தொடங்கின. அவைகள் அவ்வாறு விசாரித்தலைப் பூனை அறிந்து பொந்தினின்று புறப்பட்டு வெளியே போயிற்று. குஞ்சுகளைத் தேடித் திரிந்த பறவைகள் அப்பொந்திலே குஞ்சுகளின் எலும்புகள் கிடக்கக் கண்டு 'எங்கள் குஞ்சுகளைக் கொன்று தின்றது இக் கழுகே' என்று எல்லாங் கூடி நிச்சயித்து அதனைக் கொலை செய்தன.

"இதனைக் கேட்டு நரி கோபித்துக் காகத்தை நோக்கி 'மானை முதலிற் கண்டபோது நீரும் அதன் குலத்தையுந் தொழிலையும் அறியாதவராயிருந்தீர். இப்பொழுது உமக்கும் இதற்கும் நட்பு வளரவில்லையா? மரமில்லாத இடத்திலே ஆமணக்கும் மரமாதல்போல, வித்துவான் இல்லாத இடத்திலே அற்பம் அறிந்தவனும் வித்துவானாகின்றான். இவன் பிறனோ நம்மவனோ? என்றாராய்தல் அற்ப புத்திமான்களுடைய எண்ணம். உதாரகுணமுள்ளவர்களுக்கு உலகம் முற்றுஞ் சுற்றமேயாம்' என்றது. பின்னர் அந்த மான் 'இந்த வார்த்தைகளாற் பயனொன்றும் இல்லை. நாமெல்லாம் ஓரிடத்திலே தங்கி நல்ல சம்பாஷணைகளைச் செய்து காலங் கழிக்கக் கடவோம். பகையும் உறவும் இயல்பிலே ஒருவருக்கும் இல்லை. பகையுறவுகள் நன்மை தீமைகள் என்னுங் காரணம்பற்றிச் சம்பவிக்கின்றன' என்றது. காகமும் 'அப்படியாகட்டும்' என்றது.

"இப்படி மூன்றுங் கூடி வசிக்கும் நாள்களிலே ஒரு நாள் நரி மானை நோக்கி 'மித்திரா, இக்காட்டருகிலே பயிர் நிறைந்த வயல் ஒன்றிருக்கின்றது' என்று சொல்லி மானை மெல்லக் கூட்டிக்கொண்டுபோய் அதனைக் காட்டி

விட்டது. மானுந் தினந்தோறும் போய் அப் பயிரை மேய்ந்து வந்தது. அதனைப் பயிருடையவன் அறிந்து அம் மானைப் பிடிக்கும்படி வலை கட்டிவைத்தான். மான் வலையிலகப்பட்டுத் துயருற்று ‘வலையினின்றும் என்னை மீட்டுக்கொள்ள வல்லவன் என் மித்திரனே’ என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்போது நரி கிட்ட வந்து ‘என்னுடைய கபட உபாயம் பலித்துவிட்டது. இனி என் விருப்பமும் நிறைவேறும். வெட்டியபின் இதன் இறைச்சியும் எலும்பும் எனக்குப் பூரணமான போசனமாகும்’ என்று சிந்தித்துக்கொண்டிருந்தது.

“மான் நரி நிற்றலைக் கண்டு ‘மித்திரா, என் வலையை வெட்டி என்னைக் காத்துக்கொள்’ என்றது. ‘இன்றைக்குப் பானுவாரம். இந்த வார்க்கயிற்று வலையை நான் இன்று பற்களினாலே தீண்டமாட்டேன். நாளைக்கு விடியற்காலத்திலே நீ சொல்லியபடி செய்வேன்’ என்று நரி சொல்லிவிட்டு ஒரு பக்கத்திற் போய் மறைந்து நின்றது. வழக்கம்போல மாலைக் காலத்திலே மான் வராமையை நோக்கி அங்குமிங்குந் தேடித்திரிந்த காகம் வலையிலே அகப்பட்டிருக்கும் மானைக் கண்டு ‘மித்திரா, இஃதென்ன?’ என்று கேட்க, ‘தீயமித்திரனுடைய வார்த்தையைக் கேட்டதனாலாய பயன் இது’ என்று மான் சொல்லிற்று. ‘அந்த வஞ்சக நரி எங்கே?’ என்று காகங் கேட்க ‘என் மாமிசத்தை விரும்பி இங்கே காத்துக்கொண்டு நிற்கின்றது’ என்று மான் சொல்லிற்று.

“காகஞ் சொல்லுகின்றது: ‘இதனைப்பற்றி நான் முன்னரே சொல்லவில்லையா? ஒருவன் ‘என்னிடங் குற்றமில்லை’ என்பது அவனை நம்பி நடத்தற்குக் காரணமன்று. மரணஞ் சமீபித்தவர் மித்திரர் சொல்லும்

வார்த்தையைக் கேட்கமாட்டார். முன்னிலையிலே முகமன் வார்த்தைபேசி அப்பாற் சென்று தீங்கு புரியும் மித்திரனை முற்றக் கைவிடல்வேண்டும். தீயவனோடு நட்பும் பிரீதியுஞ் செய்தல் நன்றன்று. தீயவனுடைய நாக்கின் நுனி தேனாயிருக்கும்; நெஞ்சு நஞ்சாயிருக்கும். தீயவனுடைய வார்த்தையை நம்பலாகாது’ என்றது. பின்னர்க் கையிலே தடியொன்று எடுத்துக்கொண்டு வயற்காரன் மானை நோக்கி வந்தான. காகம் அவனைக் கண்டு மானைநோக்கி ‘மித்திரா, நீ காற்றினால் வயிற்றை நிரப்பிப் பெரிதாகக் காட்டிக் கால்களையும் அசையாமல் நீட்டிக்கொண்டு இறந்தவன்போலக் கிடந்துகொள். உன் கண்களை நான் கொத்திக்கொண் டிருக்கிறேன். நான் சத்தங் காட்டும்போது நீ எழும்பி விரைந்தோடிவிடு’ என்றது. மானுஞ் சொல்லியபடியே செய்துகொண்டு கிடந்தது.

“வயற்காரன் மான் கிடக்கும் விதத்தை நோக்கி ‘நீ இறந்துவிட்டாயா?’ என்று சொல்லி வலையைக் கழற்றிச் சிக்கெடுத்துக்கொண்டு சிறிது தூரம் போனான். அப்போது காகஞ் சத்தங் காட்டிற்று. மான் சடக்கென எழுந்து துள்ளி ஓடிற்று. அதனை வயற்காரன் கண்டு கோபங்கொண்டு கையில் வைத்திருந்த தண்டைச் சுழற்றி எறிந்தான். தண்டு மானிலே படாமல் விலகி அங்கே பதுங்கியிருந்த நரியின்மீது போய் வீழ்ந்தது. நரி பதைபதைத்து வீழ்ந்து மரணமாயிற்று. ஒருவன் தான் செய்த புண்ணிய பாவங்களின் பயன்களை மூன்று வருடத்திலாவது மூன்று மாசங்களிலாவது மூன்று நாள்களிலாவது அநுபவிப்பான். அதுபற்றித்தான் உணவா யிருக்கும் பிராணிக்கும் அதனை உண்ணும் பிராணிக்கும் இடையிலே

நிகழும் நட்பு கேட்டுக்கே காரணம் என்கின்றேன்" என்று இரணியகன் சொல்லிற்று. "இரணியகா, உன்னை உண்ணுதலால் எனக்கு உண்டி நிறைவாகமாட்டாது. நீ சீவித்திருக்கையிலே நானுஞ் சீவித்திருக்க வேண்டும். பெரியோர்க்குக் கோபம் வரினும் மனம் மாறுபடாது. நற்குணங்களும் வேறாகா" என்று பின்னுங் காகஞ் சொல்ல, இரணியன் கேட்டு "நீயோ நிலையில்லாத குணமுடையை. நிலையிலியோடு நட்புக்கோடல் நன்றன்று. பூனை, எருமை, ஆடு, காகம் என்பவைகளையுந் தீக்குணமுடையவர்களையும் நம்புதலாகாது. தீக்குணமுடையவர்களுக்கு மனமும் வேறு, சொல்லும் வேறு, செயலும் வேறு. நற்குணமுடையவர்களுக்கு மனம், சொல், செயல் என்னும் மூன்றும் ஒன்றுபோல ஒத்திருக்கும். நீயோ எங்கள் விரோதி பக்கத்தவனாய் நிற்கின்றாய். விரோதியோடு நட்புக்கோடல் உயிர்ச்சேதம் விளைக்கும்" என்றது. இதனைக் காகங் கேட்டு "இவ் விஷயங்களை நானும் அறிவேன். உனது நட்பு வேண்டும் என்பது எனதெண்ணம். அதனை நீ மறுத்தால் உணவையும் வெறுத்து உன் வாயிலிலே உயிரையும் விடுவேன்" என்ன, இரணியகன் வெளியிலே வந்து உணவுங்கொடுத்து வார்த்தையும் பேசி அதனோடு நட்புக்கொண்டு வாழ்ந்தது.

இப்படிக் கலந்து வாழும் நாள்களிலே ஒருநாள் காகம் இரணியகனை நோக்கி "மித்திரா, காகங்களுக்கு உணவு தேடுதல் இங்கே கஷ்டமாயிருத்தலால், இவ்விடம் விட்டு வேறிடம் போக விரும்புகிறேன்" என்றது. இரணியகன் "மித்திரா, பல்லும், உரோமமும், நகமும், மனிதனும் தத்தம் இருக்கையை விட்டு நீங்கினாற் பிரகாசிக்கமாட்டா என்பதனை அறிந்து புத்திமான் தானிருக்கும்

இடத்தை விடமாட்டான்" என்றது. இதனைக் காகம் கேட்டு "நீ சொல்வது மூடர் வார்த்தை. சிங்கங்களும் யானைகளுந் தத்தம் இடம்விட்டுப் போகின்றன. சற்புருடர்களும் அப்படிப் போகின்றனர். காகங்களும் மூடர்களும் சில மிருகங்களும் இருந்த இடத்திலே இருந்தே இறக்கின்றன. சிங்கம் எந்தக் காட்டிற் செல்லுகின்றதோ அந்தக் காட்டைத் தன்னடிக் கீழ்ப் படுத்துகின்றது. சற்புருடருந் தாஞ் சென்ற தேசத்தைத் தம்புய வலிமையாலே தமதாக்குகின்றனர். வீரனுக்குத் தன் தேசம் யாது? பிறன் தேசம் யாது?" என்றது.

"மித்திரா, எங்கே போக வேண்டும்? இருந்த இடத்தைவிட்டுப் பின்னோரிடத்திற் போயிருக்க விரும்புவோன், போயிருக்கும் இடத்தைச் செப்பமாக ஆராய்ந்து நியமிக்குமுன், முந்திய இடத்தை முற்றாக விடலாகாது. ஆராய்வுடைய புத்திமான் ஒருகாலால் நிற்கிறான்; ஒருகாலாற் செல்லுகின்றான்" என்று இரணியகன் சொல்லிற்று. இதனைக் காகங் கேட்டு "மித்திரா, தண்டகாரணியத்திலே கற்பூரகௌரம் என ஒரு வாவி இருக்கின்றது. அங்கே மந்தரன் என்னும் பெயருடைய ஆமை ஒன்று இருக்கின்றது. அது என்னுடைய மித்திரன். அது வேண்டும் உணவெல்லாம் நமக்குத் தந்து நம்மைப் பரிபாலிக்கக்கூடும்" என்று சொல்லிற்று. இதனைக் கேட்ட இரணியகன் "இங்கே யான் இருந்து யாது செய்வேன்? நன்குமதிப்பு, சுற்றம், போசன பதார்த்தம், அச்சம், இலச்சை, இரக்கம், கொடை, நல்லநதி, கல்வி என்பவைகளும், செல்வன், வைத்தியன், செங்கோலரசன், சற்பிராமணன், கடன்கொடுப்போன் என்பவர்களும் இல்லா இடத்திலே வாசஞ் செய்தலாகாது. ஆதலால் என்னையும் அங்கே கூட்டிக்கொண்டுபோ" என்றது.

காகம் அதனையுங் கூட்டிக்கொண்டு கற்பூரகௌரம் என்னும் வாவிக்கருகிற் போயிற்று. தூரத்திலே காகம் வருதலை ஆமை கண்டு அதிதிசற்காரஞ் செய்து இரணியகனையும் உபசரித்தது. எவ்விடத்திலும் வந்தவனே குரு என்பது சாத்திரம். காகம் ஆமையை நோக்கி 'மித்திரா, என்னொடுவந்த இவன் இரணியகன் என்னும் பெயருடைய மூஷிகராசன்; தயாளகுணசீலன்; புண்ணியாத்துமா. இவனுடைய கீர்த்திகளைச் சொல்ல ஆயிரம் நாக்குடைய ஆதிசேடனுக்கும் இன்னும் ஆயிரம் நாக்கு வேண்டும்" என்று சொன்னபின், சித்திரக்கிரீவன் கதையையுஞ் சொல்லிற்று. ஆமை ஆதரவோடும் இரணியகனைப்பூசித்து "நீ சனங்களில்லாத இக்காட்டுக்கு வந்த காரணம் யாது?" என்று கேட்க, இணியகன் சொல்லுகின்றது.

இரணியகன் கதை

சம்பகாவதி என்னும் நகரிலே சந்நியாசிகள் வசிக்கும் வாசஸ்தானம் ஒன்றுண்டு. அங்கே சூடாகருணன் என்னும் பெயருடைய சந்நியாசி ஒருவன் இருந்தான். அவன் எப்போதும் போசனஞ்செய்து மிஞ்சிய அன்னத்தைப் பிச்சாபாத்திரத்திலே போட்டுச் சுவரிலேயுள்ள நாகதந்தத்திலே தூக்கிவிட்டு நித்திரை செய்துவருவான். அந்த அன்னத்தை நானும் நாடோறும் பாய்ந்தெடுத்துப் புசித்து வந்தேன். ஒருநாள் சூடாகர்ணன் தன்பால் வந்த நண்பனாகிய வீணாகர்ணன் என்பவனோடு பேசிக்கொண்டிருக்கையிலே நான் சென்றதைக் கண்டு என்னைப் பயமுறுத்தும்படி ஒரு கிளிந்த மூங்கிலின் தடியாலே நிலத்தில் அடித்தான். வீணாகர்ணன் கண்டு 'மித்திரா, என் கதையிலே பற்றின்றி வேறொன்றிலே பற்றுவைப்பதென்னை? பராமுகமாயிருத்தல், அவதானமின்மை,

பெயரை மறத்தல் முதலியன கதையிற் பற்றில்லாதவர் இலக்கணம். முகமலர்ந்திருத்தல், கண் விழித்திருத்தல், விரைந்து பார்த்தல், இன்சொற் கூறல் முதலியன கதையிற் பற்றுள்ளவர் இலக்கணம்' என்னச் சூடாகர்ணன் சொல்லுவான்.

"'நான் கதையிற் பற்றில்லாதவனல்லேன். இதோ பார்; இந்த எலி நான் பாத்திரத்திலே வைத்து மேலே தூக்கிய அன்னத்தை எப்போதும் பாய்ந்து கவர்ந்து புசிக்கின்றது' என, வீணாகர்ணன் நாகதந்தத்தைப் பார்த்துச் 'சொற்ப பெலமுடைய இந்த எலி இவ்வளவு உயரம் பாய்தற்கு யாதுங் காரணம் இருத்தல் வேண்டும்' என்று சிறிது நேரஞ் சிந்தித்துத் 'திரவியம் அதிகமாய் வைத்திருத்தலே இதற்குக் காரணம். திரவியம் வைத்திருப்பவன் எவ்விடத்திலும் எக்காலத்திலும் பெலவான். திரவியமே பிரபுவாயிருத்தற்கும், அரசனை யடைதற்குங் காரணம்' என்று சொல்லிப், பாரை ஒன்றை எடுத்து என் புற்றினைத் தோண்டி நான் தேடி வைத்த திரவியக் குவையை முற்ற எடுத்துக்கொண்டான். நான் அக்காலந் தொட்டுப் பெலனுங்கெட்டு, முயற்சியுங்கெட்டு, ஆகாரமுமின்றி அச்சத்தோடும் மெல்லமெல்ல ஊர்ந்து திரிந்தேன்.

"இப்படித் திரியும் என்னைச் சூடாகர்ணன் கண்டு சொல்லுவான். 'இந்த எலி திரவியம் இழந்ததனாலே தன் சாதிக்குச் சமமாகி வந்துவிட்டது. ஒருவன் செல்வத்தினாற் பெலவானாகின்றான்! பண்டிதனுமாகின்றான்! திரவியமுடையவனே மநுடன்! திரவியமுடையவனுக்குச் சிநேகருண்டு! சுற்றமுமுண்டு! திரவியமிழந்த மநுடன் அப்பொழுதே வேறொருவனாகத் தோன்றுகின்றான்! திரவியமில்லாதவன் செயல்களெல்லாம் கோடைகாலச் சிற்றாறுகள் போல அழிகின்றன! திரவியு

மின்மையான் வருந் துயரோ மரணத் துயரினும் பெரிது! திரவியமில்லா வீடு முழுதுஞ் சூனியம்" என்று பலவிதமாகக் கூறினான்.

"இந்த வார்த்தைகளையெல்லாம் நான் கேட்டு 'இங்கே இருத்தலும், திரவியமிழந்த செய்தியைப் பிறர்க்குச் சொல்லுதலும் நன்றல்ல' என்று நினைத்தேன். திரவிய நட்டம், மனத்துயர், வீட்டிற் கலகம், அவமானம், வஞ்சிக்கப்பட்டமை, தவம், தானம், வயசு முதலியவைகளைப் பிறர்க்குச் சொல்லலாகாது" என்றது. இதனை ஆமை கேட்டு, "திரவியஞ் செலவாதற்குப் பிறர்க்குக் கொடுத்தல், தான் அநுபவித்தல், அழித்தல் என மூன்று வழியுண்டு. கொடாமலும் உண்ணாமலும் இருக்குந் திரவியம் மூன்றாம் வழியாகிய அழித்தலிற் செல்லுகின்றது. கொடுக்கப்படாமல் இருக்குந் திரவியம் திருடரையாவது அரசரையாவது தீயையாவது சேருகின்றது. கொடாமலும் அனுபவியாமலும் வைத்திருக்குந் திரவியத்தினாலே நாம் செல்வர் எனப்படமாட்டோம். நாம் இருக்கும் பூமியின் கீழுந் திரவியம் இருக்கின்றது. அதனாற் செல்வர் எனப்படுவோமா? திரவியந் தேடி வைத்திருப்பவர் கொடுத்துத் தாமும் அனுபவித்தல் வேண்டும். திரவியத்தையும் அளவு கடந்து தேடுதலாகாது. அளவு கடந்து திரவியம் சேகரிக்க விரும்பிய நரி ஒன்று வில்லினாற் கொல்லப்பட்டதை அறியாயோ?" என்றது. "இக்கதை எப்படி?" என்று இரணியகன் கேட்க, ஆமை சொல்லுகின்றது.

பேராசை பிடித்த நரியின் கதை

"கல்யாண கடகம் என்னும் நகரிலே வசித்த பைரவன் என்னும் வேடன் ஒருநாள் வில்லை எடுத்துக்

கொண்டு விந்தமலைக் காட்டிலே வேட்டைக்குப்போய் ஒரு மானைக் கொன்று தூக்கிக்கொண்டு வரும்போது பயங்கரமான வடிவுடைய பன்றி ஒன்றைக் கண்டான். கண்டு மானைப் பூமியிலே வைத்துவிட்டுப் பாணத்தாற் பன்றியை விழுத்தி, அதனை எடுத்துவர அணுகிய போது அது உகாந்தகால மேகம்போல முழங்கி அவன் உடலிலே தாக்க அவன் பூமியிலே விழுந்திறந்தான். அவனும் பன்றியுங் காலடித்து உதறும்போ தகப்பட்ட ஒரு பாம்பும் இறந்தது. அப்போது உணவுதேடித் திரிந்த தீர்க்கராவன் என்னும் நரி இறந்துகிடக்கும் மான், வேடன், பாம்பு, பன்றி என்னும் நான்கையுங் கண்டு 'ஆகா! எனக்கு இன்றைக்கு நல்ல போசனங் கிடைத்திருக்கின்றது. இவற்றின் மாமிசங்கள் மூன்று மாசங்களுக்கு மேற்பட எனக்குப் போசனஞ் செய்யப் போதியனவாகும். ஒரு மாசத்துக்கு வேடனுடைய மாமிசத்தையும், இரண்டு மாசங்களுக்கு மானையும் பன்றியையும், ஒருநாளைக்குப் பாம்பையும் உண்பேன். இன்றைக்கு விற்குதையிலே ஒட்டியது போதும்' என்று வார்க்கயிற்றை உண்டது. வார்க்கயிறு அற, வில்லு மேலே நிமிர்ந்து நரியின் நெஞ்சைப் பிளந்தது. நரியும் இறந்தது. ஆதலாலேதான் அளவு கடந்து தேடலாகாது என்றேன்.

"உண்பதுங் கொடுப்பதுமாகிய திரவியமே உன்னுடைய திரவியமாகும். எஞ்சிய திரவியத்தைப் பேணி யாவருக்கோ வைக்கின்றாய். திரவியந் தேடுதல் அரிது. தேடுதலினுங் காத்தல் அரிது. திரவியம் அழியும்போது வருந் துயரோ மரணத் துயரினும் பெரிது. திரவியமும் மேகநிழலும், இளமையும் விரைவிலே கழியும். திரவி

யத்தை அரசரும், சோரரும், உறவினரும் விரும்புவர். நீரும் அழிக்கும்; நெருப்பும் அழிக்கும். ஆதலால் திரவியத்தை விரும்பலாகாது. சுக துக்கங்களும், வாழ்வு தாழ்வுகளும் மாறி மாறி வருகின்றன. திரவியம் இழந்ததை நினைத்துத் துயருறுதல் வீண். அறிவாளிகள் கிட்டாத காரியத்தை வெட்டெனமறப்பார்கள். இழந்த பொருளைச் சிறிதும் நினையார்கள். ஆதலால் நீயும் அதனை மறந்துவிட்டு முயற்சியாதிரு" என்றது.

பின்னர் அவையெல்லாம் விரும்பிய உணவுகளைத் தேடியுண்டும், விநோத சம்பாஷணைகள் செய்துகொண்டும் சுகத்தோடு வசிக்கும் நாளிலே ஒருநாள் சித்திராங்கன் என்னும் மான் யாவராலோ பயமுறுத்தப்பட்டு அங்கே வந்தது. அதனைக் கண்டு அதன் பயத்துக்குக் காரணமானது அதனைத்தொடர்ந்து வருமென்று எண்ணி ஆமை சலத்துட் பிரவேசித்தது; இரணியகன் புற்றுட் புக்கது; காகம் பறந்துபோய் மரத்து நுனியில் இருந்தது. நெடுந்தூரம் பார்த்தும் பயங்கர காரணம் ஒன்றுங் காணாமையால் எல்லாம் வந்து ஒருங்கு கூடின. ஆமை மானை நோக்கி, "நல்லது, உன்னிட்டப்படி எவ்வுணவுகளையும் உண்டுகொண்டு இவ்வனத்தை ஆளும் அரசனாய் இரு" என்ன, மான் "நான் ஒரு வேடனாற் பயமுறுத்தப்பட்டு அடைக்கலமாக உன்னிடம் வந்திருக்கிறேன். அடைக்கலம் புகுந்தவனை உலோபத்தாலாவது அச்சத்தாலாவது கைவிடுதல் பிரமக்கொலைப் பாவத்துக்குச் சமம் என்று அறிஞர் சொல்லுவர். நானும் உங்களோடு நண்பராயிருக்க விரும்புகின்றேன்" என்றது. இரணியகன் "நீ உன்வீடு போலப் பேதமின்றி இங்கே இருக்கலாம்" என்றது. மான் மகிழ்ச்சியோடு நீருண்டும் ஆகாரமுண்டும் வாவிக் கரையில் வசித்தது.

பின்னர் ஆமை மானை நோக்கி, "மித்திரா, உன்னைப் பயமுறுத்தினவன் யாவன்? இக் காட்டிலே யாராவது வேட்டுவர்கள் சஞ்சரிக்கின்றார்களா?" என்று கேட்க மான் சொல்லுகின்றது. "'கலிங்கதேசத் தரசனாகிய உருக்குமாங்கதன் திக்குவிசயஞ்செய்து சந்திரபாகா நதிக்கரையில் வந்திருக்கிறான். நாளைக் காலையிலே இங்கே வந்து கர்ப்பூரவாவிக் கரையிலே வாசஞ்செய்ய எண்ணியிருக்கிறான்' என்று ஒரு வேடன் சொல்ல அறிந்தேன். அது பயங்கரகாரணம். அதற்கு யாது செய்தல்வேண்டுமோ அதனைச் செய்தல்வேண்டும்" என்றது. ஆமை "நான் வேறோர் வாவிக்குள்ளே போய்விடுவேன்" என்றது. காகமும் மானும் "அப்படியே செய்க" என்றன. ஆமை அந்த நீர்நிலையைவிட்டுப் போயிற்று. இரணியகன் முதலியவைகளும் அதன்பின் போயின. அப்போது காட்டிற்போகும் வேட்டுவன் ஒருவன் நிலத்திற்போகும் ஆமையைப் பிடித்துயர்த்தி வில்லிற்கட்டிக்கொண்டு வீடு நோக்கினான். மான் முதலியனவும் அவன்பின் போயின. இரணியகன் புலம்பத் தொடங்கிற்று.

"கடல்போன்ற ஒரு துயரின் கரையை யான் காணாமல் இருக்கும்போது வேறுமொரு துயர் வந்து நேரிடுகின்றது. விதிவலியாற் கிடைக்கும மித்திரன் ஆபத்திலும் விட்டு நீங்கான். காயத்தோடு அபாயமும், திரவியத்தோடு நாசமும், உறவோடு பிரிவும் சேர்ந்திருக்கின்றன. பொருள் வாஞ்சையாலே மயங்கிப் பொருளிருக்கும காலத்திலேவந்து நட்புக்கொள்வோர் மித்திரரல்லர். மித்திரரை ஆபத்து என்னும் உரைகல்லில் அறியலாம். அந்தோ! என்விதியே கொடியது. இக் காட்டிலே வேட்டுவன் திரியும் வரையும் ஆமையை விடுவிக்கும்படி

முயலக்கடவோம்" என்றது. காகமும் மானும் "யாது செய்யவேண்டும்?" என்ன, இரணியகன் சொல்லுகின்றது.

"சித்திராங்கன் குளக்கரையிற் போய் இறந்தவன் போலத் தன்னைக் காட்டிக்கொண்டு கிடத்தல் வேண்டும். இலகுபதனன் அதன்மேலிருந்து மூக்கினாலே கொத்துதல் வேண்டும். இச்செயலை வேட்டுவன் கண்டு மான் இறந்தது எனறெண்ணி அதன் இறைச்சியை விரும்பி ஆமையை நிலத்திலே வைத்துவிட்டு வருவான். அப்போது நான் ஆமையின் கட்டை அறுத்து விடுவேன்" என்றது. மானுங் காகமும் அப்படியே செயதன. மரத்தின் கீழே இருந்து இளைப்பாறின வேடன் மான் கிடத்தலைக் கண்டு ஆமையைப் பூமியில் வைத்துவிட்டு மானை வெட்டி இறைச்சி எடுக்கும் பொருட்டுக் கர்த்தரிகையும் எடுத்துக்கொண்டு கிட்டப் போனான். அப்போது இரணியகன் வந்து கட்டுகளை வெட்டிவிட, ஆமை குளத்திற் பிரவேசித்தது. மானும், வேடன் தன்னைக் கிட்டுமுன், எழுந்து விரைந்தோடிற்று. வேடன் திரும்பிவந்து வைத்தவிடத்திலே ஆமையைக் காணாமல் 'நிலையான காரியங்களைப் பராமுகஞ் செய்து நிலையில்லாத காரியங்களைச் செய்பவனுடைய நிலையான காரியங்களும் அழிகின்றன' என்று சொல்லி ஆசையும் நீங்கி அப்பாற் போயினான். ஆமை முதலிய நான்கும் ஆபத்து நீங்கித் தங்கள் தங்களிடத்திற் போய்ச் சுகத்தோடு வசித்தன என்று விட்டுணுசர்மர் சொல்லினர்.

இராசகுமாரர்கள் விட்டுணுசர்மரை நோக்கி "ஆரியரே, நாங்கள் எல்லாம் கேட்டு மகிழ்ந்தோம். எங்கள் மனவாஞ்சை நிறைவேறிற்று" என்றனர். விட்டுணுசர்மர் "நல்லோர் நண்பரை அடைக. சனங்கள் செல்வம் பெறுக. அரசர் நீதிவழியாற் பூமியைக் காக்க. உங்கள் நீதியை அறிஞர் விரும்புக. பரமேசுரன் சனங்களுக்கு நன்மை செய்க" என்று வாழ்த்தினர்.

சுகிர்ப்பேதம்

பின்னர் இராச குமாரர்கள் விட்டுணுசர்மரை நோக்கி "ஆரியரே, இப்பொழுது மித்திரலாபங் கேட்டுணர்ந்தோம். இனிச் சுகிர்ப்பேதங் கேட்டுணர விரும்புகின்றோம்" என்ன, விட்டுணுசர்மர் சொல்வாராயினர். "ஒரு காட்டிலே ஒரு சிங்கமும் ஓர் எருதுங் கூடிப் பெருநட்புப்பூண்டு வாழுங்காலத்திலே கோளுரையும், உலோப குணமுமுடைய நரி ஒன்று வந்து அவற்றின் நட்பைப் பிரித்து அழித்தது" என்றார். இராசகுமாரர்கள் "இக்கதை எப்படி?" என்று கேட்க, விட்டுணுசர்மர் சொல்வாராயினர்.

சிங்கம் எருதோடுபூண்ட நட்பை நரி பிரித்த கதை

தென்னாட்டிலே சுவர்ணவதி என்னும் நகரியிலே பெருஞ்செல்வனான வர்த்தமானன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் தன் சுற்றத்தார் சிலர் தன் செல்வத்திலும் மிக்க பெருஞ் செல்வமுடையவராய் இருத்தலை நோக்கி "என் செல்வம் என்ன செல்வம்! யான் இன்னுஞ் செல்வம் தேடவேண்டும்" என்று எண்ணினான். "செல்வமுடையவன் பிராமணனைக் கொன்றானாயினும் பெருமதிப்புப் பெறுகின்றான். செல்வமில்லாதவன் உயர்ந்த குலமுடையவனாயினும் இகழப்படுகின்றான். தான் வைத்திருக்கும் சொற்ப திரவியத்தைப் பெருந்திரவியம் என்று மதித்துத் தேடாமல் இருப்பவனுக்கு விதியும் விரோதியே. அற்பம் அற்பமாகத் தேடித் திரவியத்தை வளர்த்தல் வேண்டும். சிறிது சிறிதாக வீழும் மழைத்துளியினால் ஒரு குடம் நிறையவில்

லையா? பிறந்தவிடத்திலே வசித்தல், விதிவசமென்றிருத்தல், தன்னைக் குறைவில்லாதவனாக எண்ணுதல், முயற்சியின்மை என்பன திரவியம் தேடுதற்கு இடையூறும். திரவியத்தைத் தேடவேண்டும். தேடியதைக் காத்தல் வேண்டும். காத்ததை வளர்த்தல் வேண்டும். வளர்த்ததைத் தக்கார்க்குக் கொடுத்தல் வேண்டும்" என்று சிந்தித்து வாணிகஞ் செய்யத் துணிந்து, ஒரு வண்டியிலே பலவித திரவியங்களை நிறைத்துச் சஞ்சீவகன் நந்தகன் என்னும் எருதுகளைப் பூட்டிக்கொண்டு காசுமீரதேசம் போயினன்.

போகும்போது வழியிலேயுள்ள ஒரு காட்டிலே சஞ்சீவகன் முழந்தாள் ஒடிந்து விழுந்தது. அப்போது வர்த்தமானன் "புத்திமான் எவ்வித முயற்சிசெய்தாலும் விதியின் பயனே பயனாகி முடிகின்றது. எச்செயற்கும் இடையூறுயுள்ள சந்தேகத்தைக் கைவிட்டு செயற்பாலனவாகிய காரியங்களைச் செய்யவேண்டும்" என்று சிந்தித்துச் சஞ்சீவகனை அங்கே நிற்கும்படிவிட்டுப்போயினான். சஞ்சீவகன் மூன்று கால்களினாலும் சஞ்சரித்து அக்காட்டிலே நின்றது. நூற்றுக்கணக்கான அம்புகள் தைத்தாலும் இறக்குங் காலத்திலன்றி ஒரு பிராணியும் இறக்கமாட்டாது; இறக்குங்காலம் சமீபித்ததாயின், தருப்பை நுனி தீண்டினும் இறந்தே விடும். முழந்தாள் ஒடிந்துஞ் சஞ்சீவகன் இறவாமல் அந்தக் காடுகளிலே இட்டப்படி திரிந்து,வேண்டும் உணவுகளை உண்டு, சரீரங் கொழுத்துத் திரியும்நாள்களிலே ஒருநாட் பெருந்தொனி உண்டாக உங்காரஞ் செய்தது. அந்த உங்காரத்தை அங்கே நீரருந்தப்போன பிங்களகன் என்னும் சிங்கங் கேட்டு அச்சங்கொண்டு நீரருந்தாமற் தனதிருக்கைக்

குத் திரும்பிவந்து "இந்தச் சத்தம் யாது?" என்று ஆலோசித்துக்கொண்டு சும்மா இருந்தது.

பிங்களகன் இவ்வாறிருத்தலைத் தமனகன் கரடகன் என்னும் நரிகள் இரண்டுங் கண்டன. தமனகன் கரடகனை நோக்கி "எங்கள் அரசன் நீரருந்தப் போயும் நீரருந்தாமல் உடனே திரும்பிவந்து துயரோடும் இருத்தற்குக் காரணம் யாது?" என்றது. கரடகன் சொல்லுகின்றது: "இந்தச் சிங்கத்தின் செயலை விசாரிப்பதினாலே எங்களுக்குப் பயன் யாது? குற்றம் ஒன்றும் இன்றி இந்தச் சிங்கத்தினாலே அவமானஞ் செய்யப்பட்டு நாங்கள் நெடுங்காலமாகத் துயருழக்கின்றோம். சேவகர்களாகிய எங்களுக்குச் சுகம் எப்படி வரும்? பிறருக்குத் தொண்டு செய்து பொருள்பெற விரும்பும் மூடருக்குச் சரீர சுவதந்திரந்தானும் இல்லை. அவர்கள் குளிரையுங் காற்றையும் வெயிலையும் அநுபவிக்கின்றார்கள். அவர்களை நோக்கி வா என்றும், போ என்றும், நில் என்றும், சொல்லென்றும், சொல்லாதே என்றும் இப்படியே தலைவர்கள் அடிக்கடி கட்டளையிடுகின்றார்கள். சேவகர் மௌனமாயிருப்பாராயின் மூடர் என்றும், பேசுவாராயின் பித்தர் என்றும், பயந்து நடப்பாராயின் பயந்தவர் என்றும், பக்கத்திலே நிற்பாராயின் வெட்கமில்லாதவர் என்றும், தூரத்திலேநிற்பாராயின் அகங்காரமுடையவர் என்றுஞ் சொல்லப்படுகின்றார். அவர் தாம் உயரும்பொருட்டுத் தம்மைத் தாழ்த்துவர்; சீவனத்தின் பொருட்டு உயிரை விடுவர். இந்தச் சேவகரினும் மூடர் யாவர்!" என்று சொல்லிற்று. இதனைத் தமனகன் கேட்டு "இப்படி எண்ணுதல் நன்றன்று. நம்முடைய சேவகச் செயலில்லாமல் அரசனுக்கு மகிமை எப்படிவரும்?" என்றது. கரடகன் "அப்படி

யாயினுஞ் செய்யத்தகாத காரியத்திற் பிரவேசித்தல் நன்றன்று. செய்யத்தகாத காரியங்களிற் பிரவேசிப்பவன் ஆப்பிழுத்த குரங்குபோல மரணம் அடைவன்" என்றது. தமனகன் "எப்படி?" என்னக், கரடகன் சொல்லுகினறது.

ஆப்பிழுத்த குரங்கின் கதை

"மகதநாட்டிலே சுபதத்தன் என்பவனுடைய அரங்கசாலையின் பொருட்டுச் சிறிது தூரம் பிளந்த ஒரு மரத்திலே தச்சனாலே ஆப்பு ஒன்று இறுக்கப்பட்டிருந்தது. அங்கே விளையாட வந்த குரங்குக் கூட்டங்களுள்ளே ஒரு குரங்கு இயமனால் ஏவப்பட்டதுபோல அந்த ஆப்பினைப் பிடித்துக்கொண்டிருந்து இழுக்கும்போது அதன் சகனபாகம் மரப்பிளவினுள்ளே புகுந்து நெருக்குண்டதனால் இறந்தது" என்றது. அதனைத் தமனகன் கேட்டு "அரசன் தொழிலைச் சேவகன் விசாரித்தல் அவசியம்" எனறது. கரடகன் "எல்லா அதிகாரங்கட்குமுரிய பிரதான மந்திரியே அது விசாரிக்கத் தக்கவன். சேவகர்களாகிய நாம் அவ்வதிகாரத்திற் பிரவேசித்தலாகாது. தலைவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என்னும் விருப்பினாற் பிறருடைய அதிகாரத்திற் பிரவேசிப்பவன் கத்துதலால் அடிபட்டிறந்த கழுதைபோலத் துயருறுவான்" என்றது. "எப்படி?" என்று தமனகன் கேட்கக், கரடகன் சொல்லுகின்றது.

கழுதையும் நாயும் கள்வனும்

"காசிமாநகரிலே கர்ப்பூரபடன் என்னும் வண்ணான் வீட்டிலே கழுதை ஒன்று கட்டப்பட்டு நின்றது. கழுதையோடு நாயும் நின்றது. ஒருநாள் இராத்திரி வண்ணான்

நித்திரையாய்க் கிடக்கும்போது ஒரு கள்வன் வந்து அவன் வீட்டிற் பிரவேசித்தான். நாய் சிறிதுங் குலையாமற் கிடந்தது. நாயைக் கழுதை நோக்கி 'உன் காரியம் இதுதானா? சத்தமிட்டு எங்கள் தலைவனை நீ எழுப்பாமல் இருப்பது என்னை?' என்றது. அதற்கு நாய் 'என் காரியத்தை நீ விசாரிக்க வேண்டியதில்லை. இவர் வீட்டினை நான் எப்படிக் காத்துவருவேன் என்பதை நீயே அறிவாய். இவர் நெடுநாளாக என் உபயோகத்தை அறியவில்லை. இப்போது உணவு தருவதிலும் பராமுகமுள்ளவராய் இருக்கிறார். பிரபுக்கள் சேவகர்களிற் குறைகண்டன்றி அவர்மேல் ஆதரவு குறைந்தவர்களாய் இருக்கமாட்டார்கள்' என்றது. கழுதை நாயை நோக்கி 'மிலேச்சனே, காரிய காலத்திற் பொருள் கேட்பவன் சேவகனா? மிலேச்சனா?' என்னக், 'காரிய காலத்திற் சேவகனை மதியாதவன் பிரபுவா?' என்று நாய் சொல்லிற்று. கழுதை கோபங்கொண்டு 'நீயோ பாவி! பிரபுவுடைய காரியத்திலே தாமசமாய் நிற்கிறாய். பிரபுவை நானே எழுப்புகின்றேன்' என்று சொல்லிப் பெருஞ் சத்தமுண்டாக்கிற்று. வண்ணான் அந்தச் சத்தத்தாலே விழித்தெழுந்து கழுதை நித்திரையைக் கெடுத்தது என்று கோபங்கொண்டு தடியினால் அதனை அடித்தான். கழுதை மரணமடைந்தது. அதுபற்றியே பிறனுடைய அதிகாரத்திலே பிரவேசிக்கலாகாது என்றேன்.

"எங்கள் செயலிலே நாங்கள் முயலல் வேண்டும், வேட்டையே எங்களுக்கு விதிக்கப்பட்ட தொழில். அதுவும் இன்று வேண்டியதில்லை. உண்டு மிஞ்சிய உணவு அதிகமாய் இருக்கின்றது" என்று சொல்லிற்று. இதனைத் தமனகன் கேட்டுக் கோபத்தோடும் சொல்லுகின்

றது: "உண்டியை மாத்திரம் விரும்பும் உனக்கு இராசசேவை எப்படிவரும்? இது சேவகனாய் உள்ளவனுக்குத் தகுதியன்று. இராசாவையடைதல் உணவுக்கு மாத்திரந் தானா? புத்திமான்கள் உறவினர்க்கு நன்மை செய்யும் பொருட்டும் பகைவர்க்குத் தீமை செய்யும் பொருட்டும் அரசனை அடைகின்றார்கள். வயிற்றை மாத்திரம் நிறைத்தல் தக்கதன்று. காகந் தானும் தன் வயிற்றை நிறைக்கின்றதே. மித்திரர் உறவினர் முதலியோர்க்கு உதவித் தானும் உண்ணும் சீவனமே சீவனம். இன்னும் சேவகர்களுக்கும் தலைவர்களுக்கும் உள்ள பேதத்தைப் பார்? ஒரு நாயானது தனக்கு உணவு கொடுக்கும் பிரபுவைக் கண்டவுடனே வாலை அசைக்கின்றது; காலில் விழுகின்றது; பூமியில் விழுந்து பார்க்கின்றது. யானையோ தைரியத்தோடு பார்க்கின்றது. வயிற்றை மாத்திரம் நிறைக்க வேண்டும் என்னும் மூடனுக்கும் மிருகங்களுக்கும் பேதம் யாது?"

இதனைக் கேட்ட கரடகன் "நாங்கள் அவ்வளவு பிரதானிகளல்லேம். இவ் விசாரணைகளினால் எங்களுக்குப் பயனில்லை' என்றது. "பிரதானிகளல்லேம் என்று சொல்வதுஎன்னை? ஒருவன் பிரதானியாய்வருவது தன் செயலினாலன்றோ? கிணறு வெட்டுவோன் கீழே போதல் போலவும், மதில் கட்டுவோன் மேலே போதல் போலவும், மனுடனுந் தன் செயலால் உயர்வையுந் தாழ்வையும் அடைகின்றான்" என்று தமனகன் சொல்லிற்று. "பின் என்ன சொல்லுகின்றாய்" என்று கரடகன் கேட்கத், தமனகன் "எங்கள் பிரபு தண்ணீர் குடிக்கப் போய்த் தண்ணீர் குடியாமல் யாதோ பயங்கரத்தினால் திரும்பிவந்திருக்கின்றார்" என்றது. "அந்தப் பயங்கரம் இன்னது

என்று நீ அறிவாயா?" என்று கரடகன் கேட்கத், தமனகன் சொல்லுகின்றது. "புத்திமானால் அறியப்படாததும் உண்டோ சொல்லப்பட்ட காரியங்களை மிருகங்களும் அறிகின்றன. கட்டளையிட்ட காரியங்களை யானைகளுங் குதிரைகளும் செய்கின்றன. சொல்லப்படாத காரியங்களைப் பண்டிதன் புத்தியினால் அறிகின்றான். ஒருவனுடைய முகராகத்தினாலும், இங்கிதத்தினாலும், நடையினாலும், தொழிலினாலும், சொல்லினாலும், கண்ணின் குறியினாலும், அவன் கருத்து அறியப்படுகின்றது. இந்தப் பயங்கர காரியத்திலே நான் அவரை வசமாக்குவேன். சமயத்துக்கு ஏற்ற வார்த்தையையும், நம்பிக்கைக்கேற்ற பிரியத்தையும், வலிக்கேற்ற கோபத்தையும் அறிபவனே பண்டிதன்" என்றது.

"பிரபு சேவையை நீ அறிந்திலை. அழையாமற் பிரவேசித்துக் கேளாமற் பல வார்த்தைகளையுஞ் சொல்வோனை அரசன் மூடன் என்றே எண்ணுவான்" என்று கரடகன் சொல்லிற்று. 'மித்திரா, எனக்குச் சேவை தெரியாது என்று நீ சொல்வது என்னை? இயற்கையாக அழகுள்ளது என்றும், அழகில்லது என்றும் ஒன்றில்லை. ஒருவனுக்குப் பற்றுடையது எதுவோ அதுவே அவனுக்கு அழகாம். ஒருவனுடைய கருத்தை அறிந்து அக்கருத்தின் வழியே சென்று ஒரு புத்திமான் அவனை வசப்படுத்துவான். அரசன் 'இங்கே இருப்பவன் யாவன்?' என்று கேட்டால், 'நான்' என்றும், 'கட்டளைகளைச் சொல்லும்' என்றும் சொல்லி, இபன்றவரையிலே அவனுடைய ஆஞ்ஞையைப் பேணல்வேண்டும்" என்று தமனகன் சொல்லிற்று. கரடகன் "சிலவேளை நீ சாவகாசமில்லாத சமயத்திலே பிரவேசிப்பாய். அதனாலே பிரபு உன்னை

அவமதிப்பார்" என்றது. தமனகன் "அப்படியாயினும், சேவகர் அரசன் சமீபத்திலே அவசியம் இருத்தல்வேண்டும். ஒரு காரியத்தைப் பிழைவரும் என்று தொடங்காதிருத்தல் ஆண்மையில்லாத புருடருடைய இலக்கணம். சமியாதென்று உணவை விடுதல் நன்றாகுமா? கல்லாதவனாயினும் என்! மூடனாயினும் என்! முன்னிலையிலே நிற்பவனுக்கே அரசன் அருள் செய்கின்றான்" என்றது.

பின்னர் "அங்கே போய் என்னசெய்வாய்" என்று கரடகன் கேட்கத், தமனகன் சொல்லுகின்றது; "பிரபு என்மேற் பற்றுடையரோ, அல்லரோ என்பதனை முதற்கண் அறிவேன். தூரத்திற் கண்டு சிரித்தலும், குசல விசாரணையிற் பிரியமும், காணாவிடத்திற் குணங்களைப் புகழ்தலும், இட்டமான பொருளை நினைத்திருத்தலும், கொடையும், குற்றங்களை நீக்கிக் குணங்களை எடுத்தலும், சேவகரிற் பற்றுடைமையும் பற்றுள்ள பிரபுவின் இலக்கணமாம். இவைகளையெல்லாம் அறிந்து, நான் அவரோடு பேசுவேன். பிரபு பிரியமுடையராய் இருக்கும்போது குற்றமுங் குணமாக எண்ணப்படும். வெறுப்புடையராயிநக்கும்போது குணமுங் குற்றமாக எண்ணப்படும். சமநிலையாய் இநக்தும்போது குற்றம் குற்றமாகவுங் குணம் குணமாகவும் எண்ணப்படும்" என்றது.

கரடகன் "அப்படியாயினுஞ் சாவகாசம் பெறாமற் பேசல் தகுதியன்று தகுதியற்ற காலத்திலே வியாழகுரு பேசினும், அவமானமடைவான்" என்றது. தமனகன் "நானே தகுதியற்ற காலத்திற் பேசமாட்டேன். ஆபத்துக்காலத்திலும், பிழைவழியிற் செல்லும்போதும், காரியகாலங் கழிந்தவிடத்தும், பிரபுவுக்கு நன்மையை விரும்புஞ் சேவகன், கேளாதிருப்பினும், புத்தி சொல்ல

லாம். சொல்லவேண்டிய சமயத்திலே ஆலோசனை சொல்லாதிருப்பேனாயின், எனது மந்திரித்துவம் வீணாகும். நான் சிங்கத்தின் சமீபம் போகின்றேன்" எனக் கரடகன் "அப்படியாகுக" என்று வாழ்த்திற்று. தமனகன், சிங்கத்தின் சமீபம் போய், அதனை வணங்கிற்று. சிங்கம் "உன்னைக் கண்டு நெடுநாளாயிற்று" எனத், தமனகன் சொல்லுகின்றது.

"இராசாவே, தேவரீருடைய பாதங்களுக்குச் சேவகனாகிய என்னாலே யாதொரு பயனுமில்லை. ஆயினும், வேண்டிய காலத்திலே சேவகர்கள் அருகிலிருக்க வேண்டும் என்றெண்ணி இப்போது வந்திருக்கிறேன். பிரபுக்களுக்குப் பல்லின் துகளெடுத்தல், காது குடைதல் முதலிய செயல்களின் பொருட்டுத் துரும்பும் உதவுகின்றது; ஆயின், வாய், கை முதலிய உறுப்புடைய மனிதர் அவசியம் வேண்டியவர் என்பது சொல்லவும் வேண்டுமா? நெடுங்காலங் தேவரீரால் அவமானஞ் செய்யப்பட்ட என் புத்தி மழுங்கிவிட்டது என்று தேவரீர் எண்ணக்கூடும். அப்படி ஒருபோதும் இல்லை. தைரியமுள்ளவனுடைய புத்தியானது சஞ்சலமுற்ற காலத்திலும் வேறுபடாது. தலைகீழாகப் பிடித்தாலும் அக்கினிச் சுவாலை கீழே போகமாட்டாது. உத்தமர், மத்திமர், அதமர் என்னும் மூவகைப் புருடர்களையும் ஆராய்ந்து, மூவரையும் அவரவர்க்குத் தக்க செயலிலே நியோகித்தல்வேண்டும். மூவரையுஞ் சமமாக மதித்தால், சமர்த்தருடைய முயற்சி பழுதடையும். குதிரை, ஆயுதம், வீணை, சாத்திரம், வார்த்தை முதலியன தக்கார் தகார் கைப்பட்டு உயர்வையும் தாழ்வையும் அடைகின்றன. அன்புள்ளவனாயினுஞ் சாமர்த்தியமில்லாத சேவகனாற் பயன் யாது? சாமர்த்தியமுள்ளவனாயி

னும் அபகாரஞ்செய்பவனுற் பயன் யாது? அன்பும் வலியுமுடைய என்னை நீர் அவமானஞ்செய்யலாமா?" என்றது.

"தமனகா, இவைகளை ஏன் சொல்லுகிறாய்? நீயோ நம்முடைய பிரதான மந்திரியின் புத்திரன். இவ்வளவு காலமும் என்னை நீக்கிவிட்டு, வேறெங்கேயோ போயிருந்து, இப்போது கோள் வார்த்தையுங் கேட்டுக் கொண்டு வந்திருக்கின்றாய். உன்கருத்து யாது சொல்லு" என்று சிங்கம் கேட்டது. தமனகன் "தேவரீரை ஒன்று கேட்கிறேன், சொல்லவேண்டும். தேவரீர் சலபானத்துக்குப் போயுஞ் சலபானஞ்செய்யாது திரும்பிவந்து மயங்கி நிற்றல் என்ன காரணம்?" என்றது. "இந்த இரகசியஞ் சொல்லற்கு விசுவாசமுள்ளவர் ஒருவரும் அகப்படவில்லை. விசுவாசமுடைய உனக்குச் சொல்லுகிறேன். இந்தக் காட்டிலே யாதோ அபூர்விகமான ஒரு பிராணி சஞ்சரிக்கின்றது. ஆதலால் இந்தக் காட்டை விடல் வேண்டும். இந்தப் பிராணியின் முழக்கத்தை நீ ஒருகாலும் கேட்கவில்லையா?" என்று சிங்கஞ் சொல்லிற்று. "அம்முழக்கம் அச்சத்துக்குக் காரணந்தான். அதனை நாங்களும் கேட்டிருக்கின்றோம். இவ்வாறாய காரிய சந்தேகத்திலேதான் சேவகருடைய உபயோகம் அறியவேண்டும். சுற்றத்தவர், சேவகர், பெண் என்னும் இவர்கள் சாரத்தையுந் தன் பெலத்தையும் புத்தியையும் ஆபத்து என்னும் உரைகல்லிலே பரீட்சித்தறியவேண்டும்" என்று தமனகன் சொல்லப், "பெரும் பயமே என்னை வருத்துகின்றது" என்று சிங்கஞ் சொல்லிற்று.

தமனகன் "தேவரீர், இவ்விராச்சியத்தை விட்டு வேறிடம் போகவேண்டும் என்றது நன்றன்று. நான் உயிரோடிருக்கும்வரையுந் தேவரீர் பயப்படவேண்டாம்.

கரடகன் முதலியோரையும் ஆற்றித் தேற்றுதல் வேண்டும். ஏனெனில், இடையூறுகளை நீக்குங் காலத்திற் சனசமுதாயங்களைச் சேர்த்தல் அரிது" என்றது. அதன்பின் கரடகன் தமனகன் என்னும் இரண்டும் சிங்கத்தாலே நன்கு மதிக்கப்பட்டு "அச்சத்தை அகற்றுவோம்" என்று வாக்குத்தானஞ்செய்து போயின. போகும்போது கரடகன் தமனகனை நோக்கி "மித்திரா. இந்தப் பயங்கர காரணம் நீக்கத் தக்கதோ? தகாததோ? என்பதை ஆராயாமற் பயங்கரத்தை நீக்குவோம்" என்று சொல்லி, இந்தப் பெருந் தயையை எப்படிப் பெற்றாய்? காரியம் முடிக்க இயலாதவன், எவனிடத்தும் உபகாரம் பெறலாகாது. அரசனானவன் சிறுவனாயினும் அவனை ஒரு பெரியவனாக மதிததல் வேண்டும்? அவன் மனிதவடிவமான ஒரு தேவதையன்றோ?" என்றது. தமனகன் சிரித்து "மித்திரா, சும்மா இரு. அந்தப் பயங்கர காரணம் ஓர் எருத்தின் முழக்கம். எருதுகள் எங்களுக்குப் போசனம். சிங்கத்துக்கும் போசனம்" என்றது. "அப்படியாயின் அந்தப் பயங்கரம் அங்கே என் நீக்கப்படவில்லை?" என்று கரடகன் கேட்கத், தமனகன் "அந்தப் பயங்கரம் அங்கே நீக்கப்படுமாயின், இந்தப் பெருமையை எப்படிப் பெறுவோம்? சேவகர்கள் பிரபுவை எப்பொழுதும் தம்மை விரும்பும்படி நடத்திவரல் வேண்டும். அப்படிச் செய்யாதொழியின் ததிகர்ணன் என்னும் பூனைபோலத் துயருறல் வேண்டும்" என்று சொல்லிற்று. கரடகன் "அஃதெப்படி?" என்னத் தமனகன் சொல்லுகின்றது.

எலியும் பூனையும் சிங்கமும்

"உத்தரதிக்கிலே அர்ப்புதசிகரம் என்னும் மலைக் குகையிலே மகாவிக்கிரமன் என்னும் ஒரு சிங்கம் வசித்

தது. அச்சிங்கம் நித்திரை செய்யுங்காலத்திலே அதன் மயிர் நுனியை எலியொன்று வெட்டி வந்தது. மயிர் நுனி வெட்டுண்டதை அறிந்தும் எலியைப் பிடித்துக்கொள்ள இயலாமல் 'யாது செய்யவேண்டும்' என்று சிங்கம் ஆலோசித்தது. 'அற்ப சத்துருவை வீரத்தினால் பிடித்தல் இயலாது. அவனைப் பிடித்தற்கு அவன்போன்ற ஒருவனையே நியமித்தல்வேண்டும்' என்று கிராமத்திற்போய் இறைச்சி முதலிய உணவுகள் கொடுத்துத் ததிகர்ணன் என்னும் பூனையைக் கொண்டுவந்து தன் குகையில் வைத்தது. அப் பூனைக்குப் பயந்து எலி வெளியில் வராமல் இருந்தது. அதனாற் சிங்கம் மயிர் வெட்டுண்ணாது சுகமாய் நித்திரை செய்து வந்தது. எலிக்குரல் கேட்கும்போதெல்லாம் இறைச்சிகளை விசேஷமாகக் கொடுத்துப் பூனையை வளர்த்து வந்தது. ஒருநாட் பசியினால் வருந்தி வெளியில் வந்த எலியை அந்தப் பூனை கொன்று தின்றுவிட்டது. அதன்பின் எலியின் சத்தம் ஒருபோதும் கேட்கவில்லை. பூனைக்கு உணவுகொடுத்தலும் நின்றுவிட்டது" என்றது.

அதன்பின் கரடகனும் தமனகனும் சஞ்சீவகனிடம் போயின. கரடகன் அங்குள்ள ஒரு மரத்தடியிற் செருக்கோடிருந்தது. தமனகன் சஞ்சீவகனுக்குக் கிட்டப்போய் "'நான் அரசனால் இந்தக் காட்டுக் காவலிலே நியமிக்கப்பட்டிருக்கிறேன். சீக்கிரம் வந்து என்னைக் காண். அது கூடாதாயின், இக் காட்டைவிட்டு அப்பாற்போ' என்று சேனாபதியாகிய கரடகன் உனக்குக் கட்டளையிடுகின்றது. எங்கள் சுவாமி கோபித்தால் யாது செய்வாரோ அறியேன்" என்றது. அப்போது தேச வழக்கத்தை அறியாத சஞ்சீவகன் அச்சத்தோடு வந்து கரடகனை வணங்கி "சேனாபதியே, நான் செய்யவேண்டியது யாது? அதனைக் கட்டளையிடுக" என்று கேட்கக், கரடகன் 'நீ இந்தக் காட்டில் இருக்க விரும்பினால், அரசனுடைய பாதங்களை அடைந்து வணங்கவேண்டும்" எனச், சஞ்சீவகன் "பயமில்லை என்று சொல்வீராயின் வருவேன்" என்றது. கரடகன் "இடபமே, சந்தேகம் வேண்டாம். மரங்களை வேரோடு பிடுங்கும் காற்றானது மெல்லிய புற்களை வேரோடு களைவது இல்லை. அதுபோலப் பெரிய வீரரும் தம்மைப்போன்ற வீரரிடத்தே வீரத்தைக்காட்டுவார்கள்" என்றது. பின்னர்க் கரடக தமனகர்களிருவரும் சஞ்சீவகனை அழைத்துக்கொண்டுபோய்த் தூரத்திலே நிறுத்திவிட்டுத். தாங்கள் சிங்கத்தின்சமீபம்போய் அதனைவணங்கி அனுமதியோடிருந்தன. அப்போது அரசனாகிய சிங்கம் "அதனைக் கண்டீர்களா?" என்று கேட்கத், தமனகன் சொல்லுகின்றது. "சுவாமி, அதனைக் கண்டோம். தேவரீர் கேட்ட சத்தம்போல அதுவும் மகா பெலனுள்ளது. தேவரீரைக் காண விரும்புகின்றது. தேவரீர் அத்தாணியில் வீற்றிருத்தல் வேண்டும். அது நிற்க, சத்தத்தின் காரணத்தை அறியாமல் சத்தத்தினாற் பயமுறுதல் நன்றன்று. சத்தத்தின் காரணத்தை முற்றும் அறிந்து ஒரு குட்டினி மேன்மையடைந்தாள்" என்றது. "அக்கதை என்ன?" என்று சிங்கம் கேட்கத், தமனகன் சொல்லுகின்றது. ×

கண்டாகர்ணன் குட்டினி கதை

"ஸ்ரீபருவதத்தின் மத்தியிலே பிரமபுரம் என்றொரு நகருளது. அங்கே கண்டாகர்ணன் என்னும் இராக்கதன் ஒருவன் அந்த மலைச்சிகரத்திலே வசிக்கின்றான் என்று ஊர்க்கதை பரம்பிற்று. அதற்குக் காரணம் ஒருநாள் கண்டாமணியைக் கவர்ந்துகொண்டு தப்பியோடிய ஒரு

கள்வனை ஒரு புலி கொன்றுவிட்டது. அவன் கையினின்று வீழ்ந்த கண்டாமணியைக் குரங்குகள் எடுத்துக் கொண்டுபோய்க் கணந்தோறும் அடித்துக்கொண்டு இருந்தன. அதைக் கேட்ட அந்நகர வாசிகள் கண்டாகர்ணன் கோபித்து மனிதரைக் கொன்று தின்கிறான் என்றும் கணந்தோறும் கண்டாமணியை அடிக்கிறான் என்றும் சொல்லி அந்நகரத்தை விட்டு ஓடிப்போனார்கள்.

"பின்னர்க் கராலயை என்னுங் குட்டினி கண்டாமணியைக் குரங்குகளே அடிக்கின்றன என்று ஆராய்ந்து அறிந்தபின் அரசனிடம் போய் 'எனக்குத் திரவியம் அதிகமாகத்தருவீராயின், இந்தக் கண்டாகர்ணனை யானே கொல்வேன்' என்று அறிவித்தாள். அரசனும் அதிக மகிழ்ச்சியடைந்து திரவியம் கொடுத்தான். குட்டினி அவ்விடத்திலே வட்டமாக யந்திரங்கீறி, விநாயகர் முதலிய தெய்வங்களைப் பூசைசெய்து, குரங்குகளுக்குப் பிரியமான பழங்களை எடுத்துக்கொண்டு காட்டுக்குப்போய் அவ்விடத்திற் சிந்திவிட்டாள். குரங்குகள் கண்டாமணியை எறிந்துவிட்டுப் பழங்களை விரும்பி எடுத்தன. குட்டினி கண்டாமணியை எடுத்துக்கொண்டு நகரத்தில் வந்து யாவருக்கும் காட்டி நன்கு மதிக்கப்பட்டாள். ஆதலாலே சத்தத்தின் காரணம் அறியவேண்டும்" என்றது.

பின்னர்த் தமனகனுங் கரடகனும் சஞ்சீவகனைக் கொண்டுவந்து பிங்கலராசனாகிய சிங்கத்தைக் காண்பித்தன. சஞ்சீவகனும் அங்கேதானே அதிக மகிழ்ச்சியோடும் வசித்தது. ஒருநாள் அந்தச் சிங்கத்தின் சகோதரனாகிய தத்தகர்ணன் என்னும் பெயருடைய சிங்கம் அங்கேவந்தது. பிங்கலராசன் அதனைஉபசரித்து இருத்திவிட்டுப் போசனத்தின்பொருட்டு மிருகங்களைக் கொல்லப்

போயிற்று. போகும்போது சஞ்சீவகன் அதனைநோக்கித் "தேவரீர், இன்றைக்குக் கொன்ற மான்களின் மாமிசம் எங்கே?" என்று கேட்கச், சிங்கம் "தமனக கரடர்கள் அறிவார்கள்" என்றது. சஞ்சீவகன் "மாமிசம்உண்டோ? இல்லையோ? என்று அறியவேண்டும்" என்னப், பிங்கலராசன் சிரித்துக்கொண்டு "மாமிசம் இல்லை" என்றது. சஞ்சீவகன் "இவ்வளவ மாமிசங்களையும் அவ்விரண்டும் எப்படி உண்டன?" என்று கேட்கப், பிங்கலராசன் "சிலபாகம் உண்ணப்பட்டது. சிலபாகம் செலவுசெய்யப்பட்டது. சிலபாகம் பராமுகமாய் விடப்பட்டது. நாடோறும் இப்படி நடக்கின்றது" எனச், சஞ்சீவகன் "தேவரீர் அறியாமல் இந்தக் காரியங்களை அவைகள் எப்படிச் செய்தன? ஆபத்துக்குப் பிரதீகாரஞ் செய்தல் ஒழிய, மற்றொரு காரியமும் பிரபுவை அறியாமற் சேவகன் செய்யலாகாது. அமாத்தியன் எப்பொழுதும் அற்ப செலவும் பெருவரவுமுடைய கமண்டலம் போன்றிருத்தல் வேண்டும். தன்வரவு இவ்வளவு என்றறியாமல் விரும்பியபடி எல்லாஞ் செலவு செய்பவன், குபேர சம்பத்துடையவனாயினும், விரைவிலே பிச்சைக்காரனாவான்" என்றது.

பின்னர்த் தத்தகர்ணன் சொல்லுகின்றது : "நெடுங் காலமாகச் சந்திவிக்கிரக காரியங்களிலே அதிகாரிகளாயிருந்த கரடக தமனகர்கள் திரவிய சாலைக்கு அதிகாரிகளாக வைக்கப்படத் தக்கவர்களல்லர். திரவிய சாலையின் அதிகாரத்தைப் பற்றி நான் கேள்விப்பட் டிருப்பதை உனக்குச் சொல்லுகிறேன் ; கேள். பிராமணன், அரசன், உறவினன் என்னும் இவர்கள் திரவியசாலையின் அதிகாரத்தில் வைக்கத் தகுதியுடையவர்களல்லர். எப்படி வருத்தினும், பிராமணன் எடுத்த திரவியத்தைக் கொடுக்க

மாட்டான். அரசன், திரவியத்தைக் கவர்ந்துகொண்டு, விசாரிக்கும்போது, வாட்படையைக் காட்டுவான். சுற்றத்தவன் உறவன் என்ற உரிமையினாலே எல்லாத் திரவியத்தையும் விழுங்குவான். நெடுங்காலச் சேவகன், உபகாரஞ் செய்தவன் என்னும் இவர்களையும் திரவியாதிகாரத்தில் வைத்தல் நன்றன்று. நெடுங்காலச் சேவகன் அச்சமின்றித் தன்னிட்டப்படி நடப்பான். உபகாரஞ் செய்தவன் 'உபகாரஞ் செய்தேன்' என்று பொருள் முற்றையும் கவருவான். இரகசிய காரியங்களுக்குரிய மந்திரி, பொறுமையில்லாத மந்திரி, திரவியச் செருக்குள்ள மந்திரி என்னும் இவர்களையும் திரவியாதிகாரத்தில் வைக்கலாகாது. அதிகாரிகளைப் பின்னும் பின்னும் கண்டித்துவரல் வேண்டும்" என்றது.

"நீ சொன்னது சத்தியம். இவர்கள் என் சொல்லைக் கேட்கமாட்டார்கள்" என்று பிங்கலராசன் சொல்லிற்று. "இவ்வாறு செய்தல் அவர்களுக்கு நன்றன்று. அரசன், தன் புதல்வராயினும், கட்டளையைக் கடப்பவர்களைப் பொறுத்துக்கொள்ளல் நன்றன்று. விசேடமாகத், திரவியாதிகாரத்தில் வருங் குற்றங்களைக் கண்டித்தல் வேண்டும். செருக்குள்ளவனுடைய கீர்த்தி, நடுவுநிலையில்லாதவனுடைய நட்பு, பொருளாசையுடையவனுடைய தருமம், துன்பமுடையவனுடைய கல்வி, அவதானமில்லாத மந்திரியை வைத்திருக்கும் இராச்சியம் என்னும் இவைகள் விரைவிலே அழிகின்றன. சகோதரா எனது சொல்லின்படி செய்தல் வேண்டும். இன்றைப் போசனம் முடிந்தது. இனிப் புல்லு முதலியவைகளை உண்பவனாகிய சஞ்சீவகனையே போசன அதிகாரத்திலே வைத்தல் வேண்டும்" என்றது. பிங்கலனும் அப்படியே வைத்தது. பின்

னர்ப் பிங்கலகன் சஞ்சீவகன் இருவரும் யாவரையும் விலக்கிவிட்டுத் தம்முள்ளே பெரு நட்புடையவராய்க் காலங்கழித்தனர். கரடக தமனகர்கள் தங்களுக்குஉணவு கொடுத்தல் குறைபாடுறுதலைக்கண்டு தம்முள்ளே ஆலோசித்தன. தமனகன் "இங்கே செய்யவேண்டியது யாது? இவ்விருவருள்ளும் வளர்ந்திருக்கும் நட்பைப் பிரித்தல் வேண்டும். ஒரு காகம் ஓர் உபாயத்தினால் ஒரு கிருஷ்ண சர்ப்பத்தைக் கொன்றதுபோல, இதுவும் உபாயத்தினாலாகவேண்டும்" என்றது. கரடகன் "அக்கதை யாது?" என்னத், தமனகன் சொல்லுகின்றது.

காகம் கிருஷ்ணசர்ப்பத்தைக் கொன்ற கதை

"ஒரு மரத்திலே ஓராண் காகமும் ஒரு பெண்காகமும் வசித்தன. அம்மரப்பொந்திலிருந்த கிருஷ்ணசர்ப்பம் அவற்றின் குஞ்சுகளைத் தின்று வந்தது. அதன்பின் கருக்கொண்ட பெண் காகம் ஆண் காகத்தை நோக்கி 'நாதா, இப்படிக் கிருஷ்ணசர்ப்பம் இங்கே இருக்கும் வரையும் எங்கள் சந்ததி உய்யமாட்டாது. ஆதலால் இந்த மரத்தை யாங்கள் விட்டுவிடுதல் வேண்டும்' என்றது. 'பிரியையே, பயப்படவேண்டாம். நான் பலமுறையும் அதன் குற்றத்தைப் பொறுத்துவந்தேன். இனிப் பொறுக்கமாட்டேன்' என்று ஆண்காகஞ் சொல்லிற்று. 'நாதா, பெலவானாகிய இந்தக் கிருஷ்ணசர்பத்துடன் எப்படிப் போர் செய்வீர்?' என்று பெண்காகங்கேட்டது. 'இப்படி எண்ணவேண்டாம். ஒருவனுக்குப் புத்தியே பெலன். புத்தியில்லாதவனுக்குப் பெலனில்லை. புத்தியுள்ள ஒரு முயல் சிங்கத்தைக் கிணற்றில் வீழ்த்தவில்லையா?' என்றது. 'அக்கதை எப்படி?' என்று பெண் காகங்கேட்க, ஆண் காகஞ் சொல்லுகின்றது.

முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

"'மந்தரமலையிலே துர்த்தாந்தன் என்னுஞ் சிங்கம் தான் விருப்பியவாறு மிருகங்களை நாடோறுங் கொன்று தின்றுவந்தது. ஒருநாள் மிருகங்களெல்லாமொருங்கு கூடி அதனிடம்போய்த் 'தேவரீர் மிருகங்களை இப்படிக் கொல்லவேண்டாம். நாங்களே ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மிருகம் உணவின் பொருட்டு உமக்குத் தருவோம்' என்று சொல்லச், சிங்கமும் அதற்குச் சம்மதித்தது. அன்று தொடங்கி அவைகளும் அப்படியே கொடுத்து வந்தன. சிங்கமும் உண்டு வந்தது. இப்படி நடக்கும் நாளிலே ஒருநாள் ஒரு வயோதிக முயலின் முறை வந்தது. அம்முயல் 'நாஞ் சீவிக்க விரும்பியே யாவரையும் வணங்குகின்றோம். இப்போது இறக்கப் போகின்ற நாம் இந்தச் சிங்கத்தை வணங்கவேண்டியது என்ன? மெல்ல மெல்லப் போவோம்' என்று கருதி, மெல்ல மெல்லப் போய்ச் சிங்கத்தை அணுகிற்று. பசியினால் வருந்திய சிங்கம் கோபங்கொண்டு 'இவ்வளவும் தாமதித்த காரணம் என்ன?' என்று வினவிற்று.

"'நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை. நான் வரும்போது வேறொரு சிங்கம் வழியிலே நின்று வலோற்காரமாக இவ்வளவும் என்னை மறித்தது. அதற்குப் 'பின்னர் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சுவாமியாகிய உமக்கறிவிக்க வந்திருக்கிறேன்' என்று முயல் சொல்லிற்று. அதனைச் சிங்கம் கேட்டு 'அந்தத் துராத்துமா எங்கே நிற்கின்றது? விரைந்துபோய் அதனை எனக்குக் காட்டு' என்றது. முயல் அதனை அழைத்துக்கொண்டுபோய் ஒரு கிணற்றருகிலே நிறுத்தி, அக்கிணற்று நீரிலே அதன் நிழலைக் காட்டிற்று. அந்தச் சிங்கம் தன்னிழலை வேறொரு

சிங்கம் என்றுகருதி, அந்நிழலிற்பாய்ந்து, கிணற்றுள்ளே வீழ்ந்து இறந்தது' என்று சொல்லிற்று. பெண்காகம் 'நீ சொன்னதை ஒத்துக்கொண்டேன். இப்போது செய்ய வேண்டியது யாது?' என்று கேட்க. ஆண்காகஞ் சொல்லுகின்றது. 'பிரியையே, சமீபத்திலே இருக்கும் அந்த வாவியிலே எப்பொழுதும் முழுக வரும் இராசகுமாரன் கழற்றிக் கல்லில் வைக்கும் பொன்மாலையை நீ எடுத்துக் கொண்டுபோய் அம் மரப்பொந்தில் வைத்துவிடு' என்று சொல்லிற்று. மற்றைநாள் இராசகுமாரன் பொன்மாலையைக் கழற்றி வைத்துவிட்டு முழுகும்போது, பொன்மாலையைப் பெண் காகம் எடுத்துக்கொண்டுபோய் அப்பொந்திலே வைக்கப், பொன் மாலையைத் தேடிவந்த சேவகர் மரப்பொந்தையும் உடைத்துச் சர்ப்பத்தையுங் கொன்றார்கள். இச்செயல் உபாயத்தால் முடிந்ததன்றோ?" என்றது.

இதனைக்கேட்ட கரடகன் "இப்படி முடிக்கலாமாயிற் போ. உன் வழிகள் அனுகூலமாகுக" என்றது. பின்னர்த் தமனகன் பிங்கலன் சமீபம்போய் நமஸ்காரஞ் செய்து "தீங்கு என்று நான் எண்ணிய ஒரு காரியத்தை உமக்குச் சொல்லும்படி வருந்துகிறேன். ஆபத்து வரும்போதும், வழிதவறிச் செல்லும்போதும், காரியத்துக்குரிய காலங் கடந்தபோதும், நன்மை விரும்பும் மனிதன், பிறன் கேளாதிருந்தாலும், நன்றிபயக்கும் வார்த்தைகளை அவனுக்குச் சொல்லல் வேண்டும். இராசா குடிகளுக்குச் சுகங்கொடுக்கும் பாத்திரம். மந்திரி காரியங்களைச் செய்து முடிக்கும் பாத்திரம். இராச காரியங்களைக் கெடுக்கும் மந்திரி பாவி. பிரபுவுடைய இராச்சியத்தைக் கவர விரும்புவோனைச் சிரச்சேதம் செய்தல் வேண்டும்" என்றது.

பிங்கலன் ஆதரவோடும் "நீ யாது சொல்ல விரும்புகின்றாய்?" என்று கேட்கத் தமனகன் சொல்லுகின்றது. "சுவாமீ, இந்தச் சஞ்சீவகன் உம்மிடத்துத் தகுதியில்லாத எண்ணமுடையதாய்த் தோன்றுகின்றது. உம்முடைய பிரபுசக்தி, மந்திரசக்தி, உற்சாகசக்தி என்னும் முச்சக்திகளையும் நிந்தித்து இராச்சியத்தைக்கவரக்கருதுகின்றது." இதனைப் பிங்கலன் கேட்டு, அதிகம் பயந்து, ஆச்சரியத்தோடும், சும்மா இருந்தது. அப்போது தமனகன் "சுவாமி, நீர் மந்திரிமார் எல்லாரையும் விலக்கிவிட்டு எல்லா அதிகாரங்களிலும் அதனையே நியமித்துவைத்தீர். அப்படிச் செய்தது பெருங்குற்றம். அரசன் மந்திரி என்னும் இருவரும் உன்னதமான ஒரு நிலையில் இருக்கும்போது இலக்குமியானவள் பாரந்தாங்க இயலாமல் ஒருவனைக் கைவிடுகின்றாள். அரசன் ஒருவனைப் பிரதானமந்திரியாய் வைத்தலினால், அவனிடத்துக் கெர்வம் வந்து குடிகொள்ளுகின்றது. அதனால் அவன் அரசனுக்குத் துரோகஞ் செய்யக் கருதுகின்றான். நீதியில்லாத சேவகனையும், அலையும் பல்லையும், துஷ்ட மந்திரியையும் வேரோடு களைதல் உத்தமம். இராச்சிய செல்வங்களை மந்திரியிடத்து வைத்திருக்கும் அரசன் ஆபத்துக்காலத்தில் வழிகாட்டி இல்லாத குருடன்போலத் தளர்ச்சி அடைவான். இந்தச் சஞ்சீவகனே எல்லாக் காரியத்தையும் தன்னிச்சைப்படி நடத்துகின்றது. இதனை நான் செய்கையால் அறிவேன். செல்வத்தை விரும்பாத புருடன் உலகத்தில் இல்லை" என்று சொல்லிற்று.

இதனைக்கேட்ட பிங்கலன் ஆலோசித்து "நீ சொல்வது சத்தியமாயினும், இந்தச் சஞ்சீவகனுடன் எனக்குப் பெரு நட்பு வளர்ந்திருக்கின்றது. குற்றமுடையவனாயி

னும், சஞ்சீவகன் எனக்கு மித்திரன். இவனை விலக்குவதெப்படி?" என்று சொல்லிற்று. இதனைத் தமனகன் கேட்டு "நீரோ பழைய சேவகர்களை விலக்கிவிட்டு, இப்பொழுது வந்த சஞ்சீவகனை அதிகாரத்திலே வைத்து உயர்த்தியிருக்கின்றீர். இது நன்றன்று. பழைய சேவகர்களுக்கு அபராதஞ் செய்துவிட்டு, இடையில் வந்தவர்களைப் பரிபாலிப்பவன் இராச்சியத்துக்குப் பேதஞ்செய்பவனாவன்" என்றது. "உன் வார்த்தைகள் எனக்கு அதிசயத்தை விளைக்கின்றன. இந்தச் சஞ்சீவகனைக் கொண்டுவந்தவன் நீ. நான் அபயங்கொடுத்து அவனை உயர்பதவியில் வைத்தேன். இவ்வியல்புடைய சஞ்சீவகன் எப்படி எனக்குத் துரோகஞ்செய்யும்?" என்று சிங்கங் கேட்கத், தமனகன் சொல்லுகின்றது:

"நாயின் வாலானது எண்ணெய் முதலியன பூசி நிமிர்த்தினாலும் இயற்கையான வளைவையே அடைகின்றது. அதுபோலத் துர்ச்சனனும் எப்படிப்பேணப்பட்டாலும் தன்னுடைய இயற்கை நிலையை அடைகின்றான். அமிர்தம் ஊற்றி வளர்த்தாலும் நச்சுமரங்கள் நல்ல பழங்களைக் கொடுக்கமாட்டா; அம்மரங்கள்போலத், தீயவர்கள் நன்மை செய்யப்பெற்றாலும், தீங்கினையே செய்வார்கள். பிறரைத் தீமையினின்றுங் காப்பவனே நண்பன். பெரியோராலே நன்கு மதிக்கப்படுபவனே புத்திமான். செருக்கினைக் கொடாததுவே செல்வம். இச்சையை விலக்கினவனே சுகமுடையவன். பொறிகளை அடக்குபவனே புருடன். இந்தச் சஞ்சீவகன் சுவாமியாகிய உமக்குத் துரோகஞ் செய்ய விரும்பியிருத்தலை உமக்கு அறிவிக்கின்றேன். நீர் அதனை விலக்காதிருப்பீராயின், என்மேற் குற்றமில்லை" என்றது.

இதனைப் பிங்கலன் கேட்டுப் "பிறனுடைய கோள் வார்த்தையைக்கேட்டு ஒருவனைத்தண்டித்தல் நீதியன்று. அரசன் எவனையுந் தானே விசாரணை செய்து குற்றமுளனாயின், தண்டித்தல் வேண்டும்; குணமுளனாயின் நன்கு மதித்தல் வேண்டும்" என்று தன்னுள்ளே எண்ணிச் "சஞ்சீவகன் கொலைக்குற்றமுடையவன் என்று பிரசித்தஞ் செய்யவேண்டியவனா?" என்று வெளியாகக் கேட்டது. தமனகன் "அப்படிச் செய்தால் மந்திராலோசனைக்குப் பேதம்வரும். மந்திராலோசனை, தாமசமுறுமாயிற், பங்கமடையும். தொடங்கிய காரியத்தைத் தாமதமின்றி விரைவிலே முடித்தல்வேண்டும். தாமசப்படுமாயிற் காலக்கிரமத்திலே வேறாய்விடும். ஒருவனிடங் குற்றந்தோன்றுமாயின், அவனைத் தண்டித்துத் திருத்திப்பின் வைத்திருத்தலும் நன்றன்று" என்றது.

இதனைக்கேட்ட பிங்கலன் "அந்தச் சஞ்சீவகன் அவ்வளவு துரோகஞ்செய்தற்கு வல்லவனா என்பதை ஆராய்தல் வேண்டும்" என்னத், தமனகன் சொல்லுகின்றது. "ஒருவனுடைய அங்காங்கிபாவத்தை அறியாமல் அவனுடைய வலிமையை நிச்சயிபபது எப்படி? ஒரு டிட்டிபக் குருவியினாலே சமுத்திரம் வியாகுலம் அடையும்படிசெய்யப்பட்டது" என்றது. பிங்கலன் "அக் கதை எப்படி?" என்னத், தமனகன் சொல்லுகின்றது.

சமுத்திர டிட்டிபக் குருவி கதை

"ஒரு சமுத்திரக் கரையிலே ஆணும்பெண்ணுமாக இரண்டு டிட்டிபக் குருவிகள் வாசஞ்செய்தன. பிரசவ காலஞ் சமீபித்த பேடை நாயகனை நோக்கி 'நாதா, பிர்சவத்திற்கேற்ற இடந்தேடவேண்டும்' என்னச், சேவல்

'இந்த இடம் பிரசவத்திற்கு ஏற்றதன்றோ?' என்றது. பேடை 'இந்த இடம் ஏற்றதன்று. காலந்தோறுஞ் சமுத்திரப் பெருக்கினாலே அழிவடைகின்றது' என்றது. 'பிரியையே, என்வீட்டு முட்டைகளைக் கவர்தற்குச் சமுத்திரம் வலியுடையதா? என்னிடம் வலியில்லையா?' என்று சேவல் கேட்டது. பேடை சிரித்து 'நாதா, உமக்குஞ் சமுத்திரத்துக்குமுள்ள வேறுபாடு' மிகப் பெரிது. செய்தற்கு இயலாத காரியத்தைத் தொடங்குதலும், தன் சனங்களையும் வலியாரையும் பகைத்தலும், மகளிரை விசுவாசித்தலும் மரண காரணமாம் என்று சொல்லி, நாயகன் சொல்லுக்கு அமைந்து அங்கேதானே முட்டைகளை இட்டது. சமுத்திரம் பெருகி வந்து முட்டைகளை அழித்தது. பேடை நாயகனை நோக்கி 'நாதா, கஷ்டம் வந்திருக்கின்றது. முட்டைகளெல்லாஞ் சமுத்திரத்தாற் கவரப்பட்டன' என்றது.

"சேவல் பேடையை நோக்கிப் 'பயப்படாதே' என்று சொல்லிவிட்டுப் பறவைகளெல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு, பறவைகட்கு அரசனாகிய கருடனிடம் போய், முட்டைகள் நாசமடைந்த செய்தியை அறிவித்தது. அவ் வார்த்தையைக் கருடன் கேட்டுப் பிரபுவாகிய நாராயணமூர்த்திக்கு அறிவித்தது. அவர் சமுத்திரத்தை அழைத்து முட்டைகளைக்கொடுக்கும்படி செய்தார். சமுத்திரம் முட்டைகளைக் கொடுத்தது. ஆதலாற்றான் ஒருவனுடைய அங்காங்கிபாவம் அறிதல்வேண்டும்" என்றது.

"சஞ்சீவகன் துரோகஞ் செய்யுங் கருத்துடையவன் என்பது எப்படி அறியலாம்?" என்று பிங்கலன் கேட்கச், "சுவாமீ, கூரிய கொம்பு என்னும் ஆயுதத்தோடு உமக்கெதிரே அஞ்சினவன் போல வரும்போது துரோ

கஞ் செய்ய வருகின்றனன் என்று அறிந்துகொள்க" என்று தமனகன் சொல்லிவிட்டு, மெல்லமெல்லச் சஞ்சீவகன் சமீபம் போயிற்று. சஞ்சீவகன் "தமனகா; உனது குசலம் எப்படி" என்றுகேட்கத், தமனகன் சொல்லுகின்றது. "அரச சேவைசெய்வோருடைய திரவியம் பராதீனம். அவர் மனத்திலே ஒருகாலுஞ் சுகமில்லை. சீவியத்திலும் அவர்க்கு விசுவாசமில்லை. திரவியங்களிலே செருக்கடையாதவன் யாவன்? இராசாவுக்குப் பிரியமுள்ளவன் யாவன்? துர்ச்சனருடைய கபடத்திலே அகப்படாதவன் யாவன்?" என்றது. "மித்திரா, இப்படி ஏன் சொல்லுகின்றாய்?" என்று சஞ்சீவகன்கேட்கத், தமனகன் "மந்தபாக்கியனாகிய நான் யாது சொல்வேன்? ஒரு பக்கத்திலே இராசாவுடைய விசுவாசம் அழிகின்றது; மற்றப்பக்கத்தில் என் நண்பன் அழிகின்றான். கவலையில் மூழ்கிய யான் எங்கே போவேன்? என்ன செய்வேன்?" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டிருந்தது. இது கேட்ட சஞ்சீவகன் "மித்திரா, நீ அடைந்திருக்கும் துயரைச்சொல்" என்று கேட்கத், தமனகன் சொல்லுகின்றது: "அரசனுடைய விசுவாச காரியம் பிறனுக்குச் சொல்லத் தக்கதன்று. ஆயினும் நீ எங்களை நம்பி வந்திருக்கின்றாய். நற்கதியை விரும்பும் நான் உனக்கு நன்மையைச் சொல்லவேண்டும். இதனைக்கேள்: இந்த இராசா உன்மேற் கோபமுடையவராய் இருக்கிறார். உன்னைக்கொன்று தன் பரிவாரத்தைத் திருப்தி செய்யவேண்டும் என்று இரகசியமாய் எங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்" என்றது.

இதனைக் கேட்ட சஞ்சீவகன் அதிகம் துக்கமுற்றுச் சொல்லத் தொடங்கிற்று. "அரசர்கள் அயோக்கியரைப் பேணுகின்றார்கள். திரவியம் உலோபியைச் சாருகின்றது.

மழைகடலிலும்மலையிலும்பெய்கின்றது. இலக்குமி நீசனை அடைகின்றாள். சரஸ்வதியும் குலமில்லாதவனை அடைகின்றாள். இந்தக் காரியம் உண்மையோ, பொய்யோ என்று நிச்சயிப்பது அரிதாக இருக்கின்றது. அரசனுக்கு யான் செய்த குற்றம் யாது? அரசர்கள் காரணமின்றித் தீங்கு செய்வார்களா?" என்றது. தமனகன் "நீ சொல்லியபடிதான்" என்று பின்னுஞ் சொல்லுகின்றது. "சிலர் உபகாரம் பெற்றாலும் வெறுப்புக்கொள்ளுகிறார்கள். சிலர் அபகாரமடைந்தாலும் உவக்கின்றார்கள். எல்லாரும் ஒரே தன்மையராய் இருக்கவில்லை. தீயவர்க்குச் செய்த நன்றிகளும், மூடர்களுக்குச் சொன்ன நல்வார்த்தைகளும், அறிவில்லார்க்குச் சொன்ன புத்திகளும் அழிந்துவிடும். சந்தனமரத்தோடு பாம்புகளும் தாமரைப் பூக்களோடு முதலைகளும்இருக்கின்றன. இடையூறில்லாத சுகங்களோ இல்லை" என்று சொல்லிற்று.

தமனகன் சொல்லுகின்றது: "எங்கள் அரசருடைய வாக்கோ மதுரமாய் இருக்கின்றது; நெஞ்சகமோ நஞ்சாய் இருக்கின்றது. அவர் தூரத்திற் காணும்போது கையை உயர்த்தி அழைக்கின்றார். கண்ணீர்விட்டு ஆசனம் கொடுக்கிறார். கேள்விக்கு விருப்பமாய் விடை சொல்லுகின்றார். உள்ளே கபடமுடையவரா யிருக்கின்றார்" என்றது.

சஞ்சீவகன் சொல்லுகின்றது: "தானியத்தை உண்பவனாகிய நான் கொலைக்கு ஆளாவது எப்படி? அரசர் என்னோடு கோபித்தற்குக் காரணம் யாது? அவர்கோபத்தினாலே நான் எப்போதும் பயந்திருக்கவேண்டும். இடியேறு இராசாதிகாரம் என்னும் இரண்டும் அதிகபயங்கர காரணம். இவற்றுள் இடியேறு ஓரிடத்தில் விழுகின்றது.

இராசாதிகாரம் எவ்விடத்திலுஞ் சூழ்ந்து விழுகின்றது. ஆதலாற் போரில் மரணமடையலாம்; அவருடைய ஆணைப்படி நடத்தல் நன்றன்று. போரில் இறந்தவன் சுவர்க்கம் அடைகிறான். இச் சரீரமோ நிலையில்லாதது; இதனைப் பற்றிச் சிந்தித்தலாற் பிரயோசனம் யாது? மித்திரா, என்னை அரசர் கொல்ல விரும்புகின்றார் என்பதை எப்படி அறியலாம்" என்று கேட்க, "அவர் காதுகளை நிமிர்த்தி, வாலையும் கால்களையும் உயர்த்தி உன்னைப் பார்க்கும்போதே அதனை அறிந்து, நீயும் உன் வலிமையைக் காட்டு. இவைகளை நன்றாய் மறைத்துக்கொள்ள வேண்டும். வெளிப்படின் நீயாவது நானாவது இறக்க வேண்டும்" என்று சொல்லிக், கரடகன் சமீபம் போயிற்று.

கரடகன் "முடிபு யாது" என்று கேட்கத், தமனகன் "இரண்டுக்கும் விரோதம் நிறைவேறிற்று" என்றது. பின்னர்த் தமனகன் பிங்கலராசன் சமீபம் போய் "அரசே, அந்தத் துராத்துமா வருகின்றது. நீர் யுத்த சன்னத்தராயிரும்" என்று சொல்லி அதனை முன்சொல்லியபடி செய்வித்தது. சஞ்சீவகன் வந்து சிங்கம் விகாரரூபமாய் நிற்றலைக் கண்டு தானும் தன் வலியைக் காட்டத் தொடங்கிற்று. பின்னர் அவ்விரண்டுக்கும் கொடியயுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் சஞ்சீவகன் சிங்கத்தினாற் கொல்லப்பட்டது. சஞ்சீவகனைக் கொன்ற பிங்கலராசன் துக்கமுற்றுப் "பூமியில் ஒரு பாகத்தை இழத்தல், நல்ல சேவகனை இழத்தல் என்னும் இரண்டனுள் சேவகனை இழத்தல் மரணத்துக்குச் சமம். இழந்துவிட்ட பூமியைப் பின்னும் பெற்றுக்கொள்ளலாம், சேவகர்களைப் பெறுதல் கூடாது" என்று சொல்லிற்று. தமனகன் அதனைக்கேட்டுச் "சுவாமி, விசுவாசமில்லாத சத்துருவைக் கொன்றபின் துயர்கொள்வது என்னை? பிதாவாய் இருந்தாலென்! சகோதரனாய் இருந்தால் என! புத்திரனாய் இருந்தால் என்! செல்வத்தை விரும்பும் அரசன் தன்னுயிர்க்குக் கேடு சூழ்பவரை அவசியம் கொல்லவேண்டும். குற்றஞ் செய்த பிராணிகளிடத்திற் பொறுமையாய் இருத்தல் அரசர்களுக்கு இகழ்ச்சியாம். இராச்சிய வாஞ்சையாலும் அகங்காரத்தினாலும் இராச பதவியை விரும்புகின்றவனுக்கு வேறு பிராயச்சித்தம் இல்லை. இரக்கமுள்ள இராசாவும், எல்லாவற்றையும் கவரும் பிராமணனும், அவதானமில்லாத அதிகாரியும், நன்றி மறந்தவனும் ஆகிய இவரெல்லாம் நீக்குதற்குரியர்" என்று சொல்லிற்று.

இந்தக் கபடவார்த்தைகளினால் பிங்களராசன் மகிழ்ந்து தன்னுடைய இயற்கைக் குணமடைந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தது. தமனகன் மகிழ்ச்சியடைந்து "இராசாவே, வெற்றியடைக. எல்லா உலகத்திற்கும் நன்மை உண்டாக" என்று சொல்லிச் சுகத்தோடிருந்தது.

விஷ்ணுசர்மர் இராச புத்திரர்களை நோக்கி "சுகிர்ப்பேதம் உங்களுக்குச் சொல்லி முடிந்தது" என்ன, அவர்கள் "நாங்கள் இதனால் மகிழ்ச்சியுற்றோம்" என்றார்கள். விஷ்ணுசர்மர் "இன்னும் இப்படியாகுக. சுகிர்ப்பேதம் உங்களுடைய சத்துருவிடங்களில் உண்டாகுக. அதமர்கள் எப்போதும் கேடடைக. சனங்கள் எப்போதும் சகல சுகங்களையும் சம்பத்தையும் பெறுக. பாலர்கள் இக்கதையை நன்றாக ஆராய்க" என்றார்.

விக்கிரகம்

பின்னர் இராச குமாரர்கள் விட்டுணுசர்மரை நோக்கி "ஆசிரியரே, எங்களுக்கு விக்கிரகத்தையுஞ் சொல்லவேண்டும்" என்றுகேட்க, விட்டுணுசர்மர் சொல்லுகின்றனர். "ஒத்தவலியுடைய அன்னமும் மயிலும் யுத்தஞ்செய்தபோது சத்துரு வீட்டிலிருந்தகாகங்களால் அன்னம் வஞ்சிக்கப்பட்டது" என்றார். "அக் கதை எப்படி" என்று, இராசகுமாரர்கள் கேட்க, விட்டுணுசர்மர் சொல்லுகின்றார்.

அன்ன மயூராதிகள் கதை

கர்ப்பூரத்தீவிலே பத்தமகேலி என்னும் வாவியிலே இரணியகர்ப்பன் என்னும் பெயருடைய அன்னத்தைப் பறவைகளெல்லாம் ஒருங்கு கூடித் தங்களுக்கரசனாக்கி அபிடேகஞ் செய்து வைத்தன. அரசன் யாவருக்கும் அவசியம் வேண்டும். அரசனில்லையாயின் சனங்கள் அலைந்து போவார்கள். சனங்களை அரசனே காக்கிறான். சனங்கள் அரசனை வளர்க்கின்றார்கள். வளர்த்தலினுங் காத்தல் முக்கியம். ஒருநாள் அந்த அரச வன்னம் பரிவாரங்கள் சூழ வீற்றிருக்கும்போது யாதோ ஒரு தேசத்திலிருந்து தீர்க்கமுகன் என்னும்பெயருடைய ஒரு கொக்கு வந்து வணங்கிச் சமீபத்திலே இருந்தது. அரசவன்னம் அதனை நோக்கி "தீர்க்கமுகா, நீ வேற்றுத் தேசங்களிலிருந்து வந்திருக்கின்றாய். புதுமைகளைச் சொல்லு" என்றது. "புதுமைகளைச் சொல்ல விரும்பித்தான் வந்திருக்கிறேன். கேளும்" என்று அது சொல்லத்தொடங்கிற்று.

5711

"சம்புத்தீவிலே விந்திய மலைச்சாரலிலே சித்திர வர்ணன் என்னும் பெயருடைய மயில் ஒன்று பறவைகளுக்கு அரசனாயிருக்கின்றது. நான் ஒருநாள் ஒரு காட்டின் நடுவிற் போகும்போது அதனுடைய சேவகர்களாகிய பறவைகள் என்னைக் கண்டு 'நீ யார்?' என்றும், 'எங்கேயிருந்து வருகின்றாய்?' என்றுங் கேட்டன. அவைகளுக்கு நான் 'கர்ப்பூரத்தீவுக் கரசனாகிய இரணியகர்ப்பனுடைய சேவகன்; பல தேசங்களையும் பார்க்கும்படி வந்திருக்கிறேன்' என்று சொன்னேன். அவைகள் இதனைக் கேட்டு இவ்விரு தேசங்களுள் 'நல்ல தேசம் யாது? நல்ல அரசர் யாவர்?' என்று கேட்டன. அப்போது நான் 'இப்படி ஏன் சொல்லுகிறீர்கள்? இவ்விரு தேசங்களுக்கும் பேதமோ பெரிது. கர்ப்பூரத்தீவோ ஒரு தேவுலகம். அவ்வரசனோ இரண்டாம் இந்திரன். அதனை அலங்கரித்துச் சொல்லுதல் எப்படிக் கூடும்? நீங்கள் இந்த நீரில்லாத நிலத்திலிருந்து என்ன செய்கின்றீர்கள்? எங்கள் தேசத்துக்கு வாருங்கள்' என்றேன். அவைகள் என் வார்த்தையைக் கேட்டுக் கோபங் கொண்டன. மூடர்க்குப் புத்தி சொல்லல் கோபத்துக்குக் காரணமாகும். அஃது ஒரு காலமும் ஆகாது. சில பறவைகள் அறிவில்லாத குரங்குகளுக்குப் புத்தி சொல்லித் தங்கள் இருக்கையையும் இழந்தன" என்றது. "அக்கதை எப்படி" என்று அரசவன்னம் கேட்கக், கொக்குச் சொல்லுகின்றது.

வானரங்களுக்குப் புத்தி சொன்ன பறவைகளின் கதை

"நிருமதை யாற்றங்கரையிலே ஒரு மலைச்சாரலிலே நிற்கும் இலவமரத்திலே கூடுகட்டி வசித்த சில பறவைகள் மழையினாலே வருந்தி அம்மரத்தினடியிலே நடுங்

கிக்கொண்டிருக்கும் குரங்குகளை நோக்கிக் 'குரங்குகளே, கேளுங்கள். நாங்கள் மூக்கொன்றே யுடையோம். அதனாலே புல்லுகள் எடுத்துவந்து கூடு கட்டியிருக்கின்றோம். கை, கால் முதலிய உறுப்புக்களையுடைய நீங்கள் ஏன் இப்படி வருந்துகின்றீர்கள்?' என்றுகேட்டன. குரங்குகள் கோபங்கொண்டு 'காற்றில்லாத கூட்டிலிருக்கும் பறவைகள் எம்மை நிந்திக்கின்றன; என்றுசொல்லி, மழை தணிந்தபின் மரத்திலேறிக் கூடுகளைக் கிழித்தெறிந்தன. கூட்டிலிருந்த முட்டைகளுங் கீழே விழுந்தன. ஆதலால், அறிஞனுக்கே புத்தி சொல்லல்வேண்டும்'' என்றது.

அரசவன்னம் "பின்னர்ப் பறவைகள் என்ன சொல்லின?" என்றுகேட்டது. "பறவைகள் கோபங்கொண்டு 'இந்த அரசவன்னம் யாரால் அரசனாக்கப்பட்டது?' என்று கேட்டன. நானுங் கோபங்கொண்டு 'உங்களுடைய மயில் யாரால் அரசனாக்கப்பட்டது?' என்றேன். இதனைக் கேட்ட பறவைகளெல்லாம் என்னைக் கொல்ல முயன்றன. யானும் என் வலியைக் காட்டினேன்'' என்றது. அரசவன்னம் சிரித்துத் "தனக்குஞ் சத்துருவுக்குமுள்ள பேதத்தை அறியாதவன் சத்துருவால் வெல்லப்படுவான். புலித்தோல் போர்த்து வயலிற் போய்ப் பயிர் மேய்ந்த கழுதை ஒன்று வாக்குத் தோஷத்தினாற் கொல்லப்பட்டது'' என்றது. "அக்கதை யாது" என்று கொக்குக் கேட்க, அரசவன்னஞ் சொல்லுகின்றது.

புலித்தோல் போர்த்த கழுதையின் கதை

"அத்தினபுரியிலே வசிக்கும் விலாசன் என்னும் பெயருடைய வண்ணானுடைய கழுதை ஒன்று பெரும் பாரம் சுமந்து இளைத்து வலிமை கெட்டுக் கிடந்தது.

அதனை அவ்வண்ணான் புலித்தோலினாற் போர்த்துப் பயிர் நிறைந்த ஒரு வயலிலே மேயவிட்டான். அதனை வயற் காவலர் எல்லாரும் தூரத்திற் கண்டு புலி என்று பயந்து ஓடினார்கள். அவருள் ஒருவன் கழுதைத்தோற் கம்பளம் போர்த்துக்கொண்டு வில்லில் அம்பையும் பூட்டிக்கொண்டு தனியே நின்றான். அக்கழுதை அவனை ஒரு பெட்டைக் கழுதை என்று எண்ணி எதிரே வந்தது. அவன் அதனைக் குரலாற் கழுதை என்று நிச்சயித்து அம்பினாலே கொன்றுவிட்டான்'' என்று சொல்லிற்று.

இதனைக் கேட்ட கொக்குச் சொல்லுகின்றது: "அந்தப் பறவைகளெல்லாம் என்னை நோக்கி 'அடா பாவி! நீ எங்கள் பூமியிலே இருந்துகொண்டு எங்கள் அரசனை இழிவாகப் பேசுகின்றாய். இதனை நாம் பொறுக்கமாட்டோம்' என்று கோபங்கொண்டு அலகினால் என்னைத் தாக்கி 'அடா மூர்க்கா, உன்னுடைய அரசனாகிய அன்னம் என்றும் மென்மையுடையது. மென்மையுடையதற்கு இராச்சிய அதிகாரம் இல்லை. அது கையிற் பொருளைத்தானும் காத்துக்கொள்ளமாட்டாது. பூமியைக் காப்பது எப்படி? நீயோ கிணற்றுத் தவளை. அதனை அடையும்படி எங்களுக்கு உபதேசிக்கின்றாய். அதனை அடைதலாற் பயன் யாது? இழிந்தவனுக்குச் சேவை செய்யப்படாது. பெரியவனையே சார்தல்வேண்டும். விபீஷணன் இராமச்சந்திரனைச் சார்ந்து இலங்கை இராச்சியத்தை அடைந்தான். பகைவன் வலியவனாயினும் கபட புத்தியினால் அவனை வெல்லலாம். கபடமான ஆலோசனை செய்த சில முயல்கள் சுகத்தோடு வசித்தன' என்றன. "அக்கதை யாது" என்று நான்கேட்கப், பறவைகள் சொல்லுகின்றன.

யானைகளை வென்ற முயல்களின் கதை

"'ஒரு மாரிகாலத்திலே மழை பெய்யாமல் நீரின்
மையால் வருந்திய யானைகள் தங்கள் தலைவனை நோக்கி
'நாதா, எங்கள் சீவனத்துக்கு வழி என்ன? அற்ப
பிராணிகளுக்குக்கூட நீராடுவதற் கிடமில்லை. நீராடா
மல் நாங்கள் இறந்தவர்போலானோம்' என்று முறையிட்
டன. அப்போது, யானைத்தலைவன் சிறிது தூரம்போய்ச்
சுத்தமாயுள்ள ஒரு வாவியைக் காட்டிவிட்டது. அவ்
வாவிக் கரையிலிருந்த முயல்களெல்லாம் அங்கே நீரா
டச்சென்ற யானைகளின் கால்பட்டு நெரிந்தன. பின்
னர்ச் சிலீமுகன் என்னும் முயல் 'இந்த யானைகள்
நீரின்பொருட்டு எப்போதும் இங்கே வரவேண்டியவை
களாய் இருக்கின்றன. அதனால் எங்கள் குலம் நட்ட
மடையும்' என்று துயருறும்போது, விசயன் என்னும்
கிழ முயல் அதனை நோக்கிச் 'சகோதரா, துக்கங்கொள்
ளாதே. அதற்கு நானே பரிகாரஞ் செய்வேன்' என்று
சொல்லி, யானைத் தலைவனிடம் போயிற்று. யானைத்தலை
வன் அதனைக்கண்டு 'நீ யார்? எங்கிருந்து வருகின்றாய்?'
என்று கேட்டது. 'நான் சந்திரனால் அனுப்பப்பட்ட
தூதன்' என்று முயல் சொல்லிற்று. யானைத் தலைவன்
'வந்த காரியம் யாது' என்று வினவ, முயல் சொல்லு
கின்றது:

"'தூதன் சொல்லும் வார்த்தை எப்போதும் உண்
மையே. கொல்லும்படி வாளை உயர்த்தினாலும் தூதன்
வேறுபடமாட்டான். பகவானாகிய சந்திரன் உமக்குச்
சொல்லச் சொன்னதைச் சொல்லுகிறேன் கேளும்: 'நீர்
இந்தச் சந்திர வாவியைக் காவல் செய்யும் முயல்களைக்
கொன்றுவிட்டீர். அது பெருங் குற்றம். அம்முயல்கள்

என்னுடைய சனங்கள். அதனால் எனக்குச் சசாங்கன்
என்று பெயர்' என்று உமக்குச் சொல்லும்படி சொன்
னார் என்று சொல்லிற்று. யானைத்தலைவன் பயந்து 'பக
வானே, அறியாமற் செய்துவிட்டேன். இனி ஒருகால
மும் அங்கே போகமாட்டேன்' என்றது. அப்படியா
யின் இந்தக் குளத்திலே கோபத்தாலே நடுங்கிக்கொண்டு
நிற்குஞ் சந்திரபகவானைக் கண்டு நமஸ்கரித்துச் சமா
தானஞ் செய்துகொண்டு போம்' என்று முயல் சொல்லி,
இராக்காலமானவுடனே யானைத்தலைவனை அழைத்துக்
கொண்டுபோய் அக்குளத்திலே அசைந்து தோன்றுஞ்
சந்திர விம்பத்தைக் காட்டி நமஸ்கரிக்கும்படி செய்தது.
யானைத்தலைவன் நமஸ்கரித்து 'அறியாது செய்த பிழை
யைப் பொறுத்துக்கொள்ளக் கடவீர்' என்று சொல்லி,
முயலிடத்தும் அநுமதி பெற்றுச் சென்றது. ஆதலாற்
கபடச் செயலாலுங் காரியஞ் சித்திக்கும்' என்றன.

"பின்னர் நான் எங்கள் பிரபுவே சமர்த்தர் என்
றும், அவரிடத்திலே மூன்றுலகத்துக்கும் பிரபுத்தன்மை
இருக்கின்றது என்றும், இராச்சியம் ஆள்வதற்கு அவ
ரால முடியும் என்றும் சொன்னேன். அப்பொழுது
பறவைகளெல்லாம், 'அடா துட்டா, எங்கள் பூமியிலே
எப்படிச் சஞ்சரிக்கின்றாய்' என்று, அரசனாகிய மயி
லின் சமீபத்திற் கொண்டுபோய் என்னைக் காண்பித்து,
'இராசாவே, இதனைப் பிடித்து மறியலில் வையும். இந்
தத் துட்டக் கொக்கு எங்கள் தேசத்திலே இருந்து
தேவரீரை நிந்திக்கின்றது' என்று சொல்லின. அப்
போது இராசா 'இவன் யார்? எங்கே இருந்து வரு
கின்றான்?' என்று கேட்க, அவைகள் இரணியகர்ப்ப
ராசனுடைய எவலாளன் என்றும் கர்ப்பூரத்தீவினின்று

வந்தவன் என்றும் கூறின. பின்னர், மந்திரியாகிய கழுகு என்னை நோக்கி, 'அங்கிருக்கும் முக்கிய மந்திரி யாவர்?' என்று கேட்டது. நான் 'சகல சாஸ்திரங்களையும் நன்கு கற்ற சர்வஞ்ஞன் என்னும் சக்கரவாகம்' என்றேன். கழுகு 'அத்தேசப் பிறப்புடைமையால் அது மந்திரியாதற்கு யோக்கியமுடையது' என்றது. அதற்குள்ளே கிளி வந்து அரசனை நோக்கிக் 'கற்பூரத்தீவு முதலியவைகள் சம்புத்தீவுள்ளே அடங்கிய சிறு தீவுகள். தேவரீருக்கு அங்கேயும் அதிகாரம் உண்டு' என்றது. அஃது அரசனாலும் அங்கீகரிக்கப்பட்டது. அப்போது நான் 'தேவரீருக்குக் கற்பூரத்தீவிலும் வார்த்தை மாத்திரத்தால் அதிகாரம் உண்டாயின், எங்களரசனாகிய இரணிய கர்ப்பனுக்கும் அப்படி அதிகாரம் உண்டு' என்றேன். 'எப்படி இது நிச்சயிக்கப்படும்' என்று கிளி கேட்க, 'யுத்தத்தால் நிச்சயிக்கப்படும்' என்று நான் சொன்னேன். அரசன் சிரித்து 'நீ போய் உன்னுடைய சுவாமியை யுத்தத்துக்கு ஆயத்தம் செய்' என்றது. அப்போது நான் 'உம்முடைய தூதனையும் என்னுடன் அனுப்பும்' என்றேன். அரசன் ஆராய்ந்து பற்றும், நற்குணமும், பரிசுத்தமும், சாமர்த்தியமும், நம்பிக்கையும், பொறுமையும், தைரியமுமுடைய ஒருவனையே தூதனாக அனுப்பல்வேண்டும். ஆதலின் இக் கிளியே போகக்கடவது' என்றது. அப்போது கிளி அரசனை நோக்கி 'அரசனே, துர்ச்சனனாகிய இந்தக் கொக்கோடு நான் போகமாட்டேன். துர்ச்சனனே தீய செயலைச் செய்கிறான். அவனுடைய செயல்கள் பெரியோர் இடத்திற் சித்தியாகின்றன. துர்ச்சனனோடு கூடிவசித்தலும், கூடிப் போதலும் செய்யத்தக்கனவல்ல. துர்ச்சனனாகிய காகத்தோடு கூடி வசித்த அன்னமும் அதனோடு கூடிப்போன

காடையும் கொல்லப்பட்டன' என்றது. 'அக்கதை யாது' என்று அரசன் கேட்கக், கிளி சொல்லுகின்றது.

காகத்தோடு கூடி வசித்த அன்னத்தின் கதை

"'அவந்தி நகர்க்குப் போகும் நெடுந் தெருவிலே நின்ற அரசமரம் ஒன்றிலே ஓர் அன்னமும் ஒரு காகமும் வாசம்செய்து வந்தன. ஒருநாள் வெயிலினால் இளைப்படைந்த வழிப்போக்கன் ஒருவன் அம்மரத்தின் அடியிலே அம்பு வில்லுகளை வைத்துவிட்டு நித்திரை செய்தான். பின் சிறிது நேரத்திலே மரத்தினிழல் பிரிந்துபோக, அவன் முகத்திற் சூரியகிரணம் படுதலை அங்கிருந்த புண்ணியாத்துமாவாகிய அன்னம் கண்டு சிறகுகளை விரித்து அவன் முகத்திற்கு நிழலைக்கொடுத்தது. அவனுஞ் சுகமாய் நித்திரைசெய்து வாயைத் திறந்தபொழுது அங்கிருந்த காகம் மலத்தை அவன் வாயில் போட்டுவிட்டு ஓடிப்போயிற்று. உடனே அவன் எழுந்து மேலே பார்த்தபோது, அன்னத்தை மாத்திரங் கண்டு, அம்பினாலே எய்து அதனைக் கொன்றான். இது துர்ச்சனனோடு கூடி வசித்தலைப்பற்றியது. இனித் துர்ச்சனனோடு கூடிப்போன காடையின் கதையையும் சொல்லுகிறேன்.

காகத்தோடு கூடிப்போன காடையின் கதை

"'ஒரு முறை பறவைகளெல்லாங் கருடனிடம் போதல்வேண்டும்என்று சமுத்திரக்கரைக்குப் போயின. அப்போது ஒரு மரத்தின் கொம்பிலே வசித்த காகத்தோடு, அதன் அடியில் வசித்த காடையும் கூடிப் போயிற்று. போகும்போது காகம் ஓர் இடையனுடைய

தலையிலிருந்த பாத்திரத்திலிருந்த தயிரை இடையிடை எடுத்து உண்டுகொண்டு போயிற்று. இடையன் தயிர்ப் பாத்திரத்தைப் பூமியில் வைத்துவிட்டு மேலே பார்த்தான். பார்க்கையிற் காகத்தையும் காடையையும் கண்டான். காகம் விரைந்து ஓடிப்போயிற்று. காடை மெல்லச் சென்றது. இடையன் காடையைப் பிடித்துக் கொன்றான்' என்றது.

"அப்போது நான் 'கிளியே, என் இப்படிச் சொல்லுகிறாய்? நான் உன்னை அரசன்போல மேலாக மதிக்கின்றேன்' என்றேன். கிளி 'நீ தூர்ச்சனன் என்பதை உன் வார்த்தையினால் அறிந்துகொண்டேன்' என்றது. பின்னர் அந்த அரசனாலே அனுப்பப்பட்டு இங்கே வந்தேன். கிளியும் என் பின்னே வந்திருக்கின்றது. இவைகளை அறிந்து, செய்யவேண்டியதைச் செய்க" என்றது.

சக்கரவாகங் கேட்டு "இந்தக் கொக்கு இவ்வளவு தூரம் போய் இராசகாரியஞ் செய்தது. இது மூர்க்கருடைய செயலேயாம். மூர்க்கர் காரணமின்றி ஒருவரை ஒருவர் விரோதிக்கச் செய்வார்" என்றது. அரசன் "இப்போது செய்ய வேண்டியவைகளைச் சொல்லுக" என்றுகேட்கச், சக்கரவாகம் "அது தனியிடத்திற்சொல்ல வேண்டும். புத்திமான்கள் ஆகாரம், எதிரொலி என்பவைகளாலும், கண், முகம் என்பவைகளின் விகாரங்களினாலும் பிறர் கருத்தை அறிகின்றார்கள். ஆதலால் மந்திராலோசனை தனியிடத்திற் செய்யவேண்டும்" என்றது. அதன்பின் அரசனாகிய அன்னமும் மந்திரியாகிய சக்கரவாகமும் அங்கே இருக்க, மற்றையவைகளெல்லாம் வேறிடம் போயின. அப்போது சக்கரவாகம் "தேவரீர், கொக்குத்தானே இதனைச் செய்தது" என்றது.

அரசன் "இப்போது செய்யவேண்டியதைச் சொல்லுக" எனச், சக்கரவாகஞ் சொல்லுகின்றது: "தேவரீர் ஒற்றன் ஒருவனை அங்கே அனுப்பி அவ்விராச்சியத்தின் வன்மை மென்மைகளை அறிந்துகொள்ள வேண்டும். அந்த ஒற்றனோடு விசுவாசமுள்ள வேறோர் ஒற்றனுங் கூடப் போகவேண்டும். ஒற்றன் போய் மந்திர காரியங்களை அறிந்து நிச்சயித்துக்கொண்டு கூடப் போனவன் வழியாகச் சொல்லி அனுப்பவேண்டும். ஒற்றன் தீர்த்தம், ஆச்சிரமம் முதலிய இடங்களிலே சாஸ்திரங் கற்கச் செல்பவன்போலத் தவ வேடம் பூண்டு செல்லல் வேண்டும். நிலத்திலும் நீரிலுஞ் செல்லத்தக்க இந்தக் கொக்குத்தானே ஒற்றனாய்ச் செல்லத்தக்கது. ஆதலால் இதனையும் இன்னுமொரு கொக்கினையும் அனுப்பல்வேண்டும். அனுப்பியபின் மற்றைச் சனங்களெல்லாம் கோட்டைக்குள்ளே நிற்றல் வேண்டும். ஒற்றன் வரும் வரையும் இந்த இரகசியம் வெளிப்படலாகாது" என்றது. அரசன் ஆலோசித்து "மேன்மையான ஒற்றன் கிடைத்தது" எனச் சக்கரவாகம் "எங்களுக்கு வெற்றியுங் கிடைத்தது" என்றது.

இப்படியிருக்கையிலே வாயிலாளன் வந்து அரசனை வணங்கித் "தேவரீர், சம்புத்தீவினின்று வந்த கிளி ஒன்று வாயிலிலே நிற்கின்றது" என்றான். அரசன் மந்திரியாகிய சக்கரவாகத்தை நோக்கச், சக்கரவாகம் "அதனை இப்போது ஒருவீட்டில் வைத்திருந்து பின்னர்க் கொண்டுவந்து காட்டு" என்றது. வாயிலாளனும் அப்படியே செய்தான். அரசன் யுத்தம் நேரிட்டது எனச், சக்கரவாகம் சொல்லுகின்றது. "ஆராயுமுன் போர் செய்தற்காவது பூமியைக் கைவிடுதற்காவது புத்திசொல்

பவன் மந்திரியல்லன். பகையை வெல்ல முயலல்வேண்டும். போரினாலே பகையைவெல்லல் எப்போதும்வாயாது. சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் நான்கினுளுமாவது தனித்தனி ஒவ்வொன்றினாலாவது பகையை வெல்லல் வேண்டும். இப்போது சம்பவிக்கும் யுத்தத்திலே செயற்பாலதை எண்ணிச் செய்யக் கடவோம். அந்தச் சித்திரவர்ண ராசனோ மிக்க பெலவான். பெலவானோடு போர் புரிவதற்குப் பிரமாணமில்லை. ஆயினும் ஏற்ற காலமும், ஏற்ற இடமும், உபாயமும் நோக்கிச் செய்யின், பெலவானைப் பெலமில்லாதவனும் வெல்லக் கூடும். கோட்டை ஆயத்தஞ் செய்யும் வரையும் அந்தக் கிளியை இங்கே மறித்துப் பொழுதுபோக்கவேண்டும்.

“கோட்டை அரசனுக்கு அவசியம் வேண்டும். கோட்டையில்லாத அரசன் பகைவரால் வெல்லப்படுதல் நிச்சயம். கோட்டைக்குள்ளே நிற்பவனொருவன் நூறு வீரரோடு போர் செய்வான். கோட்டைக்குள்ளேநிற்கும் நூறு வீரர் பதினாயிரம் வீரரோடு போர் செய்வர். கோட்டை மதில், அகழி முதலியவற்றோடு சேர்ந்திருத்தல் வேண்டும்” என்றது. கோட்டை ஆயத்தஞ் செய்தற்கு மந்திரி சொற்படி நாரை நியமனம் பெற்றது. நாரை கோட்டையிலே தேடிவைக்கவேண்டிய பொருள்களெல்லாவற்றையுந் தேடி வைத்தது.

பின் சிங்களத்தீவினின்று வந்த மேகவர்ணன் என்னும் காகத்தோடு பேசவிரும்பிய அரசனைச் சக்கரவாகம் நோக்கித் “தேவரீர், காகமோ சத்துரு பக்கத்துள்ளது. நிலத்திற் செல்லுந் தன்மையுடையது. அதனை ஏற்றுக்கொள்ளுவது எப்படி? தன் பக்கத்தாரைவிட்டுச் சத்துரு பக்கத்தாரைச் சேர்வோன் நீலவர்ண நரியைப்

போலக் கொல்லப்படுவான்” என்றது. “அக்கதை யாது” என்று அரசன் கேட்கச், சக்கரவாகம் சொல்லுகின்றது.

நீல நரியின் கதை

“ஒரு நகரியின் சமீபத்திலே தன்னிட்டப்படி திரிந்த நரி ஒன்று நீலமிட்ட பாத்திரம் ஒன்றுள் விழுந்து மேலெழுதற்கு வலியின்றி இறந்ததுபோலத் தன்னைக் காட்டிக்கொண்டு கிடந்தது. அந்தப் பாத்திரமுடையவன் வந்து நரியைத் தூக்கி எடுத்துத் தூரத்திற் கொண்டு போய் எறிந்துவிட்டான். அது காட்டிற் போய்த் தன் நீல வர்ணத்தை நோக்கி, நரிகளை வருவித்து ‘பகவதியாகிய வனதேவதை இக்காட்டுக்கு அரசனாக ஓடதிரசங்களைக்கொண்டு என்னை அபிஷேகஞ் செய்திருக்கின்றது. என்னிறத்தைப் பாருங்கள். இக் காட்டிலே இன்று தொடங்கி எக்காரியமும் என்னுடைய ஆஞ்ஞைப்படி செய்யவேண்டும்’ என்றது. நரிகளும் அதன் நிறத்தாலே மயங்கி அதனை நமஸ்கரித்துத், ‘தேவரீர் சொல்லியபடி ஆகுக’ என்றன.

“பின் எல்லா வனவாசிகளிடத்தும் அதற்கு அதிகாரம் உண்டாயிற்று. சிங்கம், புலி முதலிய உத்தம பரிசனங்களும் அதனை வந்தடைந்தன. அவை வந்தடைந்தபின், அது நரிகளை அவமானஞ்செய்து தூரத்தில் விலக்கிற்று. அதனாலே நரிகளெல்லாம் துயரடைந்திருந்தலை ஒரு விருத்தநரி பார்த்து, ‘அஞ்சாதிருங்கள்; அவமானஞ் செய்த இதனை உபாயத்தினாலே வெல்லவேண்டும். சிங்கம், புலி முதலியன எல்லாம் நிறத்தினாலே மயங்கி இதனை இராசா என்று கருதியிருக்கின்றன. இதனை நரி என்று அவை அறியும்படி உபாயஞ்

செய்யவேண்டும். நீங்கள் எல்லீரும் சாயங்காலமானவுடனே அதற்குக் கிட்டப்போய் நின்று சத்தமிடுங்கள்' என்றது. நரிகள் அப்படியே சத்தமிட்டன. அதுவுஞ் சத்தமிட்டு நரி என்றறியப்பட்டுப் புலியினாற் கொல்லப்பட்டது" என்றது. அரசன் அதனைக்கேட்டு "அப்படியாயினும் காகம் தூரத்திலிருந்து வந்தமையால் யாமுஞ் சிலகாரியம் விசாரிக்க வேண்டும்" என்ன, மந்திரி அரசனை நோக்கி "வேந்தே, ஒற்றும் அனுப்பப்பட்டது. கோட்டையும் ஆயத்தமாயிற்று. கிளியையும் கண்டு எங்கள் கருத்தைச் சொல்லியனுப்பவேண்டும்" எனறது.

பின்னர் ஒரு சபை கூட்டப்பட்டது. கிளியும் காகமும் வந்தன. கிளி ஆசனத்திலேறி இருமாந்திருந்து இராசாவை நோக்கி "இரணியகருப்பரே, 'உமது சீவியத்திலும் செல்வத்திலும் உமக்குப் பிரியமிருந்தால் விரைந்து வந்து நமது பாதங்களை வணங்குக. அதற்குப் பிரியமில்லையாயின். நிலையாயிருத்தற்கு வேறிடம் போகவேண்டும் என்று நினைத்துக்கொள்க' என்று சித்திரவருணராசா உமக்கு ஆஞ்ஞாபிக்கின்றது" என்று சொல்லிற்று. இரணியகர்ப்பராசன் கோபங்கொண்டு "இந்தக் கிளியைக் கழுத்திலே பிடித்துத் தள்ளிவிடத் தக்கவர் இச்சபையிலே ஒருவரும் இல்லையா?" என்றது. அப்போது மேகவர்ணனாகிய காகம் எழுந்து "வேந்தே, எனக்கு அனுமதி செய்யின், இந்தக் கிளியைக் கொன்றுவிடுவேன்" என்றது. அப்போது மந்திரியாகிய சக்கரவாகஞ் சொல்லுகின்றது: "அப்படிச்செய்தல் நீதியன்று. முதியோரில்லாத சபை சபையன்று. சபையிலே நீதி சொல்லாதவரும் முதியோரல்லர். சத்தியமல்லாதது நீதி

யன்று. இராசாவுக்குத் தூதனே முகம். தூதன் மிலேச்சனாக இருந்தாலும் அவனைக் கொல்லலாகாது. கொல்லும்படி ஆயுதங்களை எடுத்தாலும் தூதன் வேறுவிதமாகச் சொல்லமாட்டான். தூதன்கொல்லப்படத்தக்கவனல்லன். ஆதலால் எல்லாவற்றையுஞ் செய்கிறான்" என்றது.

பின்னர்த் தூதனாகிய கிளி நன்றாக உபசரிக்கப்பட்டு விந்தியமலையிற் போய்ச் சித்திரவர்ணராசனைக் கண்டு வணங்கிற்று. சித்திரவர்ணன் கிளியை நோக்கிக் "கற்பூரத்தீவு எப்படிப்பட்டது? என்ன விசேடம்?" என்று வினாவிற்று. "கற்பூரத்தீவோ தேவலோகந்தான். போருக்கு முயற்சி செய்யவேண்டும்" என்றது. அதனைக் கேட்ட சித்திரவருணராசன் பெரியோரை அழைத்துப் பலவாறு ஆலோசித்துக்கொண்டு போருக்குப் புறப்பட்டுப் பொதியமலைச்சாரலில் வந்திருந்தது. அதனை ஓர் ஒற்றன் வந்து இரணியகர்ப்பராசனுக்கு அறிவிக்க, அது "கோட்டையைக் கணந்தோறும் ஆராயவேண்டும். கோட்டையில் ஓர் ஒற்றன் மறைவாக வந்திருத்தலை அறிந்தேன்" எனறது. அதுகேட்ட சக்கரவாகம் இராசாவை நோக்கி "அப்படி வந்திருப்பது காகம்போலும்! அது சந்தேகம் கொள்ளத்தக்கது" என்றது. இராசா "காகம் இடையில் வந்ததாயினும் அபகாரஞ் செய்யமாட்டாது. அந்நியனாயினும் நன்மை செய்பவனே சுற்றத்தவனும். சுற்றத்தவனாயினும் தீமைசெய்பவனே அந்நியனும். சூத்திரகன் என்னும் அரசனுக்குச் சேவகனாயிருந்த வீரவரன் என்பவன் சொற்பகாலத்திலே தன்புத்திரனைப் பலிகொடுத்தான்" என்றது. சக்கரவாகம் "அக்கதை யாது?" என்று கேட்க, அரசனாகிய அன்னம் சொல்லுகின்றது.

வீரவரன் கதை

“நான் சூத்திரகன் என்னும் அரசனுடைய கிரீடா வாவியிலே வசிக்கும்பொழுது வீரவரன் என்னும் அரச குமாரன் ஒருவன் வந்து அரசனைக் கண்டு ‘தேவரீர் என்னைச் சேவகனாக வைத்து ஒருநாளைக்கு நானூறு பொன் தரவேண்டும்’ என்று கேட்டான். அப்போது மந்திரிமார்கள் அரசனை நோக்கி, ‘ஒரு தொகையைக் கொடுத்து, நான்கு நாளைக்கு வைத்து இவனுடைய சாமர்த்தியத்தை அறிவோம்’ என்றார்கள். அரசனும் அப்படியே அவனைச் சேவகனாக வைத்து, அவன் தன் சம்பளத்தை எப்படிச் செலவு செய்கிறான் என்று ஆராய்ந்தான். வீரவரன் அச்சம்பளத்திற் பாதியைத் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் கொடுத்தான். மற்றைய பாதியைத் தன் செலவிலே விட்டான். இவைகளெல்லாவற்றையும் எப்பொழுதும் செய்து முடித்துக்கொண்டு இரவும் பகலும் அரசன் வாயிலிற் காவல் செய்தான். அரசன் கட்டளையிடும்பொழுது வீட்டுக்குப் போவான். பின் ஓர் இராத்திரியிலே அரசன், சயனித்திருக்கும்பொழுது அழுகுரல் ஒன்று கேட்டு வாயிலில் வந்து, வீரவரனை நோக்கி “இவ்வழுகைச் சத்தத்தைத் தொடர்ந்து பார்த்துவா” என்று அனுப்பினான். அனுப்பியபின் ‘இவ்விருளிலே தனியே இவனை அனுப்பினேன்’ என்று துயருற்று, வாட்படையையும் எடுத்துக்கொண்டு தானும் அவன்பின் சென்றான். முன்போன வீரவரன் ஒருபெண் அழுது நிற்றலைக் கண்டு அவளை நோக்கி. ‘நீ யார், ஏன் அழுகின்றாய்?’ என்று கேட்டான். அப்பொழுது அவள், ‘நான் சூத்திரக ராசாவினுடைய இலக்குமி. துர்க்கைக்குச் செய்த குற்றத்தினால் இன்னும் மூன்று

நாளில் இராசா இறந்துவிடப்போகிறார். நானும் துணையில்லாதவளாய்ப்போவேன் என்று அழுகிறேன்’ என்றாள்.

“வீரவரன் அவளை நோக்கி ‘நீ இன்னும் நெடுநாளிங்கிருத்தற்கு வழி யாது?’ என்று கேட்டான். இலக்குமி, ‘முப்பத்திரண்டிலக்கணங்களும் அமைந்த உன் புத்திரனாகிய சத்திதரனுடைய தலையைத் துர்க்கைக்குப் பெலி கொடுப்பாயாயின் இராசாவும் நெடுங்காலம் சீவிப்பார்; நானுஞ் சுகமாய் இருப்பேன்’ என்று சொல்லி மறைந்தாள். வீரவரன் தன் வீட்டிற்குப் போய் நித்திரையாய்க் கிடந்த மனைவியையும் மகனையும் எழுப்பி இலக்குமி சொன்ன வார்த்தைகளை எல்லாஞ் சொன்னான். அவ்விருவரும் மகிழ்ச்சியடைந்து அவனுடைய எண்ணத்துக்கு உடன்பட்டார்கள். பின்னர் எல்லாரும் துர்க்கை கோயிலுக்குப் போனார்கள். வீரவரன் துர்க்கையைப் பூசை செய்து தன் மகனுடைய தலையை வெட்டியபின், புத்திரனின்றிச் சீவித்தல் அரிது என்று தன்னுடைய தலையையும் வெட்டினான் இவ்விருவரையும் இழந்து சீவித்தல் அரிது என்று வீரவரன் மனைவியும் தன் தலையை வெட்டினாள். இவைகளை நோக்கி நின்ற அரசனும் ‘இவனை இழந்த இராச்சியத்தினாற் பயன் யாது?’ என்று சொல்லித் தன் தலையை வெட்டுதற்கு வாளை எடுத்தான். அப்பொழுது துர்க்கை வெளிப்பட்டு ‘மகனே, இந்த மூடத்தன்மை போதும்’ என்று தடுக்க, இராசா வணங்கி ‘இந்த இராசபுத்திரன் மனைவியோடும் மகனோடும் சீவிக்கவேண்டும்’ என்று வரங் கேட்டான். அப்படியே துர்க்காதேவியும் அனுக்கிரகம் செய்தாள். அதன்பின் அரசன் வீரவரன் முதலியோர் காணாமல் அரண்மனையிற்போய் முன்போல நித்திரை செய்தான்,

வீரவரனும் முன்போல வாயிலிலே வந்து நின்றான். அரசன் வீரவரனை நோக்கி 'அழுகைச் சத்தம் யாது?' என்று கேட்டான். வீரவரன் 'அழுத பெண் மறைந்து விட்டாள். இஃதன்றி வேறொரு புதுமையும் இல்லை' என்றான். அதனை அரசன் அதிசயத்தோடுங் கேட்டுச் சிந்திப்பான். 'இவனை எப்படிப் புகழலாம்? புருடலக்கணம் எல்லாம் இவனிடத்திலே அமைந்திருக்கின்றன' என்று பெரியோர்களை அழைத்து அவர்கள் சபையிலே அவனைப் புகழ்ந்து கூறி, அவனுக்குக் கருநாடக ராச்சியத்தையுங் கொடுத்தான். ஆதலால் இடையில் வந்தவன் விரோதியல்லன்" என்றது. சக்கரவாகம் "புண்ணியத்தால் அடையும் பேற்றினை நானும் புண்ணியஞ் செய்திருப்பேனாயின், அடைவேன். திரவிய வாஞ்சையுடைய நாவிதன் ஒரு பிச்சைக்காரனைக் கொன்று தானுங் கொல்லப்பட்டான்" என்றது. "அக்கதை யாது?" என்று அரசன் கேட்க, சக்கரவாகம் சொல்லுகின்றது.

நாவிதன் கதை

"அயோத்திமா நகரிலே வசித்த சூடாமணி என்னும் அரசன் திரவியம் பெற விரும்பி நெடுநாளாக சிவபெருமானை வழிபட்டு வந்தான். சிவபெருமானும் அவனுடைய கனவிலே தோன்றி அவனைநோக்கி, 'நீ இன்று காலையிலே சௌரஞ்செய்வித்தபின் கையிலே ஒருதடியை வைத்துக்கொண்டு உன் வீட்டு வாயிலிலே மறைந்து நில், அப்போது பிச்சைக்காரன் ஒருவன் உன் முற்றத்திலே வருவான். அவனைத் தடியினாலே அடித்துக்கொல். அவன் ஒரு பொன்னிறைந்த பாத்திரமாய்த் தோற்றுவான். அது கொண்டு சீவியகாலம் முடியும்வரையும்

சுகத்துடன் வாழ்வாய்' என்று சொல்லியருளினார். சொல்லியவாறே அவனுஞ் செய்து பொன்னிறைந்த பாத்திரமும் ஒன்று பெற்றான் இவையெல்லாவற்றையும் அங்கே சௌரஞ் செய்ய வந்த நாவிதன் கண்டு, 'நானும் திரவியம் பெறற்கு இதுவே நல்லதோருபாயம்' என்று சிந்தித்துப் பிச்சைக்காரன் வரவைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் பிச்சைக்காரனும் ஒருவன் வந்தான். நாவிதன் அவனைத் தடியினால் அடித்துக் கொன்றான். அதனை அதிகார புருடர்கள் அறிந்து விசாரணைசெய்து அவனையுங் கொன்றார்கள். ஆதலாற் புண்ணியச் செயலால் விரும்பியது பெறலாம்" என்றது.

இதனைக் கேட்டு அரசனாகிய அன்னம் சொல்லுகின்றது. "பகையரசனாகிய சித்திரவருணன் பொதியமலையருகிலே பாசறையிலேவந்திருக்கின்றான். இப்போது செய்யவேண்டியது யாது?" என்று வினாவிற்று. மந்திரியாகிய சக்கரவாகஞ் சொல்லுகின்றது; "அந்தச் சித்திரவருணன் மந்திரியாகிய கழுகு சொன்னதை அவமதித்திருத்தலால், அவனை இலகுவிலே வெல்லலாம். அவன் எங்கள் கோட்டைகளை முற்றுகை செய்யவரும் வழியிலே நின்று அவன் சேனைகளைக் கொல்லும்படி நாரை முதலியவைகளை ஏவிவிடவேண்டும்" என்றது. பின்னர்ப் போருண்டாயிற்று. போரிலே சித்திரவருணன் வென்று கோட்டைக்குள்ளே போய்த் திரவியங்களையும் எடுத்துக்கொண்டு மீண்டது.

சந்தி

பின்னர் அரச புத்திரர்கள் விட்டுணுசர்மரை நோக்கி "எங்களுக்குச் சந்தியையுஞ் சொல்லவேண்டும்" என்று கேட்க, விட்டுணுசர்மர் சொல்லத்தொடங்கினார். "இரணியகர்ப்பன், சித்திரவருணன் என்னும் அரசரிருவர்க்கும் யுத்தம் முடிந்தபின் மந்திரிகளாகிய கழுகு சக்கரவாகங்களின் வார்த்தையினாலே உடனே சந்தி செய்யப்பட்டது" என்றார். அரச புத்திரர்கள் "சந்தி எவ்வாறு செய்யப்பட்டது?" என்று கேட்க, விட்டுணுசர்மர் சொல்லுகின்றார்.

அன்னமும் மயிலும்

"எங்கள் கோட்டையிலே நெருப்பு வைத்தவன் சத்துருபக்கத்துள்ளான் ஒருவனோ? நமது பக்கத்துள்ளான் ஒருவனோ? யாவன்?" என்று அரசனாகிய அன்னங் கேட்க. மந்திரியாகிய சக்கரவாகம் சொல்லுகின்றது. "அரசனே உமது புது நண்பனாகிய மேகவர்ணன் என்னுங் காகத்தையும் அதன் பரிவாரத்தையும் இங்கே காணாமையால், அதுவே இதனைச் செய்தது என்று அநுமானிக்கிறேன்" என்றது. இதனைக் கேட்ட அன்னம் சிறிது நேரம் ஆலோசித்து "இந்தச் சம்பவம் விதியினால் வந்ததன்றி மந்திரியின் பிழையாவதன்று. முயற்சியினால் நன்கு செய்த காரியமும் விதியினால் அழிகின்றது" என்ன, மந்திரி சொல்லுகின்றது. "நன்மை சொல்லும் மித்திரனுடைய வார்த்தையைக் கேளாதவன் தடியினின்றும் வழுவி விழுந்த ஆமையைப்போலக் கெடுவான்" என்றது,

அரசனாகிய அன்னம் "அக்கதை எப்படி?" என்றுகேட்க, மந்திரியாகிய சக்கரவாகஞ் சொல்லுகின்றது.

அன்னமும் ஆமையும்

"மகத தேசத்திலே புல்லோற்பலம் என்னும் வாவியிலே அன்னங்களிரண்டு வாசஞ்செய்தன. அவற்றுள்ளே ஒன்றின் பெயர் சங்கடம்; மற்றதன் பெயர் விகடம். அவைகளோடு நட்புக்கொண்டு கம்புக்கிரீவன் என்னும் ஆமையும் வாசஞ்செய்தது அங்கே ஒருநாள் கரையார் வந்து 'இன்றைக்கு நாங்கள் இங்கே தங்கி, நாளைக் காலையில் இக் குளத்திலுள்ள மீன், ஆமை முதலியவைகளைப் பிடிக்க வேண்டும்' என்று பேசினார்கள். இதனைக்கேட்ட ஆமை அன்னங்களை நோக்கி 'அன்பர்களே, கரையாருடைய வார்த்தைகளைக் கேட்டீர்களா? யான் செய்ய வேண்டியது யாது?' என்றுகேட்க, அன்னங்கள் 'மெல்ல மெல்லப் பார்ப்போம்' என்றன. அதனைக்கேட்ட ஆமை 'அப்படியன்று. வியசனமுறுகின்றேன். வருமுன் காப்பவன், வருங்காற் காப்பவன் என்னும் மீன்கள் இரண்டுஞ் சுகம்பெற, வந்தபின் காப்பவன் என்னும் மீனோ அழிவடைந்தது' என்றது. அன்னம் 'அக்கதை யாது?' என்ன, ஆமை சொல்லுகின்றது.

மூன்று மீன்களின் கதை

"'முற்காலத்திலே வருமுன் காப்பவன், வருங்காற் காப்பவன், வந்தபின் காப்பவன் என்று மூன்று மீன்கள் இக்குளத்திலே வாசஞ்செய்தன. ஒருநாள் கரையார்கள் வந்து மீன்பிடிக்க வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள். அதனைக்கேட்ட மூன்று மீன்களும் ஆலோசனை செய்தன.

வருமுன்காப்பவன் உடனே வேறு குளத்திற்குப் போய் விட்டது. வருங்காற்காப்பவன் 'காரியஞ்சம்பவித்தபின், பார்த்துக்கொள்வோம்' என்று சொல்லி இங்கேயே தங்கிற்று. வந்தபின்காப்பவன் 'வரற்பாலது தவறாது வரும்' என்றது. பின்னர் வருங்காற்காப்பவன் வலைக்குள்ளே இறந்ததுபோலத் தன்னைக் காட்டிக்கொண்டு கிடந்து, நிலத்திலிட்டவுடனே ஆழ்ந்தசலத்திலே பிரவேசித்தது. வந்தபின்காப்பவனோ வலையில் அகப்பட்டிறந்தது. ஆதலால் வேறு வாவிக்குப் போக வழியைச் சொல்லுங்கள்' என்றது. அதனைக் கேட்ட அன்னங்கள் 'சலத்திலே செல்லும் நீ நிலத்திலே எப்படிச்செல்லுவாய்?' என்றன. ஆமை சொல்லுகின்றது. 'நீங்கள் இருவரும் ஒருதடியை எடுத்து வாய்களிலே சமமாகப் பிடித்துக்கொள்ளுங்கள். நான் அதனை வாயினாலே கவ்விக்கொண்டு தூங்குகிறேன். நீங்கள் என்னைக் கொண்டு போக வேண்டும்" என்றது. அன்னங்கள் 'உபாயத்தைச் சிந்திக்கும் புத்திமானே அபாயத்தையுஞ் சிந்திக்க வேண்டும். கொக்கொன்று பார்த்திருக்க, அதன் குஞ்சுகளைக் கீரிகள் உண்டன' என்றன. ஆமை 'அக்கதை எப்படி?' என்றுகேட்க, அன்னங்கள் சொல்லுகின்றன.

கீரியும் கொக்கும்

"'வடதேசத்திலே கிருத்திரகூடம் என்னும் மலைச் சாரலிலே போகும் நிருமதை யாற்றங்கரையிலுள்ள ஆலமரம் ஒன்றிலே சில கொக்குகள் வாசஞ்செய்தன. அம்மரத்தின்கீழுள்ள புற்றிலே பாம்புகளும்வாசஞ்செய்தன. அந்தப் பாம்புகள் கொக்குக் குஞ்சுகளை நாடோறுங் கொன்றுதின்றுவந்தன. குஞ்சுகள் இறந்த சோகத்தினால்

அழுகின்ற கொக்குகளின் குரல்களை ஒரு கிழக் கொக்குக் கேட்டு 'நீங்கள் அழவேண்டாம். மீன்களைப் பிடித்துக் கொண்டுவந்து கீரிகள் வசிக்கும் குகை தொடங்கி இப்பாம்புப் புற்று வரைக்கும் ஒவ்வொன்றாய்ச் சிதறிவையுங்கள். கீரிகள் அந்த உணவு கிடக்கும் வழியினாலே வந்து தங்களுக்குப் பகையாயுள்ள பாம்புகளைக் கொன்றுவிடும்' என்றது. பின்னர்க் கொக்குகள் அப்படிச் செய்தபோது கீரிகள் பாம்புகளைக் கொன்றுவிட்டு மரத்திலே இருந்த பறவைக் குஞ்சுகளையும் கொன்றுதின்றன. ஆதலாற்றான் உபாயத்தைச் சிந்திப்பவன் அபாயத்தையுஞ் சிந்திக்க வேண்டும்' என்றாம்.

"நாங்கள் உன்னைக் கொண்டுபோவதைக் காணுஞ் சனங்கள் யாதாயினும் பேசுவார்கள். அதனைக்கேட்டு நீயும் யாதாயினும் வாய்திறந்து பேசுவாயாயின், தடியினின்றும் வாய்வழுவக், கீழே விழுந்திறப்பாய். ஆதலால் நீ இருக்குமிடத்திலே இருத்தல் உத்தமம்' என்றன. அதனை ஆமை கேட்டு 'அப்படிப் பேசுவதற்கு நான் மூடனா? நான் ஒன்றும் பேசமாட்டேன்' என்றது அன்னங்களும் அந்த உபாயவழியாக ஆமையைக் கொண்டு போயின. அந்த ஆமையை இடையர்கள் கண்டு பின்னே ஓடிப்போய் 'ஆகா! இது மகா ஆச்சரியம்! பறவைகள் ஓர் ஆமையைச் சுமந்துகொண்டு போகின்றன' என்றார்கள். அவர்களுள்ளே சிலர் 'இந்த ஆமை விரைவில் விழுவது நிச்சயம்; விழுமாயின் இங்கேதானே இதனைப் பாகஞ்செய்து புசிப்போம்' என்றார்கள். சிலர் 'இல்லை; வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பாகஞ் செய்வோம்' என்றார்கள். சிலர் 'இல்லை, இல்லை; இக் குளக்கரையிற்றானே பாகஞ்செய்து புசிப்பேம்' என்றார்கள். இவ்வார்த்தை

களை ஆமை கேட்டுக் கோபங்கொண்டு, தான் சொன்னதையும் மறந்து 'உங்களுக்கு வாய்ச்சாம்பல் விழும்' என்றது. உடனே வாயாற் பற்றியுள்ள தடியினின்றும் வழுவிப் பூமியில் விழுந்து கொல்லப்பட்டது' என்றது.

அப்போது வேய்வு சென்றிருந்த கொக்கு அங்கே வந்து அரசனை நோக்கி "வேந்தே, நீர் கோட்டையைக் கணந்தோறுஞ் சோதிக்கவில்லை. கோட்டைக்கு நெருப்பு வைத்தது கோட்டைக்குள்ளிருந்த மேகவர்ணன என்னும் காகமே. மேகவர்ணன் கோட்டையை எரித்துவிட்டுப் போனபோது அதனைச் சித்திரவர்ணன் கற்பூரத்தீவுக்கு அரசனுக்கவேண்டும் என்றது பின்னர்ப் பிரதான மந்திரியாகிய கிருத்திரம் அரசனை நோக்கி 'நீசன் ஒருபோதும் உயர்ந்த நிலையிலே வைக்கப்படத் தக்கவனல்லன், வைக்கப்பட்டானாயின், புலியின் தன்மைபடைந்த எலி ஒன்று முனியைக் கொல்லத் துணிந்ததுபோலத் தனது தலைவனைக் கொல்லத் துணிவான்' என்றது. சித்திரவர்ணன் 'அக்கதை எப்படி?' என்று கேட்கக், கிருத்திரஞ் சொல்லுகின்றது.

முனிவனும் எலியும்

"'கௌதமாரணியத்திலே மகாதவர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய ஆச்சிரமத்திலே காகத்தின் வாயினின்றும் விழுந்த ஒரு எலிக் குஞ்சைக் கண்டு தயைகொண்டு சுளநெல்லரிசியைக் கொடுத்து வளர்த்தார். அதனை ஒரு பூனை கொன்று தின்னும்படி கருதிற்று. அதனை முனிவர் கண்டு தமது தவ வலிமையினாலே அந்த எலியைப் பூனையாக்கினார். அந்தப் பூனையை நாய் ஒன்று பயப்படுத்திற்று. பின்னர், அதனை

நாயாக்கினார். நாய்க்கும் புலியினாலே பெரும் பயமுண்டாயிற்று. பின்னர் நாயையும் புலியாக்கினார். இப்படிச் செய்தவிடத்தும் எலியினின்றும் புலியை விசேடமாக எண்ணினாரல்லர்.

"'பின்னர்ச் சனங்களெல்லாம் அந்தப் புலியை நோக்கி 'இந்த முனிவராலே எலி ஒன்று புலியாக்கப்பட்டது' என்றார்கள். அதனைப் புலிகேட்டுத் துயருற்று முனிவராலே தனக்கு அபகீர்த்தி வந்ததென்று கருதி முனிவரைக் கொல்லமுயன்றது. அதனை அறிந்தமுனிவர் அப்புலியை முன்போல எலியாக்கினார். அன்றியும், அரசனே, ஒருவனை உயர்பதவியில் வைத்துவிட்டால், அவனை மறுபடி அதினின்றும் நீக்குலது இலகுவாகச் செய்யத் தக்கது என்று எண்ணவேண்டாம். ஒரு கொக்கானது பல மீன்களைக் கொன்றபின் ஒரு நண்டினைப் பிடிக்க முயன்று அதனாற் கொல்லப்பட்டது' என்றது. சித்திரவர்ணன் 'அக்கதை என்ன?' என்று கேட்கக், கிருத்திரஞ் சொல்லுகின்றது.

நண்டும் கொக்கும்

"'மாளவ தேசத்துள்ள பதுமகருப்பம் என்னும் வாவியிலே வயோதிகமான கொக்கு ஒன்று வியாகுலமடைந்தவனைப்போலத் தன்னைக் காட்டிக்கொண்டு இருந்தது. அதனை நண்டு ஒன்று நோக்கி 'நீ இங்கே உணவை விட்டு நிற்பது என்னை?' என்று கேட்டது. அது, 'மீன்களே என்னுடைய சீவனம். அவைகளைக் கொல்லவேண்டும் என்று கரையார் பேசினது கேட்டேன். உணவு நட்டம் போதலினால் மரணஞ் சம்பவிக்கும் என்று துயருறுகிறேன்' என்றது. அதனைக்கேட்ட மீன்கள் இக்

கொக்கு எங்களுக்கு உபகாரி' என்றுகருதிக், கொக்கினை நோக்கி 'நாங்கள் உயிர்பிழைத்தற்கு உபாயம் யாது?' என்று வினவின.

"'அவைகளைக் கொக்கு நோக்கி 'நீங்கள் இடையூறின்றி வசித்தற்கு வேறொரு வாவி இருக்கின்றது. உங்களை ஒவ்வொன்றாக அங்கே கொண்டுபோய் விடுகிறேன்' என்றுசொல்லி, அவைகளைத் தனித்தனி கொண்டுபோய் ஓரிடத்திலே வைத்துக் கொன்று தின்றுவிட்டு 'அவைகளை நான் வேறொரு வாவியிலே கொண்டுபோய் விட்டிருக்கிறேன்' என்றது. அதனை நோக்கிய நண்டு ஒன்று, 'என்னையும் அங்கே கொண்டுபோய் விடுக' என்னக், கொக்கும் நண்டின் மாமிசத்திலே விருப்புடையதாய் அதனை அவ்விடத்திற்கு எடுத்துக்கொண்டு போயிற்று. அங்கே மீன் முள்ளுகள் சிதறிக்கிடத்தலை நண்டு நோக்கி நானுங் கொல்லப்பட்டேன். ஆயினும் சமயத்துக்கு ஏற்ற காரியத்தைச் செய்வேன்' என்று சிந்தித்துச், சமயம் நோக்கிக் கொக்கின் கழுத்தைப்பற்றி முறித்துவிட்டது' என்றது. அதனைச் சித்திரவருணன் நோக்கி 'மந்திரியே, கற்பூரத்தீவு செழித்த பூமி. மேகவர்ணனை அதற்கரசனாக்கினால், அவன் அங்குள்ள உத்தம வஸ்துக்களையெல்லாம் நமக்குத் திறையாக அனுப்புவான்' என்றது. அப்போது மந்திரி சிந்தித்து 'வாராத காரியத்தை நினைத்து மகிழ்வோன் பாத்திரங்களை உடைத்த பிராமணன்போல அவமானமடைவான்' என்றது. 'அக்கதை எப்படி?' என்று அரசன் கேட்க மந்திரியாகிய கிருத்திரம் சொல்லுகின்றது.

சராவமுடைத்த பிராமணன் கதை

"'தேவகோட்டம் என்னும் நகரிலே இருந்த தேவசன்மன் என்னும் பெயருடைய வேதியனுக்குப் பொரியரிசி நிறைந்த சராவம் ஒன்று கிடைத்தது. அவன் அதனை எடுத்துக்கொண்டு போகும்போது வெயிலினால் இளைத்து மட்கலங்கள் நிறைந்த குயவனுடைய மண்டபத்திலே நித்திரை செய்தான். அப்போது பொரியரிசியைப் பாதுகாக்கும்பொருட்டு ஒரு தடியையுங் கையிலே எடுத்துக்கொண்டு 'நான் இந்தப் பாத்திரத்தை விற்றுப் பத்து ரூபாய் பெறுவேனாயின், அதனைக்கொண்டு குடம், சராவம் முதலியவைகள் வாங்கி விற்று, அதனாலே பெருகிய திரவியங்களினாலே பின்னும் பின்னும் குவை குவையாகிய புடவை முதலியவைகளை வாங்கி விற்று வியாபாரஞ் செய்து, பெருந்தொகைப் பொருள் சம்பாதித்து நான்கு விவாகஞ் செய்வேன். விவாகஞ் செய்த மனைவியர்களுள்ளே அழகுடையவளிலே பற்று வைத்திருப்பேன். மனைவியர்கள் ஒருவர்க்கொருவர் பொறாமைகொண்டு விரோதிகளாவர்களாயின் எல்லாரையும் இத்தடியினால் அடிப்பேன்' என்று தடியை வீசினான். அதனால் பொரியரிசிப்பாத்திரம் பொடியாயிற்று. மட்கலங்களும் உடைந்தன. அதனை அறிந்த குயவன் வந்து வேதியனைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டான்' என்றது.

"அப்போது அரசன் கிருத்திர மந்திரியை நோக்கிச் 'செய்யவேண்டியதைச் சொல்லுக' என்றது. கிருத்திரம் சொல்லுகின்றது. 'நாங்கள் எங்கள் தேசத்துக்குத் திரும்பிப் போகவேண்டும். போகாதிருந்தோமாயின் சமீபித்திருக்கும் மழைக்காலத்திலே சமபெலமுடைய

சேனைகளோடு பின்னும் ஒருபோது யுத்தம் நேரிடும். எங்கள் தேசத்துக்குப் போவதும் பிரயாசமாயிருக்கும். சுகத்தையும் மகிமையையும் அடையும்பொருட்டுச் சத்துருவோடுசமாதானஞ்செய்துகொண்டுபோகக்கடவோம். கோட்டையைப் பிடித்துக் கீர்த்தியைப் பெற்றுக்கொண்டோம். சில காலத்திலே சம வீரமுடைய இருவர்க்கும் நாசமுண்டாகும். சம பலமுடைய சுந்தர், உபசுந்தர் என்னும் இருவரும் ஒருவரால் ஒருவர் கொல்லப்பட்டனர்' என்றது. அரசன் 'அக்கதை என்ன?' என்று கேட்க, மந்திரி சொல்லுகின்றது.

சுந்தோபசுந்தர் கதை

"'முற்காலத்திலே சகோதரர்களாகிய சுந்தர், உபசுந்தர் என்னும் இருவரும் மூன்றுலகத்திலும் அரசியல் நடாத்தவேண்டும் என்று கருதிச் சரீரத்தை வருத்திச் சிவபிரானைப் பூசித்து வந்தார்கள். சிவபிரான் மகிழ்ச்சியுற்று 'வேண்டிய வரத்தைக் கேளுங்கள்' என்றார். சரசுவதியினுடைய செயலால், அவர்கள் தாங்கள் கேட்க விரும்பியதை விட்டு வேறொன்றைக் கேட்டார்கள். 'கடவுளே, எமக்கு மனைவியாக ஒரு பேரழகுள்ள பெண்ணைக் கொடுத்தருளும்' என்றார்கள். சிவபிரான் அவர்களுக்குப் பேரழகுள்ள திலோத்தமையைக் கொடுத்தார்.

"'பின்னர் அவர்கள் அவளுடைய பேரழகினாலே மயங்கிப் பாவம் என்னும் இருளினாலும் மூடப்பட்டு, இருவரும் தனித்தனி அந்தப் பெண்ணை எனக்கெனக்கு என்று சொல்லிக் கலகஞ்செய்து தங்களாலே முடிவு செய்ய இயலாமல் ஒரு மத்தியஸ்தனைக் கேட்கவேண்டும் என்று நிச்சயித்தபோது, சிவபெருமான் பிராமண

வேடங்கொண்டு வெளிப்பட்டு வந்து 'நீங்களிருவருஞ் க்ஷத்திரிய தருமமுடையவர்களாதலால், யுத்தம் செய்வதே தகுதியாகும்' என்றார். அப்படியே அவர்களிருவரும் ஒருவரோடொருவர் யுத்தஞ் செய்து இருவரும் நாசமாயினர்' என்றது.

"அரசன் 'இதனை முன்னரே எனக்கேன் சொல்லவில்லை?' என்றபோது, மந்திரி சொல்லுகின்றது, 'இந்த இரணியகர்ப்பராசன் சமாதானஞ் செய்தற்குரியவன். சத்தியவான், ஆரியன், தருமசீலன், அநாரியன், சகோதரக் கூட்டமுடையவன், பெலவான், பலபோரை வென்றவன் என்னும் எழுவரோடுஞ் சந்திசெய்தல் வேண்டும். இக்குணங்களுடைய இரணியகர்ப்பராசனோடு சமாதானஞ் செய்தல் தகுதி' என்றது" என்று சொல்லிற்று.

பின்னர்ச் சக்கரவாகம் ஒற்றுச் சென்றுவந்த கொக்கைநோக்கி "நீ பெயர்த்தும் சத்துருவின் பாசறைக்குப் போய்க் காரியங்களை அறிந்துவா" என்றது. இரணியகர்ப்பன் சக்கரவாகத்தை நோக்கிச் "சந்திசெய்யத் தகாதவர் யாவர்?" என்றது. "பாலகன், விருத்தன், நெடுங்காலரோகி, ஞாதிகளால் விடப்பட்டவன், பயமுடையவன், உலுத்தன், உலுத்த சனங்களையுடையவன் முதலியோரோடு சந்தி செய்யப்படாது. இன்னும் கேளும். நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் இவை அறுகுணங்கள் எனப்படும். வினைதொடங்கல், பொருளும் படையும் சேர்த்தல், காலமு மிடமுமறிதல், இடையூறு நீக்கல், வேறல் என்னும் இவை ஐவகைத் தொழில் எனப்படும். கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்னும் இவை நால்வகை உபாயம் என்று சொல்லப்படும். அறிவு,

ஆண்மை, பெருமை என்னும் இவை மூவகையாற்றல் என்று சொல்லப்படும். இவைகளை ஆலோசித்து நடப்பவன் வெற்றியடைவான்.

“அரசே, மகாமந்திரியாகிய கிருத்திரம் சமாதானஞ் செய்யவேண்டும் என்று சொன்னாலும், முந்தின வெற்றி கருதிச் சித்திரவர்ணராசன் அச்சொல்லைப் பொருட்படுத்தமாட்டான். ஆதலாலே சிங்களத்துவீப ராசனாகிய மகாபலன் என்னும் நாரையைக்கொண்டு சம்புத்தீவிலே ஒரு கலகம் எழுப்பவேண்டும்” என்றது. இரணியகர்ப்ப ராசா “அப்படியாகுக” என்று சொல்லி ஒரு கடிதம் எழுதி மகாபலனுக்கு அனுப்பிற்று. அந்தச் சமயத்தில் சித்திரவர்ணன் பாசறைக்கு ஒற்றாகச் சென்ற கொக்கு வந்து அங்கு நடந்தவற்றைச் சொல்லிற்று. “தேவரீரோடு சந்தி செய்யலாமா அன்றா என்ற பேச்சு நிகழ்ந்தபோது கிருததிரம் அரசனை நோக்கி ‘அங்கே நெடுங்காலம் வசித்த மேகவர்ணன் இரணியகர்ப்ப ராசன் குணமுடையனோ அல்லனோ என்பதை அறியமாட்டாதா?’ என்றது.

“அப்போது தித்திரவருணன் மேகவருணனை அழைத்து ‘வாயசமே, அந்த இரணியகருப்பராசன் எவ்வியல்புடையவன்? சக்கரவாக மந்திரி எவ்வியல்புடையது?’ என்று கேட்க, மேகவர்ணன் சொல்லுகின்றது. ‘அந்த இரணியகர்ப்பன் தருமனுக்குச் சமமான மேன்மையுஞ் சத்தியமுமுடையவன். சக்கரவாகத்துக்குச் சமமான மந்திரி கிடையாது’ என்றது. ‘அப்படியாயின், இரணியகருப்பன் எப்படி வஞ்சிக்கப்பட்டது?’ என்று அரசன் கேட்க, மேகவர்ணன் புன்னகைகொண்டு ‘வேந்தே, நம்பிக்கையுள்ளவர்களை வஞ்சிப்பது இலகுவன்றோ? அந்த மந்திரி முதலிலே என்னை அறிந்துகொண்டது. இராசா பெரிய மனிதன்; அதனால் வஞ்சிக்கப்பட்டது. தூர்ச்சனனைத் தன்போலச் சத்தியம் பேசுபவனாக எண்ணுவோன், வெள்ளாட்டினால் வஞ்சிக்கப்பட்ட பிராமணன் போல வஞ்சிக்கப்படுவான்’ என்றது. இராசா ‘அக்கதை யாது?’ என்று கேட்க, மேகவர்ணன் சொல்லுகின்றது

பிராமணனும் வெள்ளாடும்

“‘கௌதமாரணியத்திலே ஒரு யாகத்தின்பொருட்டுப் பிராமணன் ஒருவன் வேறு கிராமத்திற்குப்போய் வெள்ளாடு ஒன்று விலைக்கு வாங்கிக் கழுத்திலே வைத்துக்கொண்டு போனான். அதனைத் தூர்த்தர்கள் மூவர் கண்டு ‘யாதாயினும் ஒருபாயத்தால் இந்தவெள்ளாட்டை நாங்கள் கவரவேண்டும்’ என்று ஆலோசித்து அவன் போகும் வழியிலே, நெடுந்தூரத்துக்கு இடையிலே, மூன்று தூர்த்தர்களும் மூன்றிடத்திலே ஒவ்வொரு மரத்தடியிலே இருந்தார்கள். முன்னே நின்ற தூர்த்தன் பிராமணன் வருதலைக்கண்டு. ‘பிராமணா, நீ கழுத்திலே நாயொன்றைவைத்துச் சுமந்துகொண்டு போவதென்ன?’ என்று கேட்டான். பிராமணன் ‘இது நாயன்று; யாகத்துக்குரிய ஆடு’ என்று சொல்லிவிட்டுப் போனான். பின்னர் அப்பால் நின்ற இரண்டாந் தூர்த்தனும் அப்படியே கேட்டான். பிராமணன் வெள்ளாட்டைப் பூமியிலே வைத்துவிட்டுத் திரும்பத் திரும்பப் பார்த்துப் பின்னுங் கழுத்திலே வைத்துக்கொண்டு போனான். தீயவர்களுடைய வார்த்தையினாலே நல்லோருடைய புத்தி தடுமாறுகின்றது. தீயவர்களை விசுவாசிப்பவன் சித்திரகர்ணனைப்போல மரணமடைவான்’ என்றது. இராசா ‘அக்

கதை என்ன ?" என்று கேட்க, மேகவர்ணன் சொல்லு கின்றது :

காகமும் ஒட்டகமும் புலியும் நரியும்

" ' ஒரு காட்டிலே மதோற்கடன் என்னும் பெய ருடைய சிங்கம் ஒன்று காகம், புலி, நரி என்னும் மூன் றுந் தனக்கு ஏவல்செய்ய வீற்றிருந்தது. காகம், புலி, நரி என்னும் மூன்றுஞ் சஞ்சரிக்கும்போது ஒட்டகமும் ஒன்று வந்து சேர்ந்தது. அவை அதனைக் கொண்டு போய்ச் சிங்கத்தினிடத்தே சமர்ப்பித்துவிடச் சிங்கம் அதற்குச் சித்திரகர்ணன் என்னும் பெயரையுஞ் சூட் டித் தன் னேவலிலே வைத்தது. பின்னொருநாள் காகம், புலி, நரி என்னும் மூன்றும் சிங்கத்துக்கு உணவு கிடை யாமையால் ' சித்திரகர்ணனைக் கொல்லும்படி செய்வோம். இந்த முள்ளுத்தின்னியினால் எங்களுக்குப் பயன்யாது' " என்று சிந்தித்தன. ' சித்திரகர்ணன் எங்கள் சுவாமியி னாலே அபயவார்த்தை சொல்லித் தன் சேவகத்தில் வைக்கப்பட்டிருக்க, இந்தக் காரியம் எப்படிச் சம்பவிக் கும் ?' என்று புலி கேட்டது. அதற்குக் காகஞ்சொல்லு கின்றது : 'இந்தச் சமயத்திலே எங்கள் சுவாமி சுகங் குறைந்திருத்தலாற் பாவத்துக்குப் பயப்படமாட்டார். பசியினாலே வருந்துவோன் தன் மனைவியையும், புத்திர னையுங் கைவிடுவான் ; எந்தப் பாவத்தையுஞ் செய்வான். வெறியன், தூர்த்தன், பித்தன், நோயாளி, குரோத முடையவன், பசியுடையவன், உலுத்தன், பயமுடைய வன், விரைவுடையவன் என்னும் இவர்கள் நீதியுடையவ ராகார்.'

" ' இப்படியே நிச்சயித்துக்கொண்டு அவையெல் லாம் சிங்கத்துக்குச் சமீபமாகப் போயின. அவைகளை

நோக்கிச் சிங்கம் ' உணவின் பொருட்டு யாதாயினும் கிடைத்ததா ?' என்னக், காகம் 'வெகுபிரயாசைப்பட்டுஞ் சிறிதுங் கிடைக்கவில்லை ' என்றது. சிங்கம ' இப்போது சீவனத்துக்கு வழி யாது?' என்னக், காகம் ' உம்முடைய வசத்திலிருக்கும் உணவை விட்டதினாலேதான் இந்த நாசங்களெல்லாம் வந்தன ' என்றது. சிங்கம் ' என்னு டைய வசத்திலிருக்கும் உணவு யாது ?' என்னக், காகம் ' சித்திரகர்ணன் ' என்று செவியிற் சொல்லிற்று. சிங்கம் கையை நிலத்திலே அடித்துக் காதைப் பொத்தி ' நான் அவனுக்குப் பயப்படவேண்டாம் என்று வாக்குக்கொடுத் திருக்க, இது எப்படி முடியும் ? பூமிதானம், சொன்ன தானம், கோதானம், அன்னதானம் என்னும் தானங்க ளல்ல அபயதானமே மகாதானம் என்பர். அடைக்கலம் வந்தவனைக் காப்பவன் அசுவமேதப் பலனை அடைகின் றான் ' என்றது. அப்போது காகம் ' சுவாமி, அதனைத் தாங்கள் கொல்லல் தகாது. ஆயினும் அது தானே வந்து தன் சரீரத்தை உமக்குக் கொடுத்தாலோ ?' என்னச் சிங் கம் மௌனமாயிருந்தது. பின்னர் அவைகளுடைய உபா யத்தினாலே சித்திரகர்ணன் சிங்கத்தை நோக்கித் தன் சரீரத்தை ஏற்கும்படி கேட்டது. அப்படி அது சொல்லு முன், புலி பாய்ந்து கொல்ல, அதனை எல்லாம் உண்டன. ஆதலாற்றான் துர்ப்புத்தியினாலே நல்லோர் புத்தி தடு மாறுகின்றது என்றேன்.

" ' அதன்பின் அந்தப் பிராமணன் மூன்றுந் தூர்த் தனும் நாய் என்று சொல்லக் கேட்டு ஐயம் நீங்கி, வெள் ளாட்டைக் கீழேவிட்டு ஸ்நானஞ் செய்துகொண்டு வீட் டுக்குப் போனான். தூர்த்தர் வெள்ளாட்டைக் கொன்று தின்றார்கள் ' என்றது. இராசா மேகவர்ணனை நோக்கி

'மேகவர்ணா, நீ சத்துரு நடுவிலே நெடுங்காலமாக எப்படி வசித்தாய்? எப்படிச் சம்மானம் பெற்றாய்?' என்ன, மேகவர்ணன் 'சுவாமி காரியத்தைச் செய்துமுடிக்க விரும்புகின்றவர்களால் எதுதான் செய்யப்படமாட்டாது? பகைவனை விருத்த சர்ப்பம்போலப் புயத்தினாலேனும் சுமக்கவேண்டும்' என்றது. அரசன் 'அக் கதை யாது?' என்று கேட்க மேகவர்ணன் சொல்லுகின்றது.

கிழப்பாம்பும் தவளைகளும்

"'ஒரு பாழான உத்தியானத்திலே, மந்த விசர்ப்பன் என்னும் பெயருடைய பாம்பு ஒன்று, அதிகம் முதுமை அடைந்தமையினாலே உணவைத்தானும் தேடிக்கொள்ள இயலாமல், ஒரு குளக்கரையிலே வந்திருந்தது. அதனை ஒரு தவளை கண்டு 'பெரியவரே, ஏன் உணவு தேடாமல் இருக்கிறீர்?' என்றது. பாம்பு என்னுடைய சரித்திரத்தை உனக்குச் சொல்லி என்ன?' என்னத், தவளை 'எப்படியாயினும் உமது துக்க காரணத்தைச் சொல்லும்' என்றது. பாம்பு சொல்லுகின்றது. 'நல்லோனே, நான் இந்தப் பிரமபுரத்திலுள்ள கௌண்டின்னியர் என்னும் பிராமணருடைய மகனும், சகல சற்குண சம்பன்னனும், இருபது வயதுடையவனுமாகிய ஒருவனைத் துர்விதியினாலே கடித்தேன். அவனும் இறந்தான். கௌண்டின்னியர் புத்திரன் இறந்துகிடத்தலைக் கண்டு துயரினாலே மயங்கிப் பூமியிலே விழுந்து புரண்டார். அவருடைய சுற்றத்தவர்களும் வந்தார்கள். அப்போது கபிலர் என்னும் கிருகஸ்தர் கௌண்டின்னியரை நோக்கி 'நீர் மூடராயிருக்கிறீர். ஏன் புலம்புகிறீர்? பற்பல சேனைகளையுடையராயிருந்த அரசர்கள் பலர் இறந்துபோயினர். பிராணிகளுக்கு மரணம் தினந்தோறும் வருகின்றது. இரண்டு மரக்குற்றிகள் கடலிற் கூடிப் பிரிதல்போலப் பிராணிகள் கூடிப் பிரிகின்றன. இளமைப் பருவம், அழகு, சீவியம், பிரியமான கூட்டம், திரவியம் என்னும் இவையெல்லாம் அநித்தியம். இவ்வுலக சஞ்சாரமானது பிறப்பு, இறப்பு, வியாதி, நரை, வேதனை என்பவைகளிலே அமிழ்ந்து அளவுக்கு மிக்க துயருடையதாய் இருக்கின்றது. துக்கந்தானே உள்ளது' என்றார்.

"'இவையெல்லாம் கபிலர் சொன்னபின் கௌண்டின்னியரும் சோகங்கொண்டு 'இன்றுமுதல் மண்டூகங்களுக்கு வாகனமாயிரு' என்று என்னைச் சபித்தார். பின்னுங் கபிலர் கௌண்டின்னியரை நோக்கி 'உம்முடைய இருதயம் துயராலே மூடப்பட்டிருக்கின்றது. எனது புத்தியைக் கொள்ளமாட்டாது. ஆயினும் செய்யவேண்டியவைகளைக் கேளும். துட்ட சங்கத்தை முற்றவிடல்வேண்டும். அது முடியாதாயின் நல்லோர் சங்கத்தை அடையவேண்டும். நல்லவர் நட்பே துயர்க்கு மருந்தாகும். சிற்றின்ப விருப்பத்தையும் முற்றவிடவேண்டும்' என்றார். இப்படியே கபிலருடைய உபதேசத்தினாலே கௌண்டின்னியர் சோகம் நீங்கினார். அவருடைய சாபத்தைப்பெற்று மண்டூகங்களைச் சுமக்கும்படி நான் இங்கே வந்திருக்கிறேன்' என்றது. இக்கதையைக் கேட்ட தவளை போய் மண்டூக நாதனாகிய சலபாதன் என்பவனுக்குச் சொல்ல, அந்த மண்டூக நாதன் வந்து பாம்பின்மேலேறிற்று. பாம்பு அதனைச் சுமந்துகொண்டு மெல்ல மெல்ல உலாவிற்று. மற்றநாள் அந்தப் பாம்பினை மண்டூகம் நோக்கி 'நீ இன்றைக்கு மெல்ல நடப்பது என்னையோ?' என்று கேட்கப் பாம்பு 'உணவின்மையாற் பெலமில்லாதவனாய் இருக்கிறேன்' என்றது. மண்டூகநாதன் 'என் கட்டளைப்

படி தவளைகளைப் பிடித்து உண்' என்னப், பாம்பு தவளைகளை முற்றத் தின்றபின், இனி வாவியிலே தவளைகள் இல்லையென்று மண்டூகநாதனையும் பிடித்துத் தின்றது.'

"வேந்தே முற்காலத்து நடந்த கதைபோக, இரணியகர்ப்பராசன் சமாதானஞ் செய்யத்தக்கவன். அவனோடு சந்தி செய்யவேண்டு மென்பது என்னுடைய கருத்து" என்றது. இதனை அரசன்கேட்டு "உனக்கேன் இந்த ஆராய்வு? எம்மால் அது வெல்லப்பட்டதன்றோ? எங்கள் கட்டளைப்படி அது தாசனாய் இருந்தால் இருக்கட்டும்; அன்றேல் போர் செய்யவேண்டும்" என்றது. அப்போது சம்புத்தீவினின்று வந்த கிளி "சிங்களத் தீவுக்கு அரசனாகிய நாரை இப்போது சம்புத்தீவிலே ஆக்கிரமித்து நிற்கின்றது" என்றது. அரசன் கேட்டுத் திகைப்புற்று "என்ன என்ன!" என, கிளி பின்னுஞ் சொல்லிற்று. கிருத்திரங் கேட்டு "அடா சக்கரவாகமே! நல்லசெய்கை! நல்லசெய்கை!" என்றது. அரசன் கோபங்கொண்டு "நான்போய் அதனையும் அதன் சந்ததியையும் சமூலத்தோடு பிடுங்குவேன்" என்றது. இதனைக் கிருத்திர மந்திரி கேட்டுச் சிரித்து "அரசனானவன் ஒருமுறையிலே பல பகைவர்களுடன் வாதஞ்செய்த லாகாது. கர்வமுள்ள ஒரு பாம்பு பல புழுக்களால் கொல்லப்பட்டது. இங்கே சமாதானம் செய்யாமல் நாம் சென்றால் இரணியகர்ப்பன் கோபத்தோடும் வந்து நமது பின்னணியைத் தீர்க்குவான். காரியத்தை அறியாமற் கோபத்தின் வசப்பட்டவன், 'ஆராயாமற் கீரியைக் கொன்று பின்னர் துக்கப்பட்ட பிராமணன் போல, துயருறுவான்' என்றது. அரசன் "அந்தக் கதை யாது" என்று கேட்கக் கிருத்திர மந்திரி சொல்லுகின்றது.

கீரிப்பிள்ளையும் பிராமணனும்

"உச்சியினி நகரத்திலே மாதவன் என்னும் பெயருடைய பிராமணனொருவன் இருந்தான். அவனுடைய மனைவி பிள்ளையைக் காத்துக்கொள்ளும்பொருட்டு அவனை வைத்துவிட்டு ஸ்நானம் செய்யப் போனாள். பின்னர்ப் பிராமணனைச் சிராத்தத்திற்கு வரும்படி இராஜா ஒருவனை அனுப்பினார். அவனைப் பிராமணன் கண்டு வறுமையினாலே சிந்திப்பானாயினன்.

"'நான் விரைந்து போகாதிருப்பேனாயின், சிராத்தத்தை வேறொருவன் வாங்கிக்கொள்வான். கொடுக்கல் வாங்கல்களை அவ்வப்பொழுதே முடிக்கவேண்டும். முடிக்காதிருந்தால் அவற்றின் சாரத்தைக் காலம் கவருகின்றது. இங்கே என் பிள்ளையைப் பாதுகாத்தற்கு ஒருவருமில்லை. ஆயினும், நெடுங்காலமாகப் புத்திரனைப்போல் வளர்த்த இந்தக் கீரியைப் புத்திரனைக் காக்கும்படி வைத்துவிட்டுச் செல்வேன்' என்று சிந்தித்து, அப்படியே வைத்துச் சென்றான். அப்போது கிருஷ்ண சர்ப்பம் ஒன்று அப் பிள்ளைக்குச் சமீபத்திலே வந்தது. அதன்வரவைக் கீரிகண்டு விரைந்தோடிப்போய் அதனைக் கொன்றுவிட்டுப் பிராமணன் வருதலை நோக்கி இரத்தந் தோய்ந்த முகத்தோடும், பாதங்களோடும் விரைந்து ஓடிப் போய் அவனுக்குக்கிட்ட விழுந்துருண்டது. அப்பிராமணன் இரத்தந்தோய்ந்த கீரியைக்கண்டு, 'இக்கீரி என் புத்திரனைக் கொன்றுவிட்டது' என்று எண்ணி, ஆராயாது அதனைக் கொன்றான். கொன்றுவிட்டுப் புத்திரன் கிடக்குமிடத்திற்குப் போய் புத்திரன் சுகமாய்க் கிடத்தலையும், சர்ப்பம் கொல்லப்பட்டுக் கிடத்தலையும் கண்டு

பெருந் துக்கமுற்றான். மேலும் காமம், குரோதம், உலோபம், மதம், சந்தோஷம், பெருமை என்னும் அறுவகைக் குணங்களையும் ஒருவன் விட்டுவிடவேண்டும். இவைகளை விட்டால் அவன் சுகம் பெறுவான். பெரிய காரியங்களை நினைத்திருத்தலும், நன்றாக யூகித்தறிதலும், ஆலோசனையை மறைத்திருத்தலும் மந்திரியுடைய உத்தம குணங்களாம்.

“இன்னும் எக்காரியத்தையும் ஆராயாமற் செய்தல் ஆபத்துக்கிடம். காரியங்களை ஆராய்ந்து செய்பவனுக்கு அனுகூலங்களுண்டு. தேவரீர் எனது வார்த்தைப்படி செய்யப்புகின், சந்திசெய்துகொண்டு போகவேண்டும். செய்யப்படவேண்டிய காரியங்களுக்கு உபாயங்கள் நான்கானாலும், அவற்றின் பலன் எண்ணளவுதான்; சித்தியடைதல் சமாதானத்திலேயே இருக்கின்றது” என்றது. அரசன் “இஃது எப்படிச் சீக்கிரத்திலே சம்பவிக்கும்?” என்று கேட்க, மந்திரி சொல்லுகின்றது. “வேந்தே! இது சீக்கிரத்திற் சம்பவிக்கும். பிரிந்தால் மட்குடம் போலத் துர்ச்சனனைப் பொருத்துதல் கூடாது; பொற்குடம் போலச் சற்சனனை விரைந்து பொருத்திக்கொள்ளலாம். அந்த அரசனோ தருமத்தை நன்கறிந்தவன் மந்திரியும் எல்லாவற்றையும் அறிந்தவன். இதனை நான் நன்கறிவேன்” என்றது. அரசன் “உத்தரங்கள் போதும்; இனி எது விருப்பமோ அதனைச் செய்க” என்றது. இதனை ஆலோசித்துக் கிருத்திரம் என்னும் மகா மந்திரி “தக்கபடி செய்யவேண்டும்” என்று சொல்லிக் கோட்டைக்குள்ளே போயிற்று. அப்போது வேய்வு சென்றிருந்த கொக்கு வந்து “மகா மந்திரியாகிய கிருத்திரம் சந்திசெய்யும்படி இங்கே வருகின்றது” என்று இரணிய

கர்ப்பராசனுக்குச் சொல்லிற்று. இராசன் “பின்னரும் வஞ்சிக்கும்படி யாரோ வந்திருக்க வேண்டும்” என்று சொல்லச் சர்வஞ்ஞ மந்திரி சிரித்து “இக்காரியத்திற் சந்தேகமில்லை. குற்றமான மனத்தையுடைய தீயவனுக்கு நல்லவனிலும் சந்தேகந்தான். பாயசத்திலே சூடுகண்ட பாலகன் தயிரையும் ஊதியாற்றி உண்கிறான். தேவரீர் தக்க இரத்தினங்களையும் வஸ்திரங்களையும் ஆயத்தப்படுத்தி அதற்குக் கொடுக்கவேண்டும்” என்றது.

பின்னர், அப்படிச் செய்யப்பட்டபோது, கிருத்திர மந்திரியைச் சக்கரவாக மந்திரி கோட்டை வாயிலிற் போய்ச் சற்காரஞ்செய்து அழைத்துக்கொண்டுபோய் அரசனையுங் காண்பித்து ஆசனத்திலிருத்திற்று. பின்னர் மந்திரியும் அன்னமும் “உமது இச்சைப்படி இராச்சியங்களெல்லாவற்றையும் அனுபவிக்கக்கடவீர்” என்றது. “அப்படியாகுக. இப்போது சித்திரவர்ணன் சந்திசெய்துகொண்டு போகக்கடவது” என்று கிருத்திரம் சொல்லிற்று. இராசாவாகிய அன்னம் “எத்தனைவித சந்திகளிருக்கின்றன?” என்று கேட்க, கிருத்திரம் சொல்லுகின்றது. “ஓரரசன் தன்னிலும் பெலவானாகிய ஒருவனால் வெல்லப்பட்டானாயின், அவனோடுவிரைந்துசந்திசெய்தல் வேண்டும். அந்தச் சந்தியும் கபாலம், உபசாரம்முதலாகப் பலவகைப்படும். இங்கே வெற்றிகொண்டவன் பலவானாகையால் யாதாயினும் வாங்கியன்றிப் போகமாட்டான். ஆதலால் உபகார சந்தியே ஈண்டுச் செய்யத்தக்கது” என்றது.

அரசன் “நீரோ மகா பண்டிதர். செய்யவேண்டிய காரியங்களை எங்களுக்குச் சொல்லுக” என்னக், கிருத்

திரம் சொல்லுகின்றது. "மனத்துயர், பரிதாபம் என்னுமிவைகளினால் விரைந்தழியுஞ் சரீரத்திற்கு நாம் என்ன நாமத்தைக் கொடுப்போம்? சீவியம் அசைவுள்ளதன்றோ? தருமத்தின்பொருட்டும் நீதியின்பொருட்டும் சற்சனர்களோடு சேருதலே தகுதி. ஆயிரம் அஸ்வமேதத்திலும் சத்தியமே மிக்கது. ஆதலால் சத்தியத்தை முன்வைத்துக்கொண்டு இருவர்க்குமிடையிற் சந்தி செய்யவேண்டும்" என்னச், சர்வஞ்ஞமந்திரி "அப்படியாகுக" என்றது. அப்போது, இரத்தினம் வஸ்திரம் முதலியவைகளாலே மந்திரியாகிய தூரதரிசி பூசிக்கப்பட்டு மனமகிழ்ச்சியோடும் சக்கரவாகத்தைக் கூட்டிக்கொண்டு சித்திரவர்ணன் சமீபத்திற் போயிற்று. சித்திரவர்ணன் தூரதரிசியின் வார்த்தையைக் கேட்டு, சர்வஞ்ஞமந்திரியைக் கனம்பண்ணிச் சந்தியை நிலைப்படுத்திக்கொண்டு அன்னத்தின் சமீபத்தில் அனுப்பிற்று. பின்னர்த் தூரதரிசி சித்திரவருணனை நோக்கி "எங்கள் விருப்பம் சித்தியாயிற்று. எங்களுடைய ஸ்தானமாகிய விந்தியமலைக்குப் போகக்கடவோம்" என்று சொல்லிற்று. பின்னர் எல்லாம் தத்தமிடங்களுக்குப் போய்ப் பிரியமான சுகங்களை அனுபவித்துக்கொண் டிருந்தன.

விஷ்ணுசர்மர் இராஜபுத்திரர்களை நோக்கி "இன்னும் நான் எத்தனை உங்களுக்குச் சொல்லவேண்டுமோ அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டார். இராஜபுத்திரர்கள் "ஆரியரே, உமது கிருபையினாலே அரச விவகாரங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டோம்" என்றார்கள். விஷ்ணுசர்மர் "நல்லது" என்று சொல்லி, "வெற்றி பெறுகின்ற அரசர்கள் யாவருக்கும் சந்தி இருக்கக்கடவது. நல்லோருடைய கீர்த்தியானது நெடுங்

காலம் வளர்ந்து பெருகக்கடவது. நீதியானது சூரியனைப் போல என்றும் விளங்கக்கடவது. மகிழ்ச்சியானது நல்லோரிடத்தில் இருக்கக்கடவது. பூமியானது உங்கள் அனுபவத்தின்பொருட்டு நெடுங்காலம் இருக்கக்கடவது" என்று வாழ்த்துக் கூறி முடித்தார்.

அருஞ் சொற் பொருள்

அங்காங்கிபாவம் — அங்கத்துக்கும் அங்கிக்குமுள்ள சம்பந்தத் தன்மை. அங்கம் — உறுப்பு. அங்கி - உறுப்புடையது, பாவம் - தன்மை.

அங்கீகாரம் - உடன்படல், சம்மதித்தல், அங்க - உடன்பாடு காட்டும் ஓர் அவ்வியயம்; காரம் - செயல்.

அசுவமேதம் - ஒருவகை யாகம். அது குதிரையைக் கொன்று செய்வது. அசுவம் - குதிரை, மேதம் - கொல்லல்.

அத்தாணி - அரசன் வந்து பலருங்காண வீற்றிருக்குமிடம்.

அதமர் - இழிந்தோர்.

அதிகாரம் - தலைமை, அதி - மேல், காரம் - செயல்.

அதிதி - விருந்தன், விருந்து - புதுமை, அன் - ஒரு விகுதி,

அதிதி சற்காரம் - விருந்தோம்புதல், அதிதி - விருந்தன், சற்காரம் - நன்கு மதித்தல்.

அநாரியன் - மிலேச்சன், அந் - அன்மை, ஆரியன் - அறிஞன்,

அநிட்டம் - வெறுப்பு, அந் - அன்மை, இட்டம் - பிரியம்,

அநித்தியம் - என்றும் நிலைபேறில்லாதது, அந் - இன்மை, நித்தியம் - என்றும்.

அநுகூலம் - நன்மை.

அநுட்டித்தல் - ஒழுகுதல்.

அநுமதி - சம்மதி.

அபகாரம் - தீய செயல், அப - தவறு, காரம் . செயல்.

அபகீர்த்தி - நிந்தை, அப - தவறு, கீர்த்தி - புகழ்

அபராதம் - குற்றம்.

அபாயம் - இடையூறு, நட்டம்.

அபிடேகம் - ஸ்நானக் கிரியை, ஸ்நானம்.

அபூர்விகம் - முன்னில்லாதது, அ - இன்மை, பூர்விகம் - முன்னுள்ளது.

அமாத்தியன் - மந்திரி, அமா - கிட்ட, திய - ஒரு விகுதி.

அரங்கம் - கூத்து முதலியன பயிலுமிடம்.

அலகு - பறவை மூக்கு.

அவமானம் - இகழ்ச்சி, அவ - நிந்தை, மானம் - பெருமை.

அவா - விருப்பு.

அவைக்களம் - சபை யாகிய இடம்.

ஆக்கிரமம் - கடத்தல்.

ஆக்கிரமித்தல் - மீறுதல், வீரத்தோடெழுதல்.

ஆகாரம் . வடிவம்; உணவு.

ஆச்சிரமம் - முனிவர் வசிக்கும் இடம்.

ஆசனம் - இருத்தல்.

ஆஞ்ஞை - கட்டளை.

ஆபதது - இடையூறு.

ஆரணியம் - காடு.

ஆரியர் - அறிஞர்.

ஆரோக்கியம் - நோய் இன்மை இது அரோகம் என்பதனின்றுவந்த தந்திதாந்தபதம். அ - இன்மை, ரோகம் - நோய்.

இங்கிதம் - கருத்தைவெளிப்படுத்தும் உறுப்பின்தொழில்.

இடையூறு - தீங்கு.

இதோபதேசம் - நன்மைபயக்கும்உபதேசம். இதம் - நன்மை, உபதேசம் - போதித்தல்.

இடபம் - எருது.

இராகு - ஒரு கிரகம்.

இராச்சியம் - இராசாவுடைய ஆளுகைக்குள்ளான இடம், நாடு.

இராமச்சந்திரன் - தசரதன் மகனாகிய இராமபிரான்.

இருதயம் - மனம்.

இலகுபதனன் - மெல்லச்செல்வோன்.

இறுமாப்பு - அகந்தை, மிகு மகிழ்ச்சி.

உங்காரம் - உம்மென்றாரப்பல்.

உத்தரம் - வடக்கு; மறுமொழி.

உதாரம் - கொடை.

உந்நதம் - உயர்ச்சி.

உபகாரம் - உதவி, கொடை.

உபகாரி - உபகாரஞ் செய்வோன்.

உரோமம் - மயிர்.

உற்சாகம் - முயற்சி.

உற்சாகசத்தி - அரசர்க்குரிய மூவகை ஆற்றல்களுளொன்று. அது திடமானமுயற்சி.

ஒற்றன் - வேவுகாரன், தூதன்.

ஓடதி - புல், பூண்டு முதலியன.

கட்டம் - பீடை, பிரயாசம்.

கண்டாமணி - யானைக்கழுத்து மணி.

கபடம் - வஞ்சகம்.

கபாலசந்தி - சமநிலையிலுள்ள இருபக்கத்தாரும் சமாதானம்செய்யும் சந்தி.

கம்பு - சங்கு.

கமண்டலம் - ஒருவகைப் பாத்திரம்.

கயம் - யானை.

கர்த்தரிகை - ஒருவகை ஆயுதம்.

கலகம் - யுத்தம்.

கவலை - துயர்.

கன்மம் - செயல்.

காரியம் - செயல்.

கிராமம் - மருதநிலத்தூர்

கிரீடாவாவி - நீர்விளையாட்டுக்குரிய வாவி.

கிரீவம் - கழுத்து.

கிருகஸ்தர் - இல்வாழ்வோர். கிருகம் - வீடு. ஸ்தர் - இருப்பவர்.

கிருட்டிண சர்ப்பம் - கரும்பாம்பு. கிருட்டிணம் - கறுப்பு. சர்ப்பம் - பாம்பு.

கிருத்திரம் - கழுகு.

குசலம் - வலி; மேன்மை.

குட்டினி - தூர்த்தனுக்கு உதவி செய்யும் பெண்.

குழுவை - கூட்டம்.

கொர்வம் - செருக்கு.

கேது - ஒரு கிரகம்.

கொடுக்கல் - கொடுக்கும் பொருள்.

கோதானம் - பசுவைத் தானங்கொடுத்தல்.

கோள் - குற்றம்.

சகடம் - வண்டி.
சகநம் - அரையின் பிற்பாகம்.
சசம் - முயல்.
சசாங்கன் - சந்திரன். சசம் - முயல். அங்கம் - அடையாளம்.
சகுனி - பறவை.
சஞ்சலம் - துயர்.
சஞ்சீவகன் - நன்குசீவிப்போன்.
சடக்கெனல் - விரைதல்.
சத்திரியன் - அரசன்.
சந்தி - கூடுதல்.
சந்தேகம் - ஐயம்.
சம்பத்து - செல்வம்.
சம்பவம் - நிகழ்ச்சி.
சம்புத்தீவு - நாவலந்தீவு. சம்பு - நாவல், தீவு - கடலுள் விருக்கும் நிலம்.
சமாதாநம் - பகைதணித் திணக்கல்.
சமுதாயம் - கூட்டம்.
சமூலம் - மூலத்தோடு கூடியது.
சர்வஞ்ஞன் - எல்லாமறிந்தவன்.
சாந்திராயணம் - சந்திரனை அநுசரித்துச் செய்யும் ஒரு விரதம். அது சுக்கிலபக்கப் பிரதமை தொடங்கிப் பூரணை வரைக்கும் முதனுள் ஒருகவளமும், இரண்டாம் நாள் இரண்டு கவளமுமாக இப்படியே ஒவ்வொரு கவளம் ஏற்றிஉண்டுவந்து, கிருஷ்ண பக்கப் பிரதமை தொடங்கி அமாவாசை வரைக்கும் ஒவ்வொரு கவளம் குறைத்துண்டு முடிக்கும் விரதம். இது சந்திரன் என்பதினின்று வந்த தத்திதம்.
சாமம் அரசர்க்கு உரிய நால்வகை உபாயங்களுள் ஒன்று; அஃது இன்சொல்லால் வசமாக்கல்.
சாமர்த்தியம் - வலி.
சாயம் - மாலைக்காலம்.
சாரம் - உள்ளீடு.
சாவகாசம் - அவகாசத்தோடு கூடியது. ச - கூட. அவகாசம் - தக்ககாலம்.
சிங்காசனம் - சிங்க வடிவந் தாங்கி நிற்பதுபோல விளங்கும்படி செய்யப்பட்ட ஆசனம்.
சித்திரவர்ணன் — சித்திர நிறமுடையவன்.
சிரச்சேதம் - தலையை வெட்டல். சிரம் - தலை. சேதம் - வெட்டல்.
சீரித்தல் - இடைவிடாதுபழகல்
சீவநம் - உயிர்வாழ்தல்.
சுகிர்ப்பேதம் - நண்பனைப் பிரித்தல். சுகிர்த்து - நண்பன்.
சுவதந்திரம் - சுவாதீநம், பிறன் கீழராகாமை.
சுவர்க்கம் - தேவுலகம்.
சுவாமி - உடையவன்.
சூநியம் - வெறுமை.
செப்பம் - செவ்வை.
சேவகம் - கூலித்தொழில், வீரம்
சேவகன் - கூலித்தொழிலாளி, வீரன்.
சேவல் - ஆண்பறவை.
சேவை - வழிபாடு, தொண்டு.
சொன்னதானம் - பொன்னைத் தானமாகக் கொடுத்தல்.
சோகம் - துயர், சோம்பல்.

சோரன் - கள்ளன்.
சௌரம் - மயிர்களைதல்.
ஞாதி - பிதாவழிச் சுற்றத்தான்.
தகுதி - ஒழுக்கத்தாலாய உயர்வு; நடுவுநிலை; குணம்.
தண்டம் - தடி; தண்டித்தல்.
தயாளம் - இரக்கம்.
தருமசீலன் - தருமஞ் செய்யுங் குணமுடையோன்.
தருமஞானம் - தருமவுணர்ச்சி.
தாசன - அடியவன்.
தானம் - கொடை.
திருத்தி - நிறைவு.
துட்டசங்கம் - தீயோர் கூட்டம். துட்டர் - தீயவர். சங்கம் - கூட்டம்.
துர்ச்சனன் - தீயவன்.
துர்விதி - தீயவிதி.
துராத்துமா - தீயவன்.
துரோகம் - தீங்கு.
துவீபம - தீவு.
தூர்த்தர் - வஞ்சகர், காமுகர்.
தைத்தியர் - அசுரர். அது திதியின் மைந்தர் எனப் பொருள்படுந் தத்திதாந்தம்.
தைரியம் - வீரம், கவலையின்மை.
நகுலம் - கீரி.
நமஸ்காரம் - வணக்கம்.
நாகதந்தம் - யானைக் கொம்பு. நாகம் - யானை. தந்தம் - கொம்பு.
நாராயணன் — விட்டுணுமூர்த்தி.
நாவிதன் - அம்பட்டன்.
நீதிசாத்திரம் - நீதி நூல்.
நீலி - அவரி; துர்க்கை.
நெடுநீர் - தாமதம்.
பகவான் - கடவுள்.
பகவதி - துர்க்கை.
பஞ்சம் - ஐந்து.
பண்டிதர் - அறிஞர்.
பதிகர் - வழிப்போக்கர்.
பயங்கரம் - பயஞ் செய்வது.
பர்க்கடி - பிலக்ஷ மரம்.
பரமேசுரன் - கடவுள். பரம - மேலான. ஈசுரன் - கடவுள்.
பராதீனம் - பிறனுக்குக் கீழ்ப்பட்டது. பரன - பிறன். அதீநம் - கீழ்ப்பட்டது.
பராமுகம் - முகங்கொடாமை.
பரிகாரம் - முற்றக் களைதல்.
பரிசநம் - சூழ்ந்துநிற்கும் சனம்.
பரிதாபம் - வெம்மை; துக்கம். பரி - சூழ. தாபம் - வெம்மை.
பரிபாலித்தல் - பாதுகாத்தல்.
பரிவாரம் - சூழ்ந்து நிற்குஞ் சனம்.
பரோபகாரம் - பிறர்க் குதவி செய்தல். பரன் - பிறன். உபகாரம் - உதவி.
பாகம் - பங்கு.
பாசறை - பகைமேற் சென்றோர் உறைவிடம்.
பாயசம் - பாற்சோறு.
பானம் - குடித்தல்.
பானீயம் - நீர்.
பானுவாரம் - ஞாயிற்றுக் கிழமை.
பிரசவம் - பிறத்தல்.
பிரதானி - மிக்கவன்.
பிரபு - அதிபதி,
பிரபுசத்தி - அரசர்க்குரிய மூவகை யாற்றல்களுள் ஒன்று; அஃது அதிபதிக்கு இயல்

பாயுள்ள வலி. பிரபு - அதிபதி. சக்தி - வலி.
பிரபை - ஒளி.
பிரமக்கொலை - பிராமணக் கொலை.
பிரமசரியம் - குருவின் கட்டளை தவறாது நின்று வேதமோதல் முதலியன செய்யும் மாணவர் நிலை.
பிரமாணம் - அளவைக் கருவி.
பிரவேசித்தல் - உட்புகுதல்.
பிராணி - உயிர்.
பிராயச்சித்தம்—சுத்திக்கிரியை.
பிரீதி - பிரியம்.
பேடை - பெண் பறவை.
பேதம் - வேறுபடுத்தல்.
மஞ்சனம் - முழுக்கு.
மண்டூகம் - தவளை.
மத்தம் - மயக்கம்.
மத்தியஸ்தர் - நடுவினிற்போர்- மத்தியம்-நடு.ஸ்தர்-நிற்பவர்.
மதம் - செருக்கு.
மதுரம் - இனிமை.
மந்திரசத்தி - அரசர்க்குரிய மூவகை யாற்றல்களுள் ஒன்று. அஃது ஆலோசனையின் வலி.
மந்திரம் - ஆலோசனை.
மந்திரித்துவம் - மந்திரிக்குரிய தன்மை. மந்திரி - அமைச்சன். துவம் - தன்மை.
மயூரம் - மயில்.
மாரி - மழை.
மித்திரலாபம் - மித்திரனை யடைதல்.
மித்திரன் - நண்பன்.
மிருகம் - மான்.
மிலேச்சன் - அறிவில்லான்.
முக்கியம் - தலைமை.
முகராகம் - முகநிறம்.
முத்தி - மோக்ஷம்.
முற்றுகை - வளைத்தல்
மேகவர்ணன் - மேகநிறமுடையவன்.
மௌனம் - பேசாமை.
யானம் - போதல்.
யுத்தம் - போர்ச்செயல்
யூகித்தல் - ஆராய்தல்.
வணிகன் - செட்டி.
வத்து - பொருள்-
வயோதிகன் - முதியோன்.
வருணம் - நிறம்.
வலாற்காரம் - வன்செய்கை.
வனம் - காடு.
வனவாசி—காட்டில்வசிப்போன்
வாக்குத்தோஷம்-சொற்குற்றம்
வாங்கல் - வாங்கும் பொருள்.
வாசம் - இருக்கை.
வாஞ்சை - பிரியம்.
வாயசம் - காகம்.
வாயிலாளன் - துவாரபாலகன்.
வார்த்தை - சொல்.
வாவி - குளம்.
விக்கிரகம் - பிரித்தல். யுத்தம்
விகடம் - விகாரம்.
விகாரம் - வேறுபாடு.
விசயம் - வெற்றி.
விசுவாசம் - நம்பிக்கை.
வித்துவான் - அறிஞன்.
விபீடணன் - இராவணன் தம்பி.
விம்பம் - உருவம்.
வியசனம் - துயர்.
வியவகாரம் - வழக்கு.
விருத்தன் - வயோதிகன்
வேதியன் -பிராமணன்.

35711

PRINTED AT
THE THIRUMAKAL PRESS
CHUNNAKAM